உதயன்
32°/26°
பக்கங்கள்: 24
■ பதிப்பு: ★
■ விலை: ரூபா 25
■ சுடர் 28
■ கதிர் 124
■ வள்ளுவர் ஆண்டு 2044
■ பங்குனி 17, சனி 30.03.2013
UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

## நேற்று வெப்பம் அகோரம்

யாழ்ப்பாணம், மார்ச் 30
யாழ்.குடாநாட்டில் சில நாள்களாக வெப்பம் அதிகரித்துள்ள நிலையில் நேற்று உச்ச

பார்க்க பக்கம் 04

## பதியாத விடுதிகளை இழுத்து மூட உத்தரவு

### குடாநாட்டில் அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 30
யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் பதிவுசெய்யப்படாததும் வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரம் பெறாதும் இயங்கிவரும் விடுதிகள் அனைத்தும் சட்டநடவடிக்கை மூலம் இழுத்து மூடப்படவுள்ளன என்று யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட விடுதிகள் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்டிருப்பதோடு அந்த வருடத்துக்கான வியாபார அனுமதிப் பத்திரமும் பெற்றிருத்தல் வேண்டும். இந்த விதிமுறை விடுதிகளுக்கு மாத்திரமின்றி வியாபார நிலையங்களுக்கும் பொருந்தும்.

யாழ்.நகரில் நேற்று முன்தினம் விடுதி ஒன்று முற்றுகை இடப்பட்டது. இது சட்டவிரோதமாக

பார்க்க பக்கம் 04

## திட்டம் தீட்டி எதிராகச் செயற்படக்கூடிய மாகாணத்தின் கருணை அவசியமில்லை

### வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் குறித்து கோத்தபாய கருத்து

கொழும்பு,மார்ச் 30
''எமது தலைமைத்துவத்தை நோக்கி ஆயுதத்தைக் குறிவைத்த ஒரு நிர்வாகத்தை நாம் அனுமதிக்க முடியுமா? திட்டம் தீட்டி எதிராக செயல்படும் ஒரு மாகாண நிர்வாகத்தின் கருணையில் செயல்படுவதற்கு நாம் தயாராக இல்லை. வடக்கில் அல்லது கிழக்கில் பகைமை கொண்ட மாகாண நிர்வாகம் ஒன்று உருவாகுமானால் போருக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் தேசிய மீள் இணக்கத்துக்கு அது பாதகமாக அமையும்.''

- இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

''அப்படியான ஒரு நிர்வாகமானது தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்பட்ட மரபு ரீதியிலான இராணுவ சவாலுக்கு இணையானதாகவே இருக்கும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சில மேற்கு நாடுகள் மற்றும் பிரிட்டனில் நிலைகொண்டுள்ள உலகத் தமிழர் பேரவையால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் விடுதலைப்

பார்க்க பக்கம் 04



## பொது நலவாய மாநாடு நடந்தால் ஆட்சி மாறும்

### பிரிட்டிஷ் மகாராணியும் வரார்; அடித்துக் கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 30
பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடப்பது உறுதி என்று அரசு தெரிவித்து வரும் நிலையில், அந்த மாநாடு இலங்கையில் நடந்தால் நாடு பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி. பிரிட்டிஷ் மகாராணி இந்த மாநாட்டில் பங்கேற்கமாட்டார் என்றும், மணமகள் இல்லாத திருமணத்தைத்தான் அரசு நடத்தப்போகிறது என்றும் அந்தக் கட்சி தெரிவித்தது.

''இலங்கையில் இடம்பெறும் பொது

பார்க்க பக்கம் 04

## அரசு கவிழாது 8

## பல்கலைக் கழகம் மீது மோட்டார் தாக்கு 9

## வங்கப் புலிகளிடம் வீழ்ந்த சிங்கங்கள் 23

## வடக்குத் தேர்தல் நடந்தால் இயல்பு நிலைமை வரலாம்

### யாழ். வந்த பிரிட்டிஷ் இராஜதந்திரி நம்பிக்கை

கொழும்பு,மார்ச் 30
வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதன் ஊடாகவே அங்கு இயல்பு நிலைமையை கட்டியெழுப்ப முடியும் என்று நம்புகிறோம் என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கான இயக்குநர் நீல் கொம் ரன் தெரிவித்தார்.

புதன்கிழமை யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்த நீல் கொம்ரன், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் ஐ.நா. முகவர் அமைப்புகள்

பார்க்க பக்கம் 04

## அரச அராஜகம் நீடித்தால் வீணான விபரீதம் ஏற்படும்

### சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 30
''தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமிப்பதையும், அவர்களை அச்சுறுத்தும் விதத்தில் அராஜகங்கள் புரிவதையும் அரச படைகளும், சிங்கள மக்களும் உடன் கைவிட வேண்டும். இல்லையேல் வீண்விபரீதங்களைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் எச்சரித்துள்ளார்.

மூதூர் பிரதேசத்துக்குட்பட்ட படுகாடு, முதலைமடு ஆகிய பகுதிகளில் தமிழ் மக்கள் விவசாயம் செய்த காணிகளை சிங்கள மக்கள் ஆக்கிரமித்து விவசாயம் செய்கின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட பல கிராமங்களைச் சேர்ந்த தமிழ் விவசாயிகளை நேற்று நண்பகல் கங்குவேலியில்

பார்க்க பக்கம் 04

## இலங்கை தூதுவரை நாடு கடத்துக

### ஜெயலலிதா வலியுறுத்து

சென்னை, மார்ச் 30
இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசத்தை நாடு கடத்துமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த 71 வீதமானவர்கள் வட இந்தியாவைச் சேர்ந்த - கலிங்க தேச - மக்கள் என

பார்க்க பக்கம் 04

## இங்கே பொங்க முடியாது ஓடோடிப் போய் விடுங்கள்

### நாயாறு சென்ற தமிழர்கள் விரட்டியடிப்பு

முல்லைத்தீவு,மார்ச் 30
முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறுப் பகுதியில் அமைந்துள்ள நீராவியேற்றப் பிள்ளையார் கோயிலில் தமது நேர்த்திக் கடன் செலுத்தச் சென்ற தமிழ் மக்களை ''இங்கே வர வேண்டாம் ஓடிப் போங்கள்'' என்றவாறு இராணுவத்தினர் விரட்டியடித்த சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

நாயாறுப் பாலத்துக்கும் கொக்குத்தொடுவாய்க்கும் இடையிலுள்ள நீராவியேற்றப் பிள்ளையார் கோயிலுக்கு பங்குனி உற்சவத்தை முன்னிட்டு 15 தொடக்கம் 20 வரையிலான குடும்பங்கள் நேற்று நண்பகல் சென்றன கோயில் பொங்கலுக்குரிய ஆயத்தங்களை அந்தக் குடும்பத்தினர் மேற்கொண்டிருந்தனர். தமது நேர்த்தியைச் செலுத்துவதற்காகவே அவர்கள் அங்கு சென்றிருந்தனர். திடீரென அங்கு இராணுவத்தினர் நால்வர்

பார்க்க பக்கம் 04

## தமிழ்நாடு சட்டசபைத் தீர்மானம் இந்தியாவின் பிரதிபலிப்பு அல்ல

### வெளிவிவகார அமைச்சர் குர்ஷித் தெரிவிப்பு

புதுடில்லி, மார்ச் 30
தமிழ்நாடு சட்ட சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏற்கத்தக்கது அல்ல என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பார்க்க பக்கம் 04

## தமிழக ஆட்சியை கலைக்க வலியுறுத்து

### ஹெல உறுமய விடுத்தது

கொழும்பு, மார்ச் 30
வரம்புமீறிச் செயற்படும் தமிழ்நாட்டு அரசை உடன் கலைப்பதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என

பார்க்க பக்கம் 04

## தமிழக மாணவர் எழுச்சி; மன்னார் ஆயர் வரவேற்பு

### தாக்குதலுக்கு கண்டனம்

கொழும்பு, மார்ச் 30
தமிழ் நாட்டில் மாணவர் சமுதாயத்தால் முன்னெடுக்கப்படும் அறநெறிப் போராட்டங்களை நன்றியோடு வரவேற்

பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழம் இப்போது சாத்தியமானதல்ல

## ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் கூறுகிறார்

சென்னை,மார்ச் 30

தமிழீழம் தொடர்பாகப் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனத் தமிழக சட்டசபை எடுத்த தீர்மானம் வரவேற்கத்தக்கது. ஆனால், தனித் தமிழ் ஈழம் என்பது இந்தக் காலகட்டத்தில் சாத்தியமானது அல்ல என்று காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் ஒருவரான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஈரோட்டில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று மத்திய அரசுக்கு வலியுறுத்துவோம். இலங்கை வீரர்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே விளையாடக் கூடாது என்று கருதுகிறோம்.

இலங்கைத் தூதுவர் பிரசாத் கரியவாசம், வடக்கு தெற்கு விவகாரம் தொடர்பாக உள்நோக்கத்துடன் கூறியிருந்தால் அவரை வெளியேற்ற மத்திய அரசு தயங்கக் கூடாது.

வைகோ போன்ற அரசியல்வாதிகள் அரசியல் இலாபத்துக்காக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் குளிர் காய்கிறார்கள். அவர்களால் எந்த நன்மையும் ஏற்பட்டு விடாது.

இலங்கைக்குப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இது, உடனடியாகச் சாத்தியமாகும் விடயமில்லை. காரணம் இந்தியாவுக்கு இறக்குமதியாகும் பொருள்களில் பெரும்பாலானவை இலங்கை மூலமாகத்தான் வருகின்றன. அதுபோல், இந்தியாவில்



இருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் இலங்கை வழியாகவே செல்கின்றன.

தமிழக சட்டசபையில் ஈழம் தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானத்தின் உணர்வுகளை மதிக்கிறோம், ஏற்கிறோம். ஆனால், தனித் தமிழ் ஈழம் என்று கூறப்படுவதை ஏற்க முடியாது. அது இந்தக் காலகட்டத்தில் சரியான தீர்வாக அமையாது.

மற்ற உலக நாடுகளின் துணையுடன் இந்தியா, இலங்கைக்கு நெருக்கடி கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விடுத்து, நாம் நேரடியாக இலங்கை விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கக் கூடாது.

இலங்கை விவகாரத்தில் மத்திய அரசு மீது கருணாநிதி படுகின்ற வேதனை எங்களுக்குப் புரிகிறது. இதில், மத்திய அரசு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து கொண்டிருப்பது, கருணாநிதிக்கு நன்றாகவே தெரியும். அவர், தமிழ்நாட்டின் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப விலகல் முடிவை எடுத்தார்- என்றார். (த)

# இலங்கை ஆபத்தான நாடு

## சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

லண்டன்,மார்ச் 30

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட குற்றப் பிரேரணை மற்றும் அவர் பதவி நீக்கப்பட்ட விதம் என்பன, இலங்கை ஓர் ஆபத்தான நாடு என்பதை உறுதிப்படுத்தியுள்ளதாகச் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் நிறுவனம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் பிரதம நீதியரசர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமையானது, சட்டத்துக்குப் புறம்பான செயலாகும்.

அத்துடன் சட்டத்தின் மீது பொதுமக்களுக்கு உள்ள நம்பிக்கையை இது குறைக்கும் செயற்பாடாகும். இந்தச் சம்பவம் தொடர்பில் எமது நிறுவனம் விசாரணையை நடத்தமுயன்ற போதும் அதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கவில்லை- என்றுள்ளது. (த)

# வெளிநாட்டு இராஜதந்திரிகள் இவ்வாரம் மன்னார் பயணம்

கொழும்பு,மார்ச் 30

கொழும்பை தளமாகக் கொண்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் குழுவொன்று இந்தவார இறுதியில் மன்னாருக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் அடங்கிய குழுவினரே மன்னாருக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தத் தூதுக் குழுவில் பலஸ்தீனம், பாகிஸ்தான், ஈரான், ஈராக் மற்றும் மலேசியா உள்ளிட்ட முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களே உள்ளடங்குகின்றனர்.

அமைச்சர் றிசாத் பதியுதீனின் அழைப்பின் பேரில் செல்லும் இந்த இராஜதந்திரிகள் தூதுக்குழுவுக்கு பலஸ்தீனத் தூதுவரும் கொழும்பிலுள்ள இராஜதந்திரிகள் அமைப்பின் தலைவருமான கலாநிதி அன்வர் அல் அகா தலைமை தாங்குகின்றார்.

அரசினால் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றப் பட்டுள்ள செயற்பாடுகளை நேரில் அவதானிப்பதுடன் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களையும் இவர்கள் சந்திக்கவுள்ளனர். (த)

# கச்சதீவு விவகாரம் தேவையற்ற ஒன்று

## கூறுகிறார் இலங்கைத் தூதுவர்

புதுடில்லி,மார்ச் 30

கச்சதீவு விவகாரத்தில் கடந்த 1974 ஆம்,1976 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களின்படியே அனைத்தும் நடைபெற்று வருவதால் அந்தப் பிரச்சினையை மீண்டும் எழுப்பப் வேண்டிய அவசியமில்லை என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம் கூறியுள்ளார்.



சிங்களவர்கள் இந்தியாவின் ஒடிஷா,வங்காளத்தில் இருந்து வந்தவர்கள் என்ற கருத்தை இலங்கைத் தூதுவர் காரியவாசம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இது வரலாற்று உண்மை எனக் கூறிய அவர், தமிழர்களும், சிங்களவர்களும் இந்தியாவுடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவித்தார்.

தமிழர்களுக்கு இந்தியாவின் தென் பகுதியிலும், சிங்களவர்களுக்கு வடகிழக்கு பகுதியோடும் தொடர்பு இருக்கிறது. இதை மறுக்க முடியாது.கலிங்கா, ஒடிஷாவில் இருந்து கி.பி. 6ஆம் நூற்றாண்டில் சிங்களவர்கள் இலங்கைக்கு வந்து குடியேறினர். அதன் பிறகு கேரளா, தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தனர். அப்படி குடியேறியவர்களுக்கு அப்போதே அரசாளும் உரிமை இருந்தது. இப்போது அனைவரும் இலங்கைக் குடிமகன்களாக இருக்கிறோம்.

சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல் போட்டிகளில், இலங்கை வீரர்கள் பங்கேற்க எதிர்ப்புத் தெரிவித்திருப்பது துரதிர்ஷ்டவசமானது. விளையாட்டுடன் அரசியலை இணைத்துப் பார்க்கக் கூடாது எனக் காரியவாசம் மேலும் தெரிவித்தார். (த)

# சிகை அலங்கரிப்பு நிலையமல்ல எனது கட்சியின் வாசல் கதவுகள்

## இப்படிக் கூறுகிறார் பொன்சேகா



கொழும்பு,மார்ச் 30

எனது கட்சியின் வாசல் கதவுகள் அனைவருக்காகவும் திறந்து இருக்கும். ஆனால், அது ஏனைய கட்சிகளைப் போன்று சிகை அலங்கார நிலையத்தின் கதவுகளாக இருக்காது என, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:-

எங்கள் கட்சியின் கதவுகள் அனைவருக்காகவும் திறந்து இருக்கும். எமது கட்சிக்கான கொள்கைகளின் முக்கியத்துவம் தெரிந்த அனைவரினாலும் அதில் இணைந்துகொள்ள முடியும்.ஆனால், எனது கட்சியின் கதவானது சிகை அலங்கார நிலையத்தின் கதவை போன்றது அல்ல.

சிகை அலங்கார நிலையத்தில் விரும்பிய நேரத்தில் தொழிலை பெற்றுகொள்வதும் பின்பு வேறு ஒரு தொழிலைத் தேடிச் செல்லும் நிலையும் காணப்படுகின்றது. எமது கட்சி இத்தகைய கொள்கைகளைக் கொண்டதல்ல என்றார். (த)

# கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்கு தனியாகச் சென்ற 3 சிறுவர்கள் மீட்பு

வவுனியா,மார்ச் 30

பெற்றோர்களுக்குத் தெரியாமல் கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்குத் தனியாகச் சென்ற மூன்று சிறுவர்களைக் கண்டுபிடித்த பொலிஸார், ஆசிரியர் ஒருவரிடம் ஒப்படைத்ததாக வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜோசப் ஜெயக்கெனடி தெரிவித்தார்.

10 வயது மதிக்கத்தக்க சிறுவர்கள் மூவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் வீதியில் அலைந்து திரிந்ததைக் கண்டு சந்தேகமடைந்த வவுனியா குட்செட் வீதி பொலிஸ் காவலரணிலுள்ள பொலிஸார், இவர்களை விசாரித்துள்ளனர்.

இதன்போது இந்தச் சிறுவர்கள் மூவரும் தங்களது பெற்றோர்களுக்குத் தெரியாமல் கிளிநொச்சியிலிருந்து பஸ்ஸில் வவுனியாவுக்குச் சென்றமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து வவுனியாவிலுள்ள சிறுவர் காப்பகமொன்றில் இந்தச் சிறுவர்களைத் தற்காலிகமாகத் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

இந்நிலையில், இந்தச் சிறுவர்கள் மூவரும் தங்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் வவுனியாவில் உள்ளதாகவும் அவரிடம் தங்களை ஒப்படைக்குமாறும் பொலிஸாரிடம் கோரியுள்ளனர்.

இந்த ஆசிரியரை உடனடியாக வரவழைத்த பொலிஸார், இந்தச் சிறுவர்கள் மூவரையும் ஆசிரியரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சிறுவர்கள் மூவரையும் பாதுகாப்பாக ஆசிரியரிடம் ஒப்படைத்ததாகப் பொலிஸார் தன்னிடம் கூறியதாக, வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி கூறினார். தற்போது இந்தச் சிறுவர்கள் மூவரையும் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# இலங்கையில் மதச் சுதந்திரம் மீறப்படுகிறது

கொழும்பு,மார்ச் 30

கிறிஸ்தவர்களுக்கு எதிராக திடீரென்று மேற்கொள்ளப்படும் வன்முறைகள் குறித்துத் தேசிய கிறிஸ்தவ புலமை அமைப்பு தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

அண்மைக் காலமாக இலங்கையில் கிறிஸ்தவ நிறுவனங்கள் மீது பௌத்த அடிப்படைவாதிகளால் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறாக 2013 ஆம் ஆண்டில் மாத்திரம் 23 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில் குறித்த சம்பவங்கள் தொடர்பில் பிழையான பொய்யான தகவல்களைச் சில ஊடகங்கள் பிரச்சாரம் செய்வதாக கிறிஸ்தவ அமைப்பு குற்றஞ் சுமத்தியுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் பஸ்களில் பயணிகளுக்கு

# மீதிப் பணம் வழங்காதுவிட்டால் பஸ் சங்கங்களில் முறையிடலாம்

*யாழ்ப்பாணம், மார்ச் 30*

*தனியார் பஸ்களில் பயணிகளுக்கு நடத்துநர்கள் மீதிப்பணம் வழங்காமல் விட்டால் அது தொடர்பாக பஸ் சங்கங்களில் முறையிடலாம். இது குறித்து முறையிடப்படும் பட்சத்தில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தனியார் பஸ் சங்கத்தின் உபதலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.*

தனியார் பஸ்களில் பயணிகள் போக்குவரத்துக் கட்டணங்களைக் கொடுக்கும் போது சில்லறை இல்லை எனக் காரணம் காட்டி நடத்துநர்கள் மீதிப் பணத்தைக் கொடுப்பதில்லை.

இதன் காரணமாக பயணிகள் போக்குவரத்துகளின் போது அதிகளவு பணத்தை விரயம் செய்ய வேண்டியுள்ளது.

நடத்துநர்கள் மீதிப் பணம் பயணிகளுக்கு வழங்காவிட்டால் பஸ் சங்கத்தின் நடவடிக்கை என்ன என்பது தொடர்பாக அவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனியார் பஸ்களில் பயணிகளின் போக்குவரத்துக் கட்டணங்களுக்கு அதிகமாகப் பணம் பெறப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

எனினும் நடத்துநர்கள் இதனைப் பின்பற்றாவிட்டால் சங்கம் நடவடிக்கையை மேற்கொள்ளும்

இதனால் பாதிக்கப்படும் பயணிகள் நடத்துநரால் வழங்கப்பட்ட பயணச் சிட்டையுடன் தாம் சார்ந்த பிரதேசத்தின் தனியார் பஸ் சங்கத்திடம் முறைப்பாடுகளைக் கொடுக்கலாம்.

அதற்குரிய நடவடிக்கைகளை தனியார் பஸ் சங்கம் விசாரணைப் பிரிவுக்கு எடுத்து சம்பந்தப்பட்ட நடத்துநருடன் விசாரணைகளை மேற்கொண்டு பயணிக்குரிய மீதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும்.

நடத்துநர் மீதிப்பணம் கொடுக்கத் தவறி இருந்தால் நடத்துநர் 10 நாள்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்படுவார்.

எனவே, பயணிகளுக்கு நடத்துநர் மீதிப்பணம் கொடுக்கத் தவறினால் நடத்துநருடன் மேலதிகமாக முரண்படாமல் சங்கத்துடன் தொடர்பு கொண்டு தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம்.- என்று மேலும் தெரிவித்தார். (ம-14)

## சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு

# விடுமுறை நாள்களில் வர்த்தகத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 30

சித்திரைப் புது வருட தினத்தை முன்னிட்டு விடுமுறை நாள்களில் நகரில் உள்ள வியாபார நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று வட மாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புது வருடப் பிறப்பு, தீபாவளி, நத்தார் போன்ற திருநாள்களுக்காக வர்த்தக நிலையங்கள் விடுமுறை நாள்களில் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக திருநாள் கொண்டாட்ட விழாவுக்கு முன்பு 14 நாள்களுக்குள் வரும் சகல விடுமுறை நாள்களிலும் வர்த்தக நிலையங்களை முழுமையாக திறப்பதற்கு தொழில் திணைக்களம் அனுமதியை வழங்கியுள்ளது.

இதேவேளை, நகரில் உள்ள ஒரு சில வர்த்தக நிலையங்கள் வர்த்தக விடுமுறை நாள்களிலும் திறக்கப்படுவதாக தொழில் திணைக்களத்துக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாறு விடுமுறை நாள்களில் தொழில் திணைக்களத்தின் அறிவுறுத்தலையும் மீறி திறக்கப்படும் வியாபார நிலையங்கள் மீது தொழில் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.- என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-17)

# இருளில் மூழ்கும் கிராமங்கள்; ஒளியூட்டுமாறு மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, மார்ச் 30

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளில் பல இடங்களுக்கு இன்னமும் மின்சார வசதி ஏற்படுத்தப்படவில்லை.

கடந்த வருடம் மீள் குடியமர்வு இடம்பெற்ற பிரிவுகளில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்விநியோகம் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டது.

எனினும் அது தொடர்பான எந்தவொரு ஆரம்ப நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. மின்சார பாவனை தற்போது அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகி விட்டதால் அதனை மக்கள் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் ஏகோபித்த குரலில் தெரிவித்தனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீள்குடியமர்ந்த எழுதுமட்டுவாழ் தெற்கு, கிளாலி, கரம்பகம், ஒட்டுவெளி, தனங்களப்பு, மறவன்புலோ பிரிவின் ஒரு பகுதி போன்ற இடங்களில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது வீடுகளுக்கு மின்சாரம் வழங்குமாறு கோரி வருகின்ற போதிலும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை.

பிரதேசத்தின் பல வீதிகளில் மின்கம்பங்கள் நடப்பட்டு மின்விநியோகம் வழங்கப்படுகின்ற போதிலும் வீதிகளுடன் இணைந்த ஒழுங்கைகள் பலவற்றுக்கு மின்விநியோகம் வழங்கப்படவில்லை.

பொதுமக்களின் ஒட்டுமொத்த கோரிக்கைகளின் பிரகாரம் தென்மராட்சியின் பல கிராமங்கள் இன்னமும் மின்சாரம் கிடைக்காத நிலையில் உள்ளன என்பது தெளிவாகின.


இதனைச் செவிமடுத்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சில்வெஸ்திரி அலென்ரின், மக்களின் கோரிக்கைகளை விரைவில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார். (ம-9)

### பஸ் சாரதியை தாக்கிய நடத்துநர் 10 நாள் நிறுத்தம்

தெல்லிப்பழை மற்றும் அளவெட்டி தனியார் பஸ்களின் சாரதி-நடத்துநர்களுக்கு இடையில் இடம்பெற்ற முறுகலை அடுத்து சாரதியைத் தாக்கிய நடத்துநர் 10 நாள்களுக்கு சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று தனியார் பஸ் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 23 ஆம் திகதி அளவெட்டி - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் 768 மார்க்க தனியார் பஸ் சாரதிக்கும், தெல்லிப்பழை-யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் 769 மார்க்க தனியார் பஸ் சாரதிக்கும் தாவடிச் சந்திப் பகுதியில் வைத்து நேரம் தொடர்பில் முரண்பாடு ஏற்பட்டது. அதை அடுத்து 769 இலக்க பஸ் நடத்துநர், 768 இலக்க பஸ் சாரதியைத் தாக்கியதுடன் 768 இலக்க பஸ்ஸின் டயரைக் குத்திச் சேதமாக்கியுள்ளார்.

இதனால்பஸ்ஸில்பயணித்த பயணிகள் அந்தரித்ததுடன் வேறு பஸ்களில் பயணிக்க நேரிட்டது. இதற்கமைவாக பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியும் சாரதிகளைத் தாக்கியமைக்காகவும் குறித்த நடத்துநர் 10 நாள்களுக்கு கடமையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-14)



யாழ். தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் விழா நேற்று நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துணைத் தலைவரும் யாழ். தமிழ்ச் சங்கத்தின் உபதலைவருமான பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மத்திய கல்லூரி பகுதித் தலைவர் ப.திருஞானசம்பந்தன் வரவேற்புரையையும் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் கி.வேல்நம்பி தொடக்கவுரையையும் நிகழ்த்தினர். யாழ். தமிழ்ச் சங்கத்தின் உபதலைவரும் யாழ். பல்கலைக்கழகக் கல்வியியற் துறை பேராசிரியருமான மா.சின்னத்தம்பி தலைமையில் பன்முகநோக்கில் வள்ளுவம் எனும் தலைப்பில் கருத்தரங்கமும் யாழ். தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் இரா.செல்வவடிவேல் தலைமையில் முக்கோணப் பட்டிமன்றமும் நடைபெற்றன. (ம-13)

### நிகழ்வுகள் இன்று

**அபிவிருத்திக் கூட்டம்**

வடமராட்சி, விக்னேஸ்வரா கல்லூரியின் கல்வி அபிவிருத்திக் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு அதிபர் க.கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-253)

**பொதுக்கூட்டம்**

யாழ். பிரதேச செயலக டகிராங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் காலை 9.30 மணிக்கு யாழ். புனித அடைக்கல மாதா ஆலய ஜெரோ மண்டபத்தில் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும். (எ)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் பொலிஸ் பிரிவு ஆரம்பம்

வலி. வடக்கு, மார்ச் 30

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களின் நன்மை கருதி தெல்லிப்பழை பொலிஸாரின் சேவை வைத்தியசாலைக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் முன்புற வாசலில் அமைக்கப்பட்டுள்ள அறையில் பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் தமது பணிகளை ஆரம்பித்தனர்.

விபத்துகள் மற்றும் திடீர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் முறைப்பாடுகளை வைத்தியசாலையில் வைத்து பெற்றுக் கொள்ளவும் உடனடியான செயல்பாடுகளை மேற்கொள்ளும் வகையிலும் இந்த பொலிஸ் பிரிவு வைத்தியசாலையில் இயங்கத் தொடங்கியுள்ளது.

வைத்தியசாலைக்கு வந்து அடாவடித்தனம் செய்பவர்களின் செயற்பாடுகளையும் கூட இந்தப் பொலிஸ் பிரிவு வைத்தியசாலையில் இயங்குவதன் மூலம் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் எனவும் பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்தப் பொலிஸ் பிரிவில் 24 மணி நேர சேவை இடம் பெறுவதுடன் தமிழ் தெரிந்த பொலிஸாரும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# நெடுந்தீவுக்கு குடிதண்ணீர், மலசலகூட வசதிகள் ஏற்படுத்தல் குறித்த ஆராய்வு

நெடுந்தீவு, மார்ச் 30

நெடுந்தீவு மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் செய்தல் மற்றும் மலசல கூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

சமூக மயப்படுத்தப்பட்ட கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் தொடர்பாக நீர் வழங்கல் திட்ட அதிகாரிகள் நெடுந்தீவின் சாராப்பிட்டி மணல்துறைப் பகுதிகளுக்குச் சென்று இந்த விடயங்கள் குறித்துப் பார்வையிட்டனர்.

**இரணைமடு தண்ணீரை பாஜ் மூலம் இங்கு எடுத்து வந்து குழாய் மூலமும் பவுசர் மூலமும் மக்களுக்கு விநியோகிப்பது குறித்து ஆராயப்பட்டது.**

கடந்த புதன்கிழமை இங்கு இந்த அதிகாரிகள் வருகை தந்தனர். இரணைமடு தண்ணீரை பாஜ் மூலம் இங்கு எடுத்து வந்து குழாய் மூலமும் பவுசர் மூலமும் மக்களுக்கு விநியோகிப்பது குறித்து இதன்போது ஆராயப்பட்டது.

சாராப்பிட்டியில் இருந்து நெழுவினி பிள்ளையார் கோயில்வரை நீர் வழங்குவதற்கென இருபது மீற்றர் கியூப் தாங்கி ஒன்று அமைக்கப்படும்.

பாஜ் மூலம் எடுத்து வரப்படும் நீர் நிலத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள நீர்த் தாங்கியில் இருந்து தொட்டிகளுக்கு வழங்கப்படும். இதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நெடுந்தீவில் உள்ள பொது அமைப்புகள் பொது மக்களுடன் கலந்துரையாடி முடிவு செய்யப்படும் எனவும் திட்ட அதிகாரி குறிப்பிட்டார்.

இதுவரை மலசலகூடம் இல்லாத குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சுகாதார திட்டத்தின் கீழ் சுமார் இருநூற்றி ஐம்பது மலசல கூடங்களை அமைப்பதற்கும் ஆலோசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு தீவிரம்; நேற்றும் ஐவர் யாழ்.ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 30

குடாநாட்டில் டெங்குக் காய்ச்சல் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. நேற்றும் டெங்கினால் பாதிக்கப்பட்ட ஐவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-4)

## இலங்கை...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

பிரசாத் காரியவசம் கூறியுள்ளார் என்று ஜெய லலிதா குற்றஞ்சாட்டியுள்ளார். எனவே அவரை உடனடியாக நாடுகடத்த வேண்டும் என மத்திய அரசிடம் ஜெயலலிதா கோரியுள்ளார்.

அத்துடன், இலங்கைக்கு இந்தியா பொருள் களை ஏற்றுமதி செய்யக்கூடாது எனவும் அவர் கூறியுள்ளார். தமிழக முதல்வர் ஜெயலலிதா வின் கோரிக்கைகள் தொடர்பில் இந்திய மத் திய அரசு பதில் எதனையும் அளிக்கவில்லை. (த)

## தமிழக ஆட்சி...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

வலியுறுத்தும் அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, அவ்வாறு மத்திய அரசு செய்யாவிட்டால் இந்தியாவுடனான உறவுகளை இலங்கை முறித்துக்கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழக சட்டசபையில் இலங்கை அர சுக்கு எதிராக முதல்வர் ஜெயலலிதா நிறை வேற்றிய தீர்மானங்களைப் பட்டியல் போட் டுக்காட்டிய ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, தமிழக அரசு எல்லை மீறிச் செயற்படுகின்றது என்று குற்றஞ்சாட்டினார்.

''இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா தீர்மானம் கொண்டுவர வேண்டும் எனத் தீர்மானம் நிறை வேற்றிய ஜெயலலிதா, சர்வதேச விசார ணையை வலியுறுத்தி இந்திய நாடாளுமன் றத்தில் தீர்மானம் கொண்டுவரவேண்டும் என்றும் தமிழக சட்டசபையில் வலியுறுத்தினார்.

அத்துடன், பொதுநலவாய நாடுகள் அமைப்பின் மாநாடு இலங்கையில் நடை பெறுவதற்கு எதிர்ப்பை வெளியிட்ட அவர், தற்போது எமது விளையாட்டு வீரர்கள் சென்னையில் விளையாடுவதற்கு அனுமதி மறுத்துள்ளார். அதுமட்டுமன்றி, இங்கிருந்து தமிழகம் செல்லும் வர்த்தகர்கள், யாத்திரிகர் கள் தாக்கப்படுகின்றனர். அண்மையில் கூட பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

எனவே, தமிழக அரசைக் கட்டுப்படுத்த இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு என்பது தனிநாடல்ல. அது இந்தியாவின் ஒரு பிராந்தியமாகும். தற் போது தமிழக அரசு எல்லை மீறிச் செயற்படு வதால் அதைக் கலைப்பதற்கு மன்மோகன் சிங் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லை யேல், இலங்கையை இழக்கவேண்டிய நிலை ஏற்படும். எது முக்கியம் எனப் பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் முடிவெடுக்க வேண்டும் - என்றும் அவர் கூறினார்.(உ-சி)

## அரச...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்தனர்.

அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார் நாடாளுமன்ற உறுப் பினர் சம்பந்தன். அவர் மேலும் தெரி வித்ததாவது:- இந்தக் கூட்டத்தில் சம்பந்தன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் வீட் டுக் காணிகள், விவசாயக் காணிகள் நாளுக்கு நாள் அரச படைகளினாலும், சிங்கள மக்களி னாலும் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் அரச தரப்பினரிடம் நாம் பல தடவைகள் எடுத்துக்கூறியும் அவர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அதேவேளை, இந்த நில ஆக்கிரமிப்புக்கு எதிராக எமது தமிழ் மக்கள் அறவழியில் போராட்டங்களை நடத்தும்போது அவர்களை அச்சுறுத்தும் வகையில் அரச படையினர் அராஜகங்களை மேற்கொண்டு வருகின் றனர். தட்டிக் கேட்பார் எவரும் இல்லை என்ற துணிவில் அவர்கள் செயற்படுகின்றனர்.

பேரினவாதத்தின் இந்த நில ஆக்கிர மிப்பில் தமிழ் மக்களின் விவசாயக் காணிகள் அமைந்துள்ள படுகாடு, முதலைமடு ஆகிய பகுதிகளும் சிக்கியுள்ளன. இதனால் 2009 ஆம் ஆண்டிலிருந்து குறித்த பகுதிகளில் மூதூர் பிரதேசத்துக்குட்பட்ட பல கிராமங் களைச் சேர்ந்த தமிழ் மக்கள் விவசாயம் செய்யமுடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இதன் வலி இங்கு வந்திருக்கும் எமது விவசாயிகளுக்குத்தான் தெரியும். இதனை உணர்ந்தும் எமது விவசாயிகள், தொழிலின்றி அமைதியாக இருக்கின்றார்கள். ஆனால்,

அரச படைகளுடன் சேர்ந்து சிங்கள மக்கள் எமது நிலங்களை விழுங்கி அட்டகாசம் புரி கின்றனர். இது இன ஒற்றுமைக்கு நல்லதல்ல என்பதை அவர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிர மிப்பதையும், அவர்களை அச்சுறுத்தும் விதத் தில் அராஜகங்கள் புரிவதையும் அரச படைக ளும், சிங்கள மக்களும் உடன் கைவிட வேண்டும். இதனை மீறி அரச படைகளும், சிங்கள மக்களும் செயற்படுவார்களாயின் வீண் விபரீதங்களைச் சந்திக்கவேண்டி வரும். அரசு இதனைக் கவனத்தில் கொண்டு இனி யாவது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்'' - என்று தெரிவித்தார் சம்பந்தன். (உ-சி)

## திட்டம்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

புலிகளின் வால்கள் ஆகியவற்றால் தூண்டப் பட்டுத் தமிழ்நாடானது இந்திய மத்திய அரசுக்கு நிபந்தனைகளை விதித்து வருகிறது என்பது தெளிவாகப் புரிகின்றது. தமிழ் நாட் டில் நெருக்குதல்கள் அதிகரித்து வருவ தானது இலங்கைக்கு நல்லதொரு பாடமாக அமையப் போகிறது.

வெளிநாட்டவர் எமது விவகாரங்களில் தலையிடும் அனுபவங்கள் எமக்கு முன்பும் இருந்துள்ளது. எமது உள்ளக அரசியலில் தேசிய நல்லிணக்கத்தின் பெயரில் வெளிநாட் டவர் தலையிடுவதை அனுமதிப்பதில்லை என்ற தீர்மானத்துடன் நாம் இருக்கின்றோம்.

தேசிய நலன்களைப் பாதுகாக்க, மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கொண் டுள்ள அரசினால் பொருத்தமான நடவடிக்கை எடுக்க முடியும்.

இலங்கையில் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுமாறு வலியுறுத்தி தமிழ்நாட் டில் நடைபெற்று வரும் போராட்டங்கள் இங்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் அதிகாரப் பகிர்வு தொடர்பாக எடுக்கப் படும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதாக அமைந்துவிடும்.'' -என்றார். (ப)

## இங்கே...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

வந்து சேர்ந்தனர். அவர்களில் ஒருவர், ''இங்கு யாரும் பொங்கக்கூடாது பொங்குவதாக இருந்தால் நாயாறுப் பாலத்துக்கு அப்பால் கொண்டு சென்று பொங்குங்கள்'' என்று கூறியவாறு அங்கிருந்து விரட்டினர் என்று மக்கள் உதயனிடம் தெரிவித்தனர்.

அதை அடுத்து வேதனையுடன் திரும்பிச் சென்ற அவர்கள் சேருவில பிரதேச சபை உறுப்பினர் கதிர்காமு சிவலோகேஸ்வர னிடம் முறையிட்டனர்.

ஆலயம் அமைந்துள்ள பகுதியைச் சூழவும் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்ற னர் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டு வரும் நிலையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருப்பது அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்து வதாக சிவலோகேஸ்வரன் தெரிவித்தார். (ஒ-5)

## தமிழ்நாடு...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்த தாவது:-

இலங்கைத் தமிழர்களுக்காக தனித் தமிழீ ழம் அமைக்க வேண்டும் என வலியுறுத்தி கோரி பொது வாக்கெடுப்பு நடத்த வேண் டும் என்றும் இலங்கையை இந்தியா நட்பு நாடாகக் கொள்ளக் கூடாது என்றும் வலியு றுத்தி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இது தமிழர்களின் உணர்வை வெளிப்படுத்துகின்றது.

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் கரிசனை இருப்பதை நான் கவ னத்தில் கொண்டுள்ளேன். ஏனைய கட்சிக ளிடம் மட்டுமன்றி எமது கட்சியில் கூட நிறையப் பேரிடம் இந்த உணர்வு உள்ளது.

ஆனால் உலகநாடுகளின் நிலைப்பாட்டு டன் இந்த உணர்வுகள் ஒத்துப் போவதாகக் கருத முடியாது. இலங்கைப் பிரச்சினை தொடர்பில் தீர்வு காண்பதற்கு இந்தியாவால் முடியும் என்ற நம்பிக்கை எம்மிடத்தில் உள்ளது.

இந்த நிலையில் இலங்கையை நட்பு நாடாகக் கொள்ளக் கூடாது என்ற கோரிக் கையை உடனடியாக ஏற்றுக்கொள்ள முடி யாது. அத்துடன் பொருளாதாரத்தடை விதிக் கும் கோரிக்கையும் ஏற்புடையதல்ல. மேல திகமாக தனித் தமிழீழத்துக்கான பொதுவாக் கெடுப்பைக் கோருவதும் இந்தியாவின் குறிக்கோள் அல்ல.

இத்தகைய கோரிக்கைகளை தமிழக சட்டசபைதான் நிறைவேற்றியுள்ளது. இந்தி யாவில் பல மாநிலங்கள் உள்ளன. அங்குள்ள சட்டசபைகள் எவ்வாறான நிலைப்பாட்டில் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும்.

ஈழக் கோரிக்கைக்கு இந்தியா முழுவதி லும் ஆதரவு இருந்தால், அது இன்னொரு விவகாரமாக இருக்கும். இந்த நிலையில் ஒரு மாநிலத்தின் கோரிக்கையை அதன் தனிப் பட்ட உணர்வாகவே இந்திய மத்திய அரசு கொண்டுள்ளது. அதனை வைத்து முழு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடி யாது. அயல்நாடு என்ற அடிப்படையில் சுமுகமாகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா முயற்சிக்கும். - என்றார். (ஐ)

## குடாநாட்டில்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

வெப்பநிலையாக 34 பாகை செல்சியஸ் பதிவா கியுள்ளது என்று யாழ். திருநெல்வேலி யில் உள்ள வளிமண்ட லவியல் திணைக்கள அதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். வருடாந் தம் பங்குனி மாதத்தில் வெப்பநிலை அதிக மாகக் காணப்படுவது வழமை. என்றாலும் நேற்றைய வெப்ப நிலை வழமைக்கு மாறாக அதிகரித்திருந்தது பதிவுகளிலிருந்து தெரிய வந்தது என்றும் அவர் கூறினார். கடந்த சில தினங்களில் 32 முதல் 33 பாகை செல்சி யஸாக இருந்த வெப்ப நிலை நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை திடீரென 33.6 பாகை செல்சியஸாக உயர்ந்திருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். இதே வேளை, நேற்றுப் பிற்பகல் குடாநாட்டில் 6.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.(ஒ-4)

## பொது..

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

நலவாய மாநாட்டை பிரிட்டிஷ் மகாராணி புறக்கணிப்பதால் பெரும்பான்மையான சர்வ தேசத் தலைவர்களும் இதனைப் புறக்கணிப் பர். எனவே, அரசுக்கு முடியுமானால் பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் மகா ராணியை பங்கேற்கச் செய்யட்டும். அது முடி யாத போது மாநாட்டை நடத்தும் பொறுப்பி லிருந்து அரசு விலகவேண்டும்.'' என்றும் வலியுறுத்தியது ஐ.தே.க.

ஐ.தே.கவின் கொழும்பிலுள்ள தொழிற் சங்கப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அக்கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுநலவாய மாநாடு எதிர்வரும் நவம் பர் மாதத்தில் இலங்கையில் நடைபெறும் என அரசு கூறுகிறது. இந்த மாநாடு இலங்கை யில் நடந்தால் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும். இந்த மாநாட்டில் கலந்துகொள்ள வென 4 ஆயிரத்துக்கும் அதிகமான வெளிநாட் டுப் பிரதிநிதிகள் இலங்கை வருவர். இவர்க ளுக்கென 90 ரொய்ஸ்ரேஸ் கார்களை வாங்கவேண் டும்.இவற்றுக்கு அதிகளவான பணம் செலவாகும்.

நாட்டு மக்கள் பெரும் பொருளாதாரச் சுமையில்- துன்பங்களை அனுபவித்து வரும் நிலையில், பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தினால் அதன்மூலம் ஏற்படும் பெரும் பொருளாதாரச் சுமையை யும் அரசு மக்கள் மீதே சுமத்தும். இந்த மாநாடு இலங்கையில் நடந்தால் நாட்டு மக்கள் தலைதூக்க முடியாது.

1976ஆம் ஆண்டு இலங்கையில் அணி சேரா மாநாடு நடைபெற்றதால் 1977ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதுபோல 2013 ஆம் ஆண்டு இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடந்தால் 2014 ஆம் ஆண்டில் ஆட்சி மாறு வது நிச்சயம்.

இலங்கையில் இடம்பெறும் பொதுநல வாய மாநாட்டில் பிரிட்டன் மகாராணி பங் கேற்கமாட்டார். அண்மையில் நாம் பிரிட் டனுக்கு விஜயம் செய்திருந்தபோது அங்குள்ள உயர்மட்ட இராஜதந்திரிகளுடன் கலந்துரை யாடல்களை மேற்கொண்டோம். இலங்கை யில் நடைபெறும் மாநாட்டில், மகாராணி பங் கேற்க மாட்டார் என்று அவர்கள் தெளிவாகக் கூறினர்.

இவ்வாறான நிலையிலும் இலங்கை அரசு இங்கு மாநாட்டை நடத்துமெனில், அது மணமகள் இல்லாத திருமணத்தை நடத்து வது போன்றதாகும். பிரிட்டன் மகாராணி மாநாட்டைப் புறக்கணிப்பாராயின் பெரும்பா லான சர்வதேசத் தலைவர்களும் இதனைப் புறக்கணிப்பர். கடந்த முறை ஆஸ்திரேலி யாவில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட் டில் பங்கேற்ற பிரிட்டன் மகாராணி இம்முறை மாநாட்டில் பங்கேற்க மாட்டார். இந்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதில் எந்தப் பயனும் இல்லை. அதனால் மாநாட்டை நடத்தும் பொறுப்பிலிருந்து அரசு விலகவேண்டும் - என்றார் ஹரின் பெர்னாண்டோ எம்.பி. (உ)

## வடக்கு...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

களின் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரை யாடியிருந்தார். இதன் பின்னர் கொழும்பு திரும் பிய அவர் நேற்றுமுன்தினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் தெரிவிக்கப்பட்ட தாவது:- வடபகுதியில் போரின் பின்னர் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் போரின் பின்னர் ஏற் பட்டுள்ள பௌதீக மாற்றங்கள் வரவேற்கத் தக்கவை. கண்ணிவெடி அகற்றல் செயற் பாட்டுக்கு எம்மால் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் கண்ணிவெடி அகற் றல் மீள்குடியர்வு செயற்பாட்டில் குறிப்பி டத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் போரின் பின்னர் ஏற்பட் டுள்ள பல்வேறுபட்ட பிரச்சினைகள் இன்ன மும் தீர்க்கப்படவில்லை. பழைய நிலைக்கு யாழ்ப்பாணம் திரும்புவதற்கு பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

மேலும் வடக்கில் வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதன் மூலம் இயல்பான சூழ்நிலையை உருவாக்க முடியும். வடமா காண சபைத் தேர்தலை செப்டெம்பரில் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளதை வரவேற்கின்றோம்- என்றார் அவர். (ஒ-5)

## தமிழக...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

கிறார் எனவும் அங்கு ஒருசிலரால் மேற்கொள் ளப்பட்ட வேண்டத்தகாத வன்முறைச் செயல்கள் தமக்கு வருத்தமளிக்கிறது எனவும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இரா யப்பு யோசேப்பு ஆண்டகை தெரிவித் துள்ளார்.

''இலங்கையில் இருந்து ஆன்மீகச் சுற்றுலா மேற்கொண்டு இந்தியா வந்திருந்த பௌத்த மத பிக்கு ஒருவர் தஞ்சாவூர் பெரிய கோயிலுக்கு சென்றிருந்தபோதும், மற்றொரு பௌத்த பிக்கு சென்னை மத்திய புகையிரத நிலையத்திலும் தாக்கப்பட்ட சம்பவங்களை ஊடகம் வாயிலாக அறிந்து அதிர்ச்சியுற் றோம்-என்று அவர் கூறியுள்ளார்.

ஆன்மீக சுற்றுப்பயணம் மேற்கொள்பவர் களையும், அதுவும் மதத்தலைவர்களையும் தாக்கும் செயற்பாடுகளை எந்தவிதத்திலும் நியாயப்படுத்தலுக்கு உள்ளாக்க முடியாது; இது மனிதத்திற்கு எதிரான குற்றம் என்றும் அவர் கண்டித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏதுமறியாத அப்பாவிகள் அதிகளவில் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ள பின்புலங்களை இந்த மண்ணில் நாம் கொண்டுள்ளோம். ஆயினும் இந்த மண் ணின் மக்களின் நீடிய விடுதலைக்கும் நல் லிணக்கத்திற்கும் இப்படிப்பட்ட செயற் பாடுகள் பின்னடைவையே ஏற்படுத்தும் என்பது உண்மை.

இலங்கையில் இருந்து வருகைதரும் அப்பாவிச் சிங்கள மக்களையும், பௌத்தமதக் குருக்களையும் தாக்குவதும் தாக்கமுயல்வ தும் நீதி நிலைநிறுத்தும் வேட்கை உள்ள வர்களின் செயல்முறைகளுக்கு முற்றிலும் முரணானது.

மனித உரிமைகளுக்கு எதிரான இத்த கைய சம்பவங்களை மிக வன்மையாகக் கண்டிப்பதோடு தமிழகத்தில் பௌத்தபிக்குகள் தாக்கப்பட்ட சம்பவங்களுக்கு பொறுப்பான வர்களை நீதியின்முன் நிறுத்தவும் இனிமேல் இப்படியான சம்பவங்கள் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தவும் இந்திய, தமிழக அரசு களை கேட்டுக்கொள்கின்றேன் - இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. (உ-சி)

## பதியாத...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட விடுதிகள் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய் யப்பட்டிருப்பதோடு அந்த வருடத்துக்கான வியாபார அனுமதிப்பத்திரமும் பெற்றிருத் தல் வேண்டும். இந்த விதிமுறை விடுதி களுக்கு மாத்திரமின்றி வியாபார நிலையங் களுக்கும் பொருந்தும்.

யாழ்.நகரில் நேற்றுமுன்தினம் விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டது. இது சட்ட விரோதமாக இயங்கி வந்தது என்று அதிகா ரிகள் கூறினர்.

இதுபோன்ற நடவடிக்கைகள் ஏனைய இடங்களில் இடம்பெறாதிருக்க முன்நடவ டிக்கையாகவே பதிவுகளில் இறுக்கம் பேணப் படவுள்ளதாக ஆணையாளர் தெரிவித்தார்.

விடுதிகளைப் பதிவுசெய்தல் மற்றும் உரித்துப் பெறுதலுக்கான காலப்பகுதி இந்த மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவுபெறு கிறது. அதற்குள் பதிவு செய்யப்படாத விடு திகளுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவும் இழுத்து மூடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஆணை யாளர் மற்றும் பொது சுகாதாரப் பரிசோத கர்கள் தெரிவித்தனர்.

(உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## தமிழர் மீதான ஒடுக்குமுறை மூக்குள்ள வரை சளி போன்று ...

★ வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தக்கூடாது. தேர்தல் நடைபெற அரசு வசதி செய்தால் அது தமிழீழம் வழங்குவதற்கான முதலாவது படியாக அமையும்.

★ இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் எதிராக தமிழ் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நடைபெற்ற செயலமர்வின் பின்னர் நீர்த்துப் போய்விடும் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர். ஆனால் அந்தச் செயலமர்வின் பின்னரும் இலங்கையர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

★ மேலும் எமது நாட்டின் அரசமைப்புச் சட்டத்தின் 157 ஆவது உறுப்புரையை – இலங்கையின் உள்விவகாரங்களில் வேறெந்த நாடும் தலையிடக் கூடாதென்ற விதியை – தமிழக அரசு மீறியுள்ளது. ஆகையால் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆதரித்த அனைத்து உறுப்பினர்களும் இலங்கை வருவதற்குத் தடை விதிக்க வேண்டும். அவர்களுக்கு விசா வழங்கக்கூடாது.

★ இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையான பஞ்சசீலத்துக்கு எதிராகச் செயற்படும் தமிழக அரசின் மீது மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் –

★ தமிழ் நாட்டுடன் இலங்கை அரசு கொண்டுள்ள சகல உறவுகளையும் துண்டிக்க வேண்டும் – இவ்வாறாகப் பொருமித் தள்ளியுள்ளார் தேசப்பற்றுள்ள பௌத்த பிக்குகள் முன்னணியின் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்திவிடக் கூடாது என்று தமது அமைப்பின் திட்டத்தை, நோக்கத்தை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தவர் போன்று பௌத்த மதகுரு ஊடகங்களுக்கு முன்கண்டவாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மறுபுறத்தில், தமிழகத்தில் இலங்கை அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டியவை. தமிழக அரசியல்வாதிகள் இலங்கை மக்களுக்கு இடையூறு விளைவித்தால் இலங்கையிலுள்ள தமிழக மக்களை விரட்டுவோம் என்று எச்சரித்துள்ளார் பொதுபல சேனாவின் பிரதம செயலாளர் ஹலபொட ஹத்தே ஞானசார தேரர்.

இலங்கையில் தமிழ் மக்களுக்குச் சட்டரீதியாக உள்ள உரிமைகளைத் தானும் அவர்கள் அனுபவிக்க அனுமதிக்கக் கூடாதென்ற நச்சு நோக்கம் பெரும்பான்மை இன மக்களிடம், குறிப்பாக பிக்குகளிடம் இரத்தத்தோடு ஊறிப்பிடித்துள்ளது என்பதனையே இத்தகைய கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் பலம் – தந்திரம் – பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்களிடம் மட்டுமன்றி ஏனைய தென்னிலங்கையர்களிடமும் உண்டு.

தாம் எண்ணிக்கையில் கூடுதலானவர்கள், பெரும்பான்மையினர் என்பதால் சிறுபான்மை மக்களுக்கு உரிய உரிமைகளை நசுக்கி விடவும், இல்லாமற் செய்யவும் தமக்கு அதிகாரம் உண்டு; தட்டிக்கேட்க எவரும் இல்லை; அதற்கு அனுமதிக்கப் போவதுமில்லை என்று அடிக்கடி வெளிப்படுத்தி வருகிறார்கள்.

சிறுபான்மையினரான தமிழர்கள் மட்டுமன்றி முஸ்லிம்களும், பெரும்பான்மையினர் இரங்கி வழங்கும் அற்பசொற்பங்களைப் பெற்றுக்கொண்டு வாழ வேண்டும். அரசியல் உரிமைகளோ, மத உரிமைகளோ, மனித உரிமைகளோ எவையாக இருப்பினும் தாம் கொடுப்பனவற்றோடு திருப்தி அடைய வேண்டும்.

பெரும்பான்மையினர் என்ற வகையில் தமக்கு உரிய அதீதமான உரிமைகளும், நீதமான உரிமைகளும் ஒருங்கு சேர உண்டு என்ற அதிகாரத்தனமும் அகங்காரமும் – அவர்களிடம் அளவு கணக்கின்றி, உருத்துக் கொழுத்து நிறைந்துள்ளதன் விளைவாக எதேச்சாதிகாரப் போக்கு ஊன்றி நிலைகொண்டுவிட்டது.

இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு, அனைத்துலகம் ஒருமித்து வந்தாலும் அசைக்க முடியாது என்ற ஆணவப் போக்கும் நெடிதுயர்ந்து உள்ளது பெரும்பான்மை மதத் தலைவர்களிடம். இல்லையேல் – வடமாகாண சபைத் தேர்தலை நடத்தி, மக்கள் பிரதிநிதிகளிடம் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று அனைத்துலக நாடுகள் வலியுறுத்திவரும் இவ்வேளையில் –

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தக் கூடாது என்று தேசப்பற்றுள்ள முன்னணி ஓங்கிக் குரல் எழுப்பி உள்ளது. தென்னிலங்கையின் ஏழு மாகாணங்களில் இயங்கும் மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்களைத்தானும் வடக்கு வாழ் தமிழ் மக்கள் அனுபவிக்க வகை செய்யக்கூடாது என்ற உள்ளந்தரங்கமான நோக்கிலும் போக்கிலுமே இவை மேலெழுகின்றன.

இத்தகைய பின்புலத்தில், ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, தொப்புள்கொடி உறவு என்ற வகையில் தமிழகம் வாழ் மக்கள், அவர்களின் பிரதிநிதிகள் 'குரல் கொடுப்பதனை கழுகுப் பார்வையுடன் பார்க்கும் பௌத்த தலைவர்களின் போக்குக்கு அரசியல் தலைவர்கள் தாளம் போடும்வரை, மூக்குள்ள வரை சளி என்ற நிலையே தொடரப்போகிறது...!

# தேசத்தின் மகுடம் கண்காட்சியை 2014இல் வடக்கில் நடத்தாதது ஏன்?

யாழ்ப்பாணம்,மார்ச் 30

தேசத்தின் மகுடம் சர்வதேசக் கண்காட்சியை அடுத்த வருடம் உண்மையில் வடக்கில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது குருநாகலில் இடம்பெறும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தமை தமிழர்களாகிய எம்மிடையே மிகுந்த வருத்தத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

தேசத்தின் மகுடம் சர்வதேச கண்காட்சிவடக்குக்குப் புறக்கணிப்பு என்ற விடயம் தொடர்பாக உறுப்பினர் த.நடனேந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

தேசத்தின் மகுடம் சர்வதேசக் கண்காட்சி கடந்த வருடம் அநுராதபுரம் ஒயாமடுவில் இடம்பெற்றபோது கண்காட்சியை 2013 இல் வடக்கில் நடத்துமாறு கடிதம் மூலம் ஜனாதிபதியைக் கோரியிருந்தேன்.

ஆனால், ஜனாதிபதி கிழக்கில் இடம்பெறும் என்று பகிரங்க அறிவிப்பை விடுத்திருந்தார்.

தற்போது 6 ஆவது தேசத்தின் மகுடம் கண்காட்சி கிழக்கில் இடம்பெறுகின்றது.

எனினும் 7 ஆவது தேசத்தின் மகுடம் சர்வதேச கண்காட்சியை வடக்கில் கிளிநொச்சி, முல்லைதீவு மாவட்டங்களை மையப்படுத்தி நடத்தியிருந்தால் உண்மையான அபிவிருத்தி இடம் பெற்றிருக்கும். ஆனால், ஜனாதிபதி குருநாகலில் இடம்பெறும் என்று அறிவித்துள்ளார்.

இதனால் வடக்கின் அபிவிருத்தி மேலும் பின் தள்ளப்பட்டுள்ளது.

தேசத்தின் மகுடம் கண்காட்சி இடம்பெறுவதன் ஊடாக அந்தப் பிரதேசத்தில் வளம் பேணப்படுவதுடன், உட்கட்டுமான அபிவிருத்திகளும் எய்தப்படும்.

ஆனால் அந்த அபிவிருத்திகள் இங்கு பின்தள்ளப்பட்டுள்ளன.

எனவே அடுத்த இரு வருடங்களுக்கு அபிவிருத்தியற்ற நிலையையே கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் எதிர்கொள்ள நேரிடும்- என்றார். (ம-41)

## தாதியர்கள் பற்றாக்குறையால் வைத்தியசேவை பாதிப்புறும் நிலை

வலி. வடக்கு, மார்ச் 30

யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளின் சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்படும் நிலமை காணப்படுகின்றது.

வட மாகாண சபைக்கு உட்பட்ட வைத்தியசாலைகளில் தாதிய அலுவலர்களின் தேவை அதிகமாக இருக்கும் நிலையில் தாதியர் பற்றாக் குறையுடன் வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன.

தற்போது தாதிய அலுவலர்களின் பற்றாக் குறையை போக்கும் வகையில் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதிய அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன.

வட மாகாண சபைக்கு உட்பட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதிய அலுவலர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்துக்கு மேற்படாது வழங்கப்பட வேண்டும் என்று வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்ட நிலையில் தாதியர்களின் சேவை நேரம் மட்டுப்படுத்தப்படவுள்ளது.

இதனால் போதிய தாதிய அலுவலர்கள் சேவையில் ஈடுபடாத சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையின் பணிகள் பாதிக்கப்படும் அபாய நிலைமை காணப்படும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தாதிய அலுவலர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் சுகாதாரத் அமைச்சால் அதிகரிக்கப்பட்ட நிலையில், தாதிய அலுவலர்களின் தற்போதைய மேலதிக நேரத்துக்கான கொடுப்பனவுகளை வழங்கும்போது இது அவர்களுடைய அடிப்படை சம்பளத்திலும் கூடுதலாகக் காணப்படுகின்றது.

இதனால் மேலதிக நேரப் பணியை தாதிய அலுவலர்கள் குறைத்துக் கொள்வதால் சேவை பாதிக்கப்படுகிறது- என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ம-86)

## விவசாயிகளுக்கு ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

வர்த்தக ரீதியாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்களை வழங்கவுள்ளது.

நாடு முழுவதும் இதனை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இதற்கான விண்ணப்பங்களை விவசாய அமைச்சு கோரியுள்ளது.

தானியப் பயிர்கள், பழ வகைகள், மரக்கறிப் பயிர்ச் செய்கை போன்றவற்றை மேற்கொள்ளும் விவசாயிகள் தத்தமது கிராம அலுவலர்களுடன் அல்லது தமது பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## அபிவிருத்திக்குத் தெரிவான ஊட்டப் பாடசாலைகள்

### விவரம் பிரதேச செயலகங்களுக்கு

தென்மராட்சி,மார்ச் 30

5 ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஊட்டப் பாடசாலைகளின் விவரங்கள் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்குக்கு ஏற்ப அறிவை மையமாகக் கொண்ட அபிவிருத்தி இலக்கை எட்டுவதற்காக 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை புனரமைக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டப் பட்டியல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகளைப் புனரமைக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தங்கள் பிரதேசத்தின் அபிவிருத்தி செய்வதற்கு இனங்காணப்பட்டுள்ள பாடசாலைகளின் பெயர்ப் பட்டியல் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகளின் பட்டியலை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு, உள்ளூராட்சி சபைகளின் சகல உறுப்பினர்கள், மாகாண வலய மற்றும் கோட்டக்கல்விப் பணிமனை போன்றவற்றின் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பிரதேச மக்கள் மற்றும் பெற்றோருடன் கலந்துரையாடி இறுதிப் பட்டியலை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து விவரப் பட்டியலை அனுப்பி வைக்குமாறும் பிரதேச செயலகங்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் தென்மராட்சி பிரதேசத்தில் தெரிவு செய்யப் பட்ட 20 பாடசாலைகளின் பெயர்ப் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# தேசிய அ.அட்டையில் தமிழ்மொழி

### இடம்பெறச் செய்யக் கோரிய வழக்கு உயர் நீதிமன்றில் விசாரணைக்கு

தேசிய அடையாள அட்டையில் தமிழ் மொழியும் இடம்பெற வேண்டும் எனத் தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பிரசைகளுக்கான தேசிய அடையாள அட்டை மற்றும் மொழி வேறுபாடு காட்டக் கூடியதாக தமிழர்களின் அடையாள அட்டையில் இரு மொழிகளும் சிங்களவர்களின் அடையாள அட்டையில் சிங்கள மொழி மட்டும் அச்சிடப்படுவதால் இரு இன மக்களதும் மொழி உரிமைகள் மீறப்படுகின்றன.

இது தொடர்பாக மாற்றுக் கொள்கை நிலையத்துக்கு கிடைக்கப் பெற்ற மொழி உரிமை மீறல் தொடர்பான முறைப்பாட்டு மனு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை அடுத்து உயர் நீதிமன்றம் இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துள்ளது.

அத்துடன் தமிழ்ப் பகுதிகளுக்கு செல்லும் சிங்கள மக்கள் பல்வேறு மொழிப் பிரச்சினைகளை எதிர்கொண்டதுடன் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையும் நிலவுகின்றது.

இதற்கு அமைவாக ஆள்பதிவுத் திணைக்களத்தால் மக்களது மொழி உரிமை மீறப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 214 குடும்பங்களுக்கு வீடுகள் இரணைப்பாலையில் கிடைக்கும்

புதுக்குடியிருப்பு, மார்ச் 30

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியமர்ந்த 214 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து வழங்கப்படவுள்ளன.

இதற்கான பயனாளிகள் தெரிவு இடம்பெற்றதைத் தொடர்ந்து கடந்த வாரம் கட்டட வேலைகள் அதிகாரிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்திருந்த 90 வீதமான வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

**இந்திய வீட்டுத் திட்டத்தின் பிரகாரம் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 214 பயனாளிகளுக்கான வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

மேலும் இங்கு குடியமர்த்தப்பட்ட மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாது தற்காலிகக் குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இரணைப்பாலை கிராம உத்தியோகத்தர் பிரிவில் 420 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன. இவர்களுக்கு ஒவ்வொன்றும் இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 214 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இந்திய வீட்டுத் திட்டத்தின் பிரகாரம் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 214 பயனாளிகளுக்கான வீடுகளை அமைக்கும் பணிகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் சேதத்துக்குள்ளான 40 வீடுகளும் புனரமைக்கப்படவுள்ளன. (க-115)

### அக்கராயனில் இருந்து முழங்காவில் வரையான

# பாலங்களின் புனரமைப்புக்கென ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு

அக்கராயன், மார்ச் 30

அக்கராயனில் இருந்து முழங்காவில் வரையான பிரதான வீதியில் உள்ள பாலங்களைப் புனரமைப்பதற்கு ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியை வடக்கு மாகாணசபை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கராயனில் இருந்து முழங்காவில் வரையான பிரதான வீதியில் அமைந்துள்ள பாலங்கள் உடைந்து காணப்படுகின்றன. இதன் காரணமாக அடிக்கடி வாகன விபத்துகள் ஏற்படுவதுடன் பொதுமக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து முழங்காவிலுக்கான பிரதான வீதியாகவும் இது காணப்படுவதால் மாற்று வழிகளை மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் தொடர்பாகக் கேட்டபோது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான பொறியியலாளரான எஸ்.சிவராஜலிங்கம் தெரிவிக்கையில்;

வடக்கு மாகாணசபை ஒரு மில்லியன் ரூபா நிதியை இந்தப் பாலங்களின் புனரமைப்புக்கென வழங்கியுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு பிரதான வீதியில் காணப்படும் உடைந்த பாலங்களின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வேலைகள் முடிவடைந்த பின்னர் வீதியின் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளன.

பாலங்கள் சேதமடைந்துள்ளதால் பஸ்கள் பயணிக்க முடியாத நிலை உள்ளது. அதனால் முதற்கட்டமாக பாலப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (க-14)




நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் சுப்பிரமணியம் நாகம்மா

25.02.2013 அன்று எமது அன்புத் தெய்வம் மறைந்த செய்தியறிந்து நேரில் வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலி தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.



முதலாம் ஆண்டு நினைவு நாள்



அன்னை மடியில் 16.10.1925

தில்லை நடராஜரின் பாதங்களில் சரண் 09.04.2012

திதி: பங்குனி அபரபக்க திருதியை 30.03.2013 சனிக்கிழமை

அமரர் அ.க. பாலசிங்கம்

மறந்தால் தானே நினைப்பதற்கு

வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்த எங்கள் ஐயா- இன்று
வையத்திலே எம்மைத் தவிக்க விட்டுச் சென்றீர்களே!
ஆண்டு ஒன்று சென்றாலும் எம் நெஞ்சங்களில்-என்றும்
ஆறாதே இத்துயரம் என்றென்றும்-உங்கள்
பெயர் சொல்லும் பிள்ளைகளாய் இம் மண்ணில் -உயர்
பெருமையுடன் வாழ்கின்றோம் நின் -வளர்ப்பில்
இல்லறமே நல்லறமாக நற்துணைவனாய்- என்றும்
இணையில்லாக் கல்வியூட்டிக் காப்பதில் நிகரில்லாத் தந்தையாய்
பண்பு நிறைந்த அறிவான அன்பு மாமனாய்-இனிய
பாசத்தினைப் பொழிவதில் செல்லப் பேரனாய்
வாழ்ந்து சென்றீர்களே பல்லாண்டு -இல்லை-இன்றும்
வாழ்கின்றீர்களே எம் நெஞ்சங்களில்-தங்களை
மறந்தால்தானே நினைப்பதற்கு எங்கள் ஐயா-என்றும்
மறைய மாட்டீர்கள் எங்கள் மனங்களை விட்டு
எங்கள் உயிரே!
என்றும் வாடாத பயிரே!- வாழ்த்தும்
உங்கள் ஆத்மாவே எங்களை வாழ வைக்கும்!
என்றென்றும்.....

"துவாரகா" கதிர்காம சுவாமி கோயிலடி, காரைநகர்.

ஆருயிர் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(34990) (6.7.11)


## வெடி வைத்து கல் அகழ்வு; மக்கள் பாதிப்பு

நெளுக்குளம், மார்ச் 30

வவுனியா நாம்பன் குளம் பகுதியில் வெடிகளை உபயோகித்துக் கல் அகழ்வு இடம்பெறுவதால், மக்கள் பாதிப்புக்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா ஓமந்தைப் பகுதியை அண்மித்துள்ள நாம்பன் குளம் பகுதியில் தினமும் வெடிகளைப் பயன்படுத்திக் கல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதனால் எழுகின்ற பலத்த வெடியோசை அயலில் உள்ள மக்களுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் நோயாளர்கள், வயோதிபர்கள் எனப்பலரும் பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

அகழ்ந்து எடுக்கப்படும் கல் தினமும் இருபதுக்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் சேமமடு வீதியூடாக எடுத்துச் செல்லப்படுவதால் வீதியும் சேதமடைகின்றது.

வவுனியா மாவட்டத்தில் தற்போது 20 இடங்களில் கல் அகழ்வு இடம் பெறுவதாகவும் தெரிய வருகின்றது. (க-402)

## போயாவிலும் கசிப்பு

போயா தினத்தில் கசிப்பு அருந்தியவர்கள் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டனர்.

மதுபான விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்ட கடந்த போயா தினத்தன்று இயக்கச்சி சங்கத்தார் வயல் பகுதியில் பொது இடத்தில் வைத்து கசிப்பு அருந்திய மூவர் பணைப் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

அந்தப் பகுதியில் ரோந்து சென்ற பொலிஸாரைக் கவனிக்காமல் கசிப்பு அருந்திக் கொண்டிருந்த வேளையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். [illegible] கப்பட்டது. (க-9)

# கிளிநொச்சி டிப்போ வீதி 3 மாதங்களில் புனரமைப்பு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 30

கிளிநொச்சி டிப்போ வீதியின் புனரமைப்புப் பணிகள் மூன்று மாத காலப் பகுதிக்குள் நிறைவடைந்துவிடும் என்று கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் கே.ஜெகானந்தன் தெரிவித்தார்.

மிக மோசமான நிலையில் குன்றும் குழியுமாக இந்த வீதி காணப்பட்டதால் இதில் பயணிக்க முடியாத நிலையில் மக்கள் அவலப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் கெயர் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் கடந்த வருடம் வீதி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தப் பிரதான வீதியூடாக அக்கராயன், ஸ்கந்தபுரம், பூநகரி, முழங்காவில் ஆகிய பகுதிகளுக்கு பஸ் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் வீதியின் மோசமான நிலை காரணமாகப் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

தற்போது கிளிநொச்சி டிப்போச் சந்தியிலிருந்து சுமார் 8 கிலோ மீற்றர் வரையான வீதியின் புனரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பிரதான வீதியில் 14 கிலோ மீற்றர் நீளமான பகுதி கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரியதாக இருந்தபோதிலும் நிதிப் பங்களிப்புப் போதுமானதாக இல்லாத காரணத்தினால் சுமார் 8 கிலோ மீற்றர் நீளமான பகுதியை முதலில் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் பூர்த்தியடைந்து விடுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த வீதியைத் தவிர்த்து மாற்றுப் பாதைகள் ஊடாகப் பொதுமக்கள் பயணிப்பதற்கான மாற்று ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-14)


**வவுனியாவில் கடை வாடகைக்கு உண்டு**

58 அடி நீளமும், 11 ¼ அடி அகலமும் கொண்ட கடை (ஆதி விநாயகர் முன்பாக) வாடகைக்கு விடப்படும்.
★ [illegible]
★ [illegible]
★ [illegible]
முகவரி: இல. 66 1/1, [illegible], வவுனியா. தொ.பே. 024 222 0112
(26195) (45.6.7)

**ORGAN,GUITAR புல்லாங்குழல் வகுப்புக்கள்**

சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.
கரவீணா இசை மன்றம்,
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே. 077 705 1295
(34987) (6.7.11)

**வாகனம் விற்பனைக்கு**

NP-PS - XXXX தொடரிலக்கமுடைய Mahindra Bolero PIK- UP (Power Steering) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 284 4951
(34988) (6.7)

**தென்மராட்சியில் திருமணங்கள்**

51 வருடங்களாக, [illegible]
106, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
T.P-021 490 0755, 075 528 7045, 071 335 2215
(34993) (6.7.11)

**காணி விற்பனைக்கு**

பொற்பதி வீதி, காளி கோயிலடியில் (பலாலி வீதியில் இருந்து 500 யார்) 2 பரப்பு 11 குளி அளவுடைய காணி விற்பனைக்குண்டு. நான்கு புறமும் முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது.
தொடர்பு: 077 871 0061, 078 301 7454
(34996) (6.7.11)

**காணி விற்பனைக்கு**

சுன்னாகம் சந்திக்கு வடக்காக கே.கே.எஸ். வீதியில் பெற்றோல் விற்பனை நிலையத்துக்கு பின்புறமாக [illegible] 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரதான வீதியிலிருந்து 100 மீற்றர் தொலைவில் உள்ளது.
தொடர்பு: 071 2828 041, 071 4806 309.
(34998) (45.6.7)

**தவறிவிட்டது**

[illegible] இல. 501812013 X [illegible] தவறிவிட்டது [illegible]
தொடர்பு: 077 455 1059
(27809) (6.7)

**வாடகைக்கு**

யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில் மேல்மாடி வீடும் (NGO, வைத்தியசாலை விரும்பத்தக்கது) நாயன்மார்கட்டு ஆஸ்பத்திரிக்கு அருகில் பழைய வீடும் புதுவீடும் 12 பரப்புகாணியுடன் உடன் வாடகைக்கு உண்டு. (குடும்பம் விரும்பத் தக்கது)
தொடர்பு: 077 490 9204, 071 430 4737
(34997) (6.7)

**மணமகன் தேவை**

* 87 இல் பிறந்த, 8இல் செவ்வாய், 26¼ பாவமுடைய, ஆஸ்திரேலியாவில் பிரஜாவுரிமை பெற்ற, எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகளுக்கு எக்கவுண்டன், இஞ்சினியர் மணமகன் தேவை.
* 85இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல், 35 பாவமுடைய, அமெரிக்காவில் PHD படிக்கும் மணமகளுக்கு அமெரிக்காவில் அல்லது உள் நாட்டில் எக்கவுண்டன்,இஞ்சினியர் மணமகன் தேவை.
* 85 இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல், 25 பாவமுடைய, பல் டாக்டருக்கு லண்டனில் இஞ்சினியர், எக்கவுண்டன் மணமகன் தேவை.

[illegible] திருமணசேவை
இல. 435/3, கோயில் வீதி, நல்லூர். 077 607 0862
(34995) (5.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவு வழங்கும் செயற்றிட்டம் தொடர்ந்து நடக்கும்


யாழ்ப்பாணம், மார்ச் 30

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்றிட்டத்தை 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதக் காலப் பகுதியில் அரசு பொறுப்பேற்று நடைமுறைப் படுத்தவுள்ளது என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்றிட்டத்தை தற்போது அரசுடன் இணைந்து உலக உணவுத் திட்டமும் நடைமுறைப்படுத்தி வருகிறது. அதனைத் தொடர்ந்து 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு பின்னர் அரசு இந்தத் திட்டத்தை முற்று முழுதாகப் பொறுப்பேற்று நடைமுறைப் படுத்தும் என்று அவர் மேலும் கூறினார். (ம-14)

## பட்டச்சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் 2009/2011 ஆம் ஆண்டில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாப் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. மே மாதம் 6 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும். இதில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களின் சுயவிவரங்கள் தேவைப்படுகின்றன. ஆசிரியர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிக்குச் சமூகம் தருமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார்.



யாழ்.வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தின் இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் நேற்று இடம்பெற்றது. இதன்போது குருமார்கள் கோபுரத்துக்கு பாலாபிஷேகம் செய்கின்றனர். (ம-14)

# உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கம் யாழில் பிரதேச ரீதியாக அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். மாவட்டத்தில் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் முதற் கட்டமாக பிரதேச உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன.

கோப்பாய் , உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த சங்கங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு அன்றைய தினம் மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்தால் பதிவுக்கும் உட்படுத்தும் நிகழ்வு இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை பிரதேசத்துக்கான இந்தச் சங்கத்தில் அங்குரார்ப்பண நிகழ்வு காலை 9.30 மணிக்கு குட்டியப்புலம் அம்மன் ஆலயத்திலும் உடுவில் பிரதேசத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வு முற்பகல் 11 மணிக்கு குப்பிளான் தெற்கு விவசாய சம்மேளனத்திலும் கோப்பாய் பிரதேசத்துக்கான அங்குரார்ப்பண வைபவம் பிற்பகல் 3 மணிக்கு கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்திலும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளில் மாவட்ட விவசாய திணைக்களம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரிகள் கலந்து கொள்வர்.

மேற்படி மூன்று பிரதே சங்களையும் சேர்ந்த உருளைக்கிழங்கு செய்கையாளர்களையும் இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். யாழ். மாவட்டத்தில் இந்த முறை போகத்தின்போது அதிகளவில் உருளைக்கிழங்குச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் அதிக ஆர்வம்காட்டியுள்ளனர்.

இதனை அடுத்து பயனாளிகளுக்கெனத் தனியான கூட்டுறவு அமைப்பு ஒன்று அவசியம் தேவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக அவர்களின் தேவையை நிறைவு செய்வதற்கும் மற்றும் அரசிடம் இருந்து மானிய அடிப்படையில் விதை உருளைக்கிழங்கை பெறுவதற்கும் ஏனைய உதவிகளை பெறும் நோக்குடனும் இவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன.

அத்துடன் விவசாயிகள் உற்பத்தி செய்யும் இந்த உருளைக்கிழங்கை இந்தச் சங்கம் ஊடாக சந்தைப் படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேச சமயம் கடந்த போகத்தின் போது 55 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்குச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டனர்.

ஆனால் இந்த போகத்தின் போது 80 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் இந்தச் செய்கையை மேற்கொள்வதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.(ம-17)

## மோதிவிட்டு ஓடியது மோட்டார் சைக்கிள்

தென்மராட்சி, மார்ச் 30

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியில் சைக்கிளில் சென்ற குடும்பப் பெண்ணை மோதி விட்டு தப்பிச் சென்றது மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவர் ஹெல்மட் மற்றும் கொண்டு வந்த பொருள்களைக் கைவிட்டுத் தப்பியோடினார். மோட்டார் சைக்கிளால் மோதுண்ட பெண்ணுக்கு விலா எலும்பு உடைந்தது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்றது. குறிப்பிட்ட பெண் அந்தப் பகுதியிலுள்ள முன்பள்ளியில் பிள்ளையை விட்டுவிட்டு திரும்புகையில் விபத்து இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த இராசநாதன் சிவகுமாரி (வயது-39) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையில் குளியலறையில் சறுக்கி வீழ்ந்ததில் எலும்பு பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட குடும்பப் பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

## இன்று வருவாளா குமுதினி?

*யாழ்ப்பாணம், மார்ச் 30*

*குமுதினி படகின் திருத்தப் பணிகள் நிறைவுற்றுள்ளதால் அந்தப் படகு இன்று தொடக்கம் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

*இந்தப் படகு கடந்த வாரத்தில் திடீரென பழுதடைந்ததால் குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்கும் இடையிலான போக்குவரத்துகள் தனியார் படகுகள் மூலம் இடம்பெற்று வருகின்றன. தற்போது இந்தப் படகுக்கான திருத்தப்பணிகள் நிறைவு பெற்றதை அடுத்து அந்தப் படகின் சேவை இன்று முதல் வழமை போன்று இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)*

# மூடப்பட்டது கடற்கரை வீதி புனரமைப்புக்காக

யாழ்ப்பாணம்,மார்ச் 30

யாழ். கோட்டைக்குப் பின்புறமாகவுள்ள கடற்கரை வீதி புனரமைப்புக்காக மூடப்படவுள்ளது.

துரையப்பா விளையாட்டு அரங்கில் இருந்து பண்ணை சுற்றுவட்ட சந்தி வரையான அறுநூறு மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதி எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் மூடப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எஸ். சுதாகர் தெரிவித்தார்.

இந்தக் கடற்கரை வீதி அகலிக்கப்பட்டு காப்பெற் வீதியாக மாற்றப் படவுள்ளது. அதனை விட இந்த வீதியில் இரண்டு மதகுகளும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

கடற்கரை வீதியை அண்டிய பிரதேசத்தைச் சுற்றுலா மையமாக மாற்றியமைக்கும் பணிகளும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

பண்ணை சுற்றுவட்ட சந்தியில் இருந்து கடற்கரை வீதியோர பக்கமாக நூற்றுக் கணக்கான நிழல் மரங்கள் நடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)



# பழைமை வாய்ந்த ஏட்டுச் சுவடி பிரதிகள் கையளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30

பழமைவாய்ந்த ஏட்டுச் சுவடிகளின் பிரதிகளை ஒப்படைக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் அகில இலங்கை இந்துமா மன்ற யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாத சுவாமிகள் பழம்பெரும் ஏட்டுச் சுவடிகளின் பிரதிகளை ஆறு திருமுருகனிடம் கையளிப்பார்.

முன்னதாக காலை 9 மணிக்கு நல்லூர் சிவன் கோயிலில் வழிபாடுகள் இடம்பெறும். அதைத் தொடர்ந்து ஏட்டுச் சுவடிகள் ஊர்வலமாக இந்துமா மன்றத்துக்கு எடுத்து வரப்படும்.

தர்மசாஸ்தா முதல்வர் சிவஸ்ரீ தானு மகாதேவக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், இந்து குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள் ஆகியோர் ஆசியுரையையும் அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் ஆறு.திருமுருகன் தொடக்க உரையையும் நிகழ்த்துவர்.

வாழ்த்துரையை பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், பேராசிரியர் எஸ்.சிவசாமி, பேராசிரியர் ந.வேதநாதன் ஆகியோர் நிகழ்த்துவர்.

பிரதம விருந்தினர் உரையை ... கம் நிகழ்த்துவார். (ம-7)

# அம்பாறை தேசத்தின் மகுடம் கண்காட்சியில் தீவுப் பகுதிப் பூசணிக்காய்கள் காட்சிக்கு

**குடாநாட்டில் வாழைச் செய்கையாளர்களால் பயிரிடப்படும் சகல இனங்களையும் கொண்ட வாழைக் குலைகளும் இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.**

யாழ்ப்பாணம், மார்ச் 30

அம்பாறையில் நடைபெற்ற தேசத்தின் மகுடம் கண்காட்சியில் தீவுப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் ஐந்து வகையான பூசணிக்காய்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

மத்தளம், வரி மத்தளம், தம்பட்டை, சக்கரை, அல்லைப்பிட்டி உள்ளூர் போன்ற ஐந்து இனங்களைச் சேர்ந்த பூசணிக் காய்கள் இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த ... இனங்களும் தீவுப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டு குடாநாட்டு சந்தைகளில் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த இனங்களைச் சேர்ந்த பூசணிக்காய்களுக்கு குடாநாட்டில் மக்கள் மத்தியில் கிராக்கி நிலவிவருகின்றது.

அதேவேளை, குடாநாட்டில் வாழைச் செய்கையாளர்களால் பயிரிடப்படும் சகல இனங்களையும் கொண்ட வாழைக் குலைகளும் இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த வாழைக்குலைகள் கண்காட்சியில் முதலிடம் பெற்றுள்ளன.

இந்த குடாநாட்டு வாழைக் குலைகளை தென்பகுதி மக்கள் முண்டியடித்து பார்வையிட்டனர். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவிரவாத குழுக்கள் மோதல்; மாவோ பிரிவில் 10 பேர் சாவு

ஜார்க்கண்ட், மார்ச் 30

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மாவோயிஸ்ட்டுகளுக்கும், திரித்திய பிரஸ்துதி அமைப்பினருக்கும் (டிபிசி) இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் மாவோயிஸ்டுகள் 10 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம், சத்ரா மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றில் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலைத் தொடர்ந்து, '15 மாவோயிஸ்ட்டுகளை கடத்திச் சென்றுள்ளதாக' டி.பி.சி. அமைப்பினர் ஊடகங்களுக்கு தொலைபேசியில் கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இது குறித்து தங்களுக்கு எவ்வித தகவலும் வரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.



குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியை அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வர்த்தகர்கள் அடங்கிய குழுவினர் காந்திநகரில் சந்தித்துப் பேசினர்.

## அருங்காட்சியகமாக கணிதமேதை ராமானுஜரின் வீடு

ஈரோடு, மார்ச் 30

ஈரோட்டில் அமைந்துள்ள கணித மேதை ராமானுஜர் பிறந்த வீடு, கணித அருங்காட்சியகமாக மாற்றப்படவுள்ளது.

புகழ் பெற்ற கணித மேதை ராமானுஜர். அவர் பிறந்த வீடு ஈரோட்டில் அமைந்துள்ளது. அந்த வீட்டையே தற்போது கணித அருங்காட்சியமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கடந்த புதன்கிழமை ஈரோடு மாமன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (வ)

## சலுகை ஏதும் வேண்டாம் சிறை செல்லத் தயார்

### கண்ணீர் மல்கினார் நடிகர் சஞ்சய் தத்



1993 ஆம் ஆண்டு மும்பை தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றம் கடந்த 21 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

மும்பை, மார்ச் 30

தண்டனையைக் குறைக்க சலுகை கருணை மனு கோரப் போவதில்லை என்று கூறியுள்ள இந்தி நடிகர் சஞ்சய் தத், ஏப்ரல் மாதத்தில் சரணடையப் போவதாக கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளார்.

1993 ஆம் ஆண்டு மும்பை தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றம் கடந்த 21 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது. இதில், முறைகேடாக துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக சஞ்சய் தத்துக்கு விதிக்கப்பட்ட 6 ஆண்டு சிறைத் தண்டனையை உச்ச நீதிமன்றம் 5 ஆண்டுகளாகக் குறைத்தது.

இதனிடையே, தண்டனையைக் குறைக்கக் கோரி சஞ்சய் தத், உச்ச நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனுதாக்கல் செய்யப்போகிறார் என்று தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், மும்பையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த சஞ்சய் தத்-


தண்டனையைக் குறைக்க சலுகை எதுவும் கோரப் போவதில்லை என்றும் ஏப்ரல் மாதம் தாம் சரணடையப் போவதாகவும் கண்ணீர் மல்கக் கூறியுள்ளார்.

மேலும், நான் சட்டத்தை மதிக்கும் ஒரு குடிமகன் என்று கூறிய அவர், உச்ச நீதி மன்றத்தின் மீது அதிகபட்ச மரியாதை வைத்துள்ளேன் என்றும் தீர்ப்பையும் அவ்வாறே மதிக்கிறேன் என்றும் கூறினார்.

மன்னிப்புக் கோர விண்ணப்பிக்காததால் அது பற்றிய விவாதத்தில் ஈடுபட வேண்டாம் என்றும் மக்களையும் ஊடகங்களையும் கேட்டுக் கொள்கிறேன்- என்றார் அவர். (வ)

# அரசு கவிழாது

## கூட்டணி உடைந்தாலும் என்கிறார் மன்மோகன்



டர்பன், மார்ச் 30

ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கான ஆதரவைக் கூட்டணிக் கட்சிகள் வாபஸ் பெற்றாலும் மத்திய அரசு கவிழாது. சீர்திருத்த நடவடிக்கைகள் தொடரும் என்று பிரதமர் மன்மோகன் சிங் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் நாடு திரும்பும் வழியில் விமானத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்கு முன் கூட்டியே தேர்தல் வரும் என்பதை மறுத்த பிரதமர், தமது அரசு முழு ஆட்சிக்காலத்தையும் நிறைவு செய்யும் என்றும் தெரிவித்தார். சமாஜ் வாதிக்கட்சி மத்திய அரசுக்கான ஆதரவைத் திரும்பப்பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

கூட்டணிக் கட்சிகளில் பிரச்சினை உள்ளது. எனினும் இந்த நிர்ப்பந்தங்களுக்காக சீர்திருத்த நடவடிக்கைகளைக் கைவிட முடியாது-என்றார்.

80 வயதைத் தாண்டிய பின்னரும் நீங்கள் பொது வாழ்க்கையில் ஈடுபடுவீர்களா அல்லது ஓய்வுபெறுவீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

நாட்டுக்கு எனது சிறப்பான பணியை நேர்மையாகவும், அர்ப்பணிப்புடனும் வழங்கி சோர்வடைந்துள்ளேன். நான் அரசியலில் தொடரவேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும் என பதில் அளித்தார்.

நடப்புக் கணக்கு பற்றாக் குறை பற்றி அவரிடம் கேட்ட போது, அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. இதை எம்மால் கட்டுக்குள் கொண்டுவர முடியும். நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 3 சதவீதம் அளவுக்கு கொண்டு வர முடி யும் என்று நான் நம்புகிறேன்- என்றார். (வ)

## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு — 19ஆம் ஆண்டு



**வைத்திலிங்கம் மதியாபரணம்** — **நாகேஸ்வரி மதியாபரணம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம்
02★ 09★ 1929

மறைவு
10★ 04★ 2012

தோற்றம்
16★ 07★ 1939

மறைவு
24★ 03★ 1994

ஆண்டுகள் பல கடந்தாலும் அழிவுகள் பற்பல வந்தாலும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு ஒருபோதும் அழியாது.
காலன் உங்களைக் கவர்ந்தாலும் உங்கள் நினைவை
எம்மிடம் இருந்து ஒரு போதும் கவர முடியாது
பண்போடும் அன்போடும் வாழ்ந்த உங்கள்
நேசமுகம் என்றென்றும் எம் நினைவுகளுடன் தொடரும்.
ஆண்டவன் மடியில் தவழும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனை வேண்டி கண்ணீர்ப் பூக்கள் இட்டு பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள் (லண்டன்).**

[35456][5.6.7]

## மரண அறிவித்தல்

### திருமதி தனபாக்கியம் இராசையா



சாவகச்சேரி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் நோர்வே (Sandnes) யை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியம் இராசையா 26.03.2013 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ண பிள்ளை -அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கண்மணி, கந்தையா, துரைராசா மற்றும் மனோன்மணி (கிளி-ஊரெழு), லவேந்திரராஜா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், குகனேஸ்வரி(சிறுப்பிட்டி), கமலேஸ்வரி (கனடா), கனகேஸ்வரி(பேபி-நோர்வே), வசந்தி (நோர்வே), தேவபாலன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராஜா(சிறுப்பிட்டி), காலஞ்சென்ற செல்வராஜா (கனடா) மற்றும் யோகலிங்கம் (நோர்வே), ஆனந்த் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆனந்தன்-சரஸ்வதி (சிறுப்பிட்டி), யேந்தினி-சத்தியேந்திரா(சிறுப்பிட்டி), மாலினி- ராகவன் (ஜேர்மனி), ராசன்-விஜிதா (ஆஸ்திரேலியா), பிரபா(கனடா), ஜதீஸ், ஜெனி, ஜொனார்தன்(கனடா), தீபா, துஷ்யந்தன், துஷா, அர்ஜீன், நிஷா அன்டர்ஸ் (நோர்வே), டுலக்சி -டிலான்(நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பரஜீந்த், கஜீபனா (சிறுப்பிட்டி), சினேகா, யுவேதா (சிறுப்பிட்டி), ஜதுசன், மிதுசன், திருஷிகா (ஜேர்மனி), சஞ்ஜெய், அபிஷா(ஆஸ்திரேலியா), மெலிண்டா, செலினா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை( 31.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு Soma Kapell Sandnes என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

தகவல்:
ஜோ. அர்த்தநாரீஸ்வரன்
(அப்பன்)


(27808)(6.7.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க மிரட்டலுக்கு அஞ்சாத வடகொரியா

சியோல், மார்ச் 30

வடகொரியாவை எச்சரிக்கும் வகையில் போர் விமான ஒத்திகை ஒன்றை நேற்று முன்தினம் அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து மேற்கொண்டுள்ளன.



அணு ஆயுதத் தாக்குதல்களில் ஈடுபடும் பி-2 ரக போர் விமானங்களைக் கொண்டே இந்த போர்ப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மிஸ்ஸரி விமானப் படைத் தளத்திலிருந்து புறப்பட்ட இரண்டு பி-2 ரக விமானங்கள் தென்கொரிய வான்வெளியில் பறந்து சென்று நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மீது போலியான குண்டுகளை வீசிப் பயிற்சியில் ஈடுபட்டன என்று அமெரிக்க இராணுவத் தரப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல் நடத்தத் தேவையான ஆயுதங்கள் செய்யப்பட்டு விட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியாவை எச்சரிக்கும் வகையில் அமெரிக்காவும் தென்கொரியாவும் போர்ப் பயிற்சில் ஈடுபடுகின்றன. அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்க நிலைகளைத் தாக்கக் கூடிய வகையில் ஏவுகணைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோன் உன், நேற்றுமுன்தினம் இரவு பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் விசேட கலந்துரையாடலை நடத்தியதுடன், முக்கிய ஆவணமொன்றில் கைச்சாத்திட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது. அந்தக் கலந்துரையாடலின் போது, அமெரிக்காவுடனான கணக்குகளைத் தீர்ப்பதற்கான காலம் கனிந்துள்ளது என்று பாதுகாப்பு அதிகாரிகளிடம் கிம்ஜோன் உன் தெரிவித்திருந்தார் என்று தகவல்கள் கூறுகின்றன. (ற)

# மாலிக்கு தேவை ஐ.நா. படைகள்

## பொதுச் செயலர் பான் கீ-மூன் கருத்து

நியூயோர்க், மார்ச் 30

மாலியில் அமைதியை நிலைநாட்டுவதற்கு ஐ.நா. படையினரின் பங்களிப்பு அவசியம் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ- மூன்.

மாலியில் அல்குவைதா மற்றும் இஸ்லாமிய தீவிர வாதிகளுக்கு எதிராக பிரான்ஸ் மற்றும் மாலிப் படைகள் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன. பெரும்பாலான பிரதேசங்களைப் பிரான்ஸ் தலைமையிலான படைகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளபோதும் தீவிர வாதிகள் மலைப்பிரதேசங்களில் பதுங்கியிருந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், எதிர்வரும் ஜூலை மாதம் மாலியில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதுடன் பிரான்ஸ் அரசும் தனது படைகளைத் திரும்ப அழைப்பது குறித்து ஆலோசித்து வருகின்றது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன்-

''மாலியில் அமைதியை நிலைநாட்ட ஐ.நா. படைகளின் ஒத்துழைப்பு அவசியமாகிறது. அந்த நாடு ஐ.நா. சபையுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். அதன் மூலமே அங்கு அமைதியை நிலைநாட்ட முடியும்.



அந்த நாட்டுக்கு ஐ.நா. படைகளின் உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் சுமார் 11 ஆயிரம் அமைதிப் படையினர் மாலியில் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்''- என்று கூறியுள்ளார். (ற)

# பல்கலைக்கழகம் மீது மோட்டார் தாக்குதல்

## சிரியாவில் 10 மாணவர்கள் சாவு



டமஸ்கஸ், மார்ச் 30

சிரியாவில் பல்கலைக்கழகம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலில் 10 பல்கலைக்கழக மாணவர்கள் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் நிர்மாண வளாகத்தின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் பல மோட்டார் குண்டுகள் வீழ்ந்து வெடித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு சிரிய அரசும், புரட்சியாளர்களும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்தனர் என்றும் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் கூறியுள்ள சிரிய அரச ஊடகம், தாக்குதலை கிளர்ச்சியாளர்களே மேற்கொண்டுள்ளனர் என்று குற்றஞ் சாட்டியுள்ளது.

இதேவேளை, சிரிய உள்நாட்டு மோதல்கள் காரணமாக இதுவரை 70 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா.வால் கணக்கிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# அமெ. உளவுப் பிரிவுக்கு முதல் பெண் தலைவர்

நியூயோர்க், மார்ச் 30

அமெரிக்க உளவுப் பிரிவின் தலைவராக ஜூலியா பியர்சன் என்ற பெண் நியமிக்கப்பட்டுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் உத்தரவுக்கமையவே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது. இதன்மூலம் அமெரிக்க உளவுப் பிரிவின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் முதலாவது பெண் என்ற பெருமையை பியர்சன் பெறுகின்றார்.

இது குறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்-

ஜூலியா இந்தப் பதவிக்கு மிகவும் தகுதியானவர். இவர் நமது நிதி நிலைமையையும் சேர்த்து பாதுகாப்பார் என்று நம்புகின்றோம். அமெரிக்கர்களுக்கு இவர் தகுந்த பாதுகாப்பு அரணாக விளங்குவார் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவில் பியர்சன் நான்கு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# நேட்டோ தாக்குதலில் 20 தீவிரவாதிகள் சாவு

காபூல், மார்ச் 30

நேட்டோ படைகளும் ஆப்கனுத் இணைந்து நடத்திய தாக்குதல் நடவடிக்கையின்போது 20இக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கனின் கிழக்குப் பகுதியில் கடந்த இரு நாள்களாக நடைபெற்ற இந்த நடவடிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை நிறைவுற்றது என்று மாகாண அரசு செய்தித் தொடர்பாளர் தின் முகமது தர்வேஷ் தெரிவித்தார். அந்த நடவடிக்கையின்போது தலிபான் அமைப்பின் உள்ளூர் தளபதி ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தாக்குதலின்போது பராக் மாவட்டத்தில் பொதுமக்கள் இருவர் காயமடைந்தனர் என்று கூறப்படுகிறது.

தாக்குதல் நடவடிக்கையின்போது ஆப்கன் மற்றும் நேட்டோ படை வீரர்கள் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் பற்றி தகவல்கள் வெளியாகவில்லை. (ற)

# பங்களாதேஷ் இராணுவத் தளபதி இந்தியாவுக்கு

புதுடில்லி, மார்ச் 30

பங்களாதேஷ் இராணுவத்தளபதி ஜெனரல் இக்பால் கரீம் பையான், 4 நாள் பயணமாக இந்தியா செல்கின்றார். அந்தப் பயணத்தின் போது இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி, இராணுவத் தளபதி பிக்ரம் சிங் மற்றும் உயர் அதிகாரிகள், அரசியல் தலைவர்களைச் சந்தித்து பையான் கலந்துரையாடவுள்ளார்.

இந்தியா-பங்களாதேஷ் நேச நாடுகளுக்கிடையிலான இராணுவ உறவுகள், அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளை அதிகரிக்கும் நோக்கிலேயே பையானின் இந்தப் பயணம் அமைந்துள்ளது என்று கூறப்படுகிறது.

இதேவேளை, இந்திய இராணுவத் தளபதி பிக்ரம் சிங், கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் பங்களாதேஷுக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)



கிறிஸ்தவர்கள் அனுஷ்டிக்கும் புனித வியாழனான நேற்றுமுன்தினம் பாப்பரசர் முதலாவது பிரான்ஸிஸ் வத்திக்கானில் 12 சிறைக் கைதிகளின் பாதங்களைக் கழுவினார். இயேசு கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் உயிர்ப்பை நினைவுகூரும் புனித வாரம் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. புனித வியாழனன்று கத்தோலிக்க பாதிரியார் [illegible] களைக் கழுவி முத்தமிடுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# விசாரணையைத் தவிர்த்தால் தனிமையாகும் இத்தாலி

## பிரதமர் மரியோ மாண்டி

ரோம், மார்ச் 30

இந்திய மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூடு வழக்கின் விசாரணையை எதிர்கொள்ள கடற்படை வீரர்களை இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருக்காவிட்டால், சர்வதேச அளவில் இத்தாலி தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் என்று தெரிவித்துள்ளார் பதவி விலகவுள்ள அந்நாட்டுப் பிரதமர் மரியோ மாண்டி.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இத்தாலி வெளியுறவுத் துறை அமைச்சர் கியூலியோ டெர்ஜி பதவி விலகியதற்கு கடற்படை வீரர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி வைத்த விவகாரம் மட்டுமே காரணம் அல்ல.

இந்திய மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணையில், இத்தாலி கடற்படை வீரர்கள் ஒத்துழைப்பு அளிக்கவில்லை. அது இத்தாலிக்கு ராஜீய ரீதியாக பெரும் சிக்கலை ஏற்படுத்திவிடும். உலக அளவில் இத்தாலி தனிமைப்படுத்தப்பட்டிருக்கும்.

வளர்ந்து வரும் உலகில் முக்கிய வர்த்தகக் கூட்டாளிகளுடனான உறவுகள் பாதிக்கப்படும். அதேசமயம், இத்தாலி கடற்படை வீரர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி வைப்பதற்கான முடிவை எடுக்க பொருளாதாரம் ஒரு காரணி அல்ல.

இந்த விவகாரத்தில் தெளிவான ஒரு முடிவு எட்டப்பட வேண்டும். மேற்கொண்டு இத்தாலிக்கு அவதூறு ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதுதான் எனது உண்மையான குறிக்கோளாகும்.

கடற்படை வீரர்கள் விவகாரத்தில் இந்தியாவுடன் மறைமுக ஒப்பந்தம் ஏதும் இல்லை. கடற்படை வீரர்கள் விவகாரத்தில் இந்தியாவின் நெருக்கடிகளை இத்தாலி எதிர்கொள்ள நேரிட்டது.

இந்தப் பின்னணியிலேயே கடற்படை வீரர்கள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்- என்று தெரிவித்தார். (ற)

# பிரிக்ஸ் நாடுகளின் புதிய வங்கி

ஜொகன்னர்ஸ்பேர்க், மார்ச் 30

பிரிக்ஸ் நாடுகளான சீனா, இந்தியா, ரஷ்யா, பிரேஸில் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து வங்கி ஒன்றை ஆரம்பிப்பது என்று தீர்மானித்துள்ளன. தென்னாபிரிக்கத் தலைநகர் ஜொகன்னர்ஸ்பேர்க்கில் நடைபெற்றுவரும் 'பிரிக்ஸ்' நாடுகளின் மாநாட்டின் போதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த நாடுகள் கூட்டாகத் தெரிவிக்கையில்-

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்க நாடுகளின் வர்த்தகத்தில் முன்னேற்றம் ஏற்பட பிரிக்ஸ் வங்கி உதவும். 2015ஆம் ஆண்டுக்குள் பிரிக்ஸ் வங்கியின் பொருளாதாரம், அமெரிக்கப் பொருளாதார அளவுக்கு அதிகரிக்கும். 2027 ஆம் ஆண்டுக்குள் 'ஜி-7' நாடுகளின் பொருளாதார நிலைக்கு உயரும். உலக வர்த்தகம் மற்றும் நிதி நிலை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில், இந்த வங்கி பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும்- என்று தெரிவித்துள்ளன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Fujifilm அறிமுகப்படுத்தும் அதிநவீன கமரா

புகைப்படக் கருவிகளை உற்பத்தி செய்வதில் உலகின் முன்னணி நிறுவனமாகத் திகழும் ஜப்பான் நிறுவனமான Fujifilm தற்போது அதிநவீன வசதிகளை உள்ளடக்கியதாகப் புத்தம் புதிய கமரா ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

FinePix XP200 என்ற தொடரிலக்கத்துடன் அறிமுகமாகும் இந்த கமராக்கள் நீருக்கு அடியில் 50 அடிகள் ஆழத்திலும் பயன்படுத்தக்கூடியவாறு காணப்படுவதுடன் -10 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையிலும் இயங்கக் கூடியதாகக் காணப்படுகின்றது.

மேலும் வயர்லெஸ் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள இந்தக் கமராவானது 16 மெகாபிக்சல்களை உடையதாகவும், வீடியோப் பதிவானது செக்கனுக்கு 60 பிரேம்களாகவும் அமைந்துள்ளது.

இதன் பெறுமதி 300 அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




## மடிக்கணினி பற்றரியின் பாவனைக் காலத்தை அதிகரிப்பதற்கு உதவும் அற்புத மென்பொருள்




மடிக்கணினிகளில் பாவிக்கப்படும் மின்கலங்கள் (பற்றரிகள்) விரைவில் பழுதடையக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

இதற்கு தொடர்ச்சியாக மின்கலங்களை மின்னேற்றம் செய்த நிலையில் மடிக்கணினியைப் பயன்படுத்துதல் மற்றும் சரியான முறையில் மின்னேற்றம் செய்யாதிருத்தல் போன்ற காரணங்களாக அமைகின்றன.

எனவே இவற்றைத் தவிர்த்து நேரத்துக்கு நேரம் மின்கலம் தொடர்பான தகவல்களைத் தந்து அவற்றின் பாவனைக் காலத்தை நீடிக்கச் செய்யும் பொருட்டு Battery Optimizer எனும் மென்பொருள் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.

விண்டோஸ் இயங்குதளங்களில் செயற்படக்கூடிய இம்மென்பொருளானது மடிக்கணினியின் மின்கலம் முழுமையாக மின்னேற்றம் அடைந்த பின்னரும், மின்னேற்றம் அற்ற நிலையிலும் அலாரம் மூலம் எடுத்துக்காட்டுவதுடன் மின்கலங்களில் காணப்படக்கூடிய ஏனைய கோளாறுகள் தொடர்பான தகவல்களையும் உடனுக்குடன் தரக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

விண்டோஸ் இயங்குதளங்களில் செயற்படக்கூடிய இம்மென்பொருளானது மடிக்கணினியின் மின்கலம் முழுமையாக சார்ச் அடைந்த பின்னரும், சார்ச் அற்ற நிலையிலும் அலாரம் மூலம் எடுத்துக்காட்டுவதுடன் மின்கலங்களில் காணப்படக்கூடிய ஏனைய கோளாறுகள் தொடர்பான தகவல்களையும் தரக்கூடியது.

## கைபேசிகளுக்கான புத்தம் புதிய Processor அறிமுகம்





தற்போது கைபேசிகளில் பயன்படுத்தப்பட்டுவரும் Processorகளை விடவும் அதிக வினைத்திறன் கொண்ட Processor ஐ Qualcomm நிறுவனம் அறிமுகப்படுத்துகின்றது.

இவை Snapdragon 200, Snapdragon 400 இரண்டு வகையாக தயார் செய்யப்பட்டுள்ளதுடன் முதலில் Snapdragon 400 அறிமுகப்படுத்தப்படும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஸ்மார்ட் கைபேசிகளில் பயன்படுத்தப்படவுள்ள Snapdragon 400 Processor ஆனது 1.2GHz வேகம் கொண்ட Dual Core Processor ஆகவும் அதி உயர் கிராபிக்ஸ் திறன் வாய்ந்ததாகவும் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சம்சுங் அறிமுகப்படுத்தும் ஸ்மார்ட் கைக்கடிகாரம்



கைபேசி உற்பத்தியில் அப்பிள் நிறுவனத்துக்கு சவால் விடும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ள சம்சுங் நிறுவனம் தற்போது கைக்கடிகார உற்பத்தியிலும் அப்பிளுக்கு சவால் விடத் தயாராகின்றது. அதாவது அப்பிள் நிறுவனம் ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாக அறிவித்த சில வாரங்களில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது சம்சுங்.

அவ்வாறு வெளியிடப்பட்டால் உலகுக்கு முதலாவதாக ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை அறிமுகப்படுத்திய [illegible] என்ற பெயரை அப்பிள் நிறுவனமும், சம்சுங் நிறுவனமும் பெற்றுக் [illegible] இவற்றுக்கு மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பும் காணப்படும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மின்சார நுகர்வோர் தேசிய இயக்கம், ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன இணைந்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளன. மின்சாரக் கட்டணங்களை நாளை மறுதினம் முதலாம் திகதி முதல் 50 வீதத்தால் அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வடக்கில் மாகாணசபை அமைத்தால் ஈழம் உருவாகுவதற்கு சாத்தியம்

## குணதாச அமரசேகர எச்சரிக்கை

கொழும்பு,மார்ச் 30

வடக்கில் மாகாணசபை அமைத்தால் அதன் ஊடாக ஈழம் உருவாகுவதைத் தடுக்க முடியாது என்று தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிகாரப் பகிர்வின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்த சில சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன. இந்தச் சதி முயற்சிக்கு இடமளிக்கக் கூடாது.



வடக்கில் மாகாணசபை அமைப்பதானது ஈழ இராச்சியத்தை உருவாக்குவதற்கான பாதையாகக் கருதப்பட வேண்டும்.

அதிகாரப் பகிர்வை நோக்கி நாட்டைத் தள்ளுவதே அமெரிக்கா மற்றும் இந்தியாவின் நோக்கமாக அமைந்துள்ளது.

நாட்டின் உள்விவகாரங்களில் வேறு நாடுகள் தலையீடு செய்வதை அனுமதிக்க முடியாது.

13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதன் மூலம் வடக்கில் ஈழ இராச்சியம் ஒன்றை உருவாக்க முயற்சிக்கப்படுகின்றது.

வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி ஈட்டும்.

அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு கூட்டமைப்பு கோரிக்கை விடுக்கும்.

அதனால் நாடு பிளவடையக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. -என்றார். (ச)

# சர்வதேசத்தில் அரசுக்கு எதிரிகள் தான் அதிகம்

## கரு ஜயசூரிய குற்றச்சாட்டு



கொழும்பு,மார்ச் 30

அரசு நண்பர்களை விட எதிரிகளை அதிகளவில் சம்பாதித்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை திரட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடு சகல வழிகளிலும் சீர்குலைந்துள்ளது. பொருளாதார ரீதியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் சட்டம், ஒழுங்கு இல்லை. அரசு அதிகளவு கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளது என்று அவர் கூறினார்.

அரசு சர்வதேச அரங்கில் நண்பர்களை விடவும் எதிரிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டுள்ளது-என்று அவர் தெரிவித்தார். (ச)

# தப்பிச் சென்றனர் வெளிநாட்டவர்கள்

கொழும்பு,மார்ச் 30

கொழும்பு புறநகர் பகுதியான மிரிஹானை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 வெளிநாட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று குடிவரவு கட்டுப்பாட்டு பணிப்பாளர் சூலாநந்த பெரேரா தெரிவித்தார்.

அண்மையில் படகு பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்ட தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுள் ஐந்து பேரே இவ்வாறு தப்பிச் சென்றுள் ளனர் என்று அவர் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# தமிழகத்தவர்களை நாடு கடத்துங்கள்

## பொறுமைக்கும் எல்லையுண்டு என்கிறார் சோபித தேரர்

கொழும்பு,மார்ச் 30

தமிழகத்தில் இருந்து சுற்றுலா விசா மூலம் நாட்டுக்குள் பிரவேசித்துள்ள அனைவரையும் நாடு கடத்த வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுற்றுலா விசா மூலம் நாட்டில் தங்கியிருக்கும் சகல தமிழகத்தவர்களையும் நாடு கடத்துவதுடன், இந்திய அரசுக்கு இராஜதந்திர ரீதியிலான அதிருப்தி வெளியிடப்பட வேண்டும்.

ஈழ இராச்சியம் தொடர்பில் வெகுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கோரி தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றிய எந்தவொரு அரசியல் வாதியும் இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதிக்கக் கூடாது.



**இந்தியர்களின் சொத்துக்கள் இலங்கையில் இருந்தால் அவற்றை அரசுடைமை ஆக்க வேண்டும்.**

அவர்களின் சொத்துக்கள் இலங்கையில் இருந்தால் அவற்றை அரசுடைமையாக்க வேண்டும்.

தமிழகத்தில் வாழும் இலங்கையைச் சேர்ந்த மாணவர்கள், வர்த்தகர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று இந்திய அரசு இதுவரையில் எவ்வித வாக்குறுதியையும் வழங்கவில்லை.

சிங்கள- பௌத்தர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.-என்றார். (ச)

**புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை**

உங்கள் வீடுகளுக்கான கட்டில், கதிரை, அலுமாரிகள் போன்ற தளபாடங் களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

சிவாஸ் தளபாட விற்பனை நிலையம் ஸ்ரேசன் றோட்,சுன்னாகம்.

077 634 1119 (34981) (5-6-7)

**விற்பனைக்கு**

அரைக்கும் ஆலை ஒன்றில் உள்ள தேங்காய் எண்ணெய், சகல தானியங்களும் அரைக்கக் கூடிய நல்ல நிலையில் உள்ள கிறைண்டர்கள் விற்பனைக்கு உண்டு. (England மோட்டர்கள்)(அத்துடன் கடையும் சகல வசதிகளுடன் வாடகைக்கு விடப் படும்.) (34977)(5-6-7) தொடர்பு: 077 608 1693

**தேவை**

அரைக்கும் ஆலைக்குரிய கிறைண்டர் 2, 15 கோஸ்பவர் மோட்டர்-01 மற்றும் பேக்கரி உபயோகத்துக்கான காஸ் அவன், மா குழைக்கும் மெசின் (5,10 கி.கி) ஆகியன தேவை.

(34979)(5-6-7) தொடர்பு: 077 978 9223

**விற்பனைக்கு**

டொயாட்டா கயேஸ் LH20 மொடல் வான் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0771912554 (34922) (6.7)

**வீடு விற்பனைக்கு**

அராலி வீதி சங்கானையில் பத்துப் பரப்பு காணியுடன் கிணறு சகல வசதிகளுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள நாற்சார வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 1329
077 473 3893
(34899) (6.7) 077 625 3040

**அல்சேஷன் நாய் விற்பனைக்கு**

1½ வயது நிரம்பிய அல்சேஷன் ஆண் நாயும் கூடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: A.G.செல்வர்
(34985)(5-6-7) 107, பேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் மத்தி, கோப்பாயில் நல்ல சுற்றாடலில், குறைந்த விலையில் 2 பரப்பு 12 குளி காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 428 5777,
077 356 1322 (34941)(6.7.11)

**மலேசிய நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு**

பனடோல் கம்பனி, சொக்லட் கம்பனி, பிஸ்கட் கம்பனி ஆகியவற்றிற்கு திடகாத்திரமாய் வேலை செய்யக்கூடிய இளைஞர்கள் 4 பேர் மட்டுமே தேவை.

இம் மூன்று நிறுவனங்களிலும் தொழில் வாய்ப்பு, அதி உயர் சம்பளம். சிங்கப்பூர் நாட்டில் 2 மாதம் Visit சென்று வேலை செய்ய விருப்பமானவர்களும் தொடர்பு கொள்ளவும்.

LANKA VOICE

தொடர்பு: 075 065 0084 (26198)(6.7.11)

**கடைத்தொகுதி வாடகைக்கு**

சுன்னாகம் நகர் மையப்பகுதியில் 3 மாடிக் கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு. (முன்னர் தம்ரோ அமைந்திருந்த கட்டடம்) காட்சியறை மற்றும் அலுவலகங்கள் அமைக்க உகந்தது. (34964) (6.7)

தொடர்பு: 0773854623

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு, கிளுவானை ஒழுங்கையில் 10 ¼ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: [illegible]
(35310) (6.7)

**அகவை அறுபதில் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

30.03.2013 இன்று தனது
அறுபதாம் அகவையில் கால்பதிக்கும்
எமது வித்தியாலய அதிபர்

**திரு. கந்தசாமி வீரசிங்கம்**



அவர்கள் தனது 35 வருட அரச
பணியினின்றும் ஓய்வு பெறும்
இந்த வேளையில் அவர் தனது
குடும்பத்துடன் சகல சௌபாக்
கியங்களும் பெற்று நீடூழி
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**சேவை விவரம்**

| | |
|---|---|
| 1978.04.03 - 1989.05.15 | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 1989.05.15 - 1990.06.30 | க/புசல்லாவ நயாபான தமிழ் வித்தியாலயம் SLTS பிரதி அதிபர் |
| 1990.07.01 - 2003.02.25 | க/புசல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரி SLTS பிரதி அதிபர் |
| 2003.02.26 - 2009.11.12 | க/கம்பளை இந்துக் கல்லூரி SLTS பிரதி அதிபர் |
| 2009.11.13 - 2012.07.02 | க/கம்பளை இந்துக் கல்லூரி SLPS 2 II பிரதி அதிபர் |
| 2012.07.03 - 2012.08.31 | யா/கோப்பாய் மகா வித்தியாலயம் - பிரதி அதிபர் |
| 2012.09.01 - 2013.03.30 | யா/கோப்பாய் மகா வித்தியாலயம் அதிபர் |

(34939)(10,6,7)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கோப்பாய் மகா வித்தியாலயம், கோப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெலிமடை கிராம அலுவலர் சிக்கினார் லஞ்சம் வாங்கி

கொழும்பு,மார்ச் 30

லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் வெலிமடை பிரதேச கிராம சேவகர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பகல் கைதுசெய்யப்பட்டதாக லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அதிகாரி சோமவீர லொக்குகே தெரிவித்தார்.

10 ஆயிரம் ரூபா பணத்தை லஞ்சமாகப் பெற்றபோதே குறித்த கிராம சேவகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிமடை - குருத்தலாவ - கரகஸ்தென்ன கிராம சேவகர், பிரதேசத்தில் உள்ள பெண்ணுக்கு காணி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கவென 25 ஆயிரம் ரூபா லஞ்சம் கோரியுள்ளார்.

அதில் 10 ஆயிரம் ரூபாவை கிராம சேவகர் அலுவலகத்தில் வைத்துப் பெற்றுக் கொண்ட போது அவர் கைது செய்யப்பட்டார் என்று லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விசாரணைப் பிரிவுப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ச)

## முஸ்லிம் வர்த்தக களஞ்சியசாலை மீது இனந்தெரியாதோர் கல்வீச்சுத் தாக்குதல்

### பணியாளர்கள் ஐந்து பேர் காயம்; பொரலஸ்கமுவ பகுதியில் பதற்றம்

கொழும்பு,மார்ச் 30

முஸ்லிம்களுக்கு எதிராக நாட்டில் கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளின் தொடர்ச்சியாக பொரலஸ்கமுவ, பெபிலியானவில் அமைந்துள்ள பிரபல முஸ்லிம் வர்த்தக நிறுவனத்தின் ஆடை விற்பனை நிலையத்தின் களஞ்சியசாலை மீது இனந்தெரியாத நபர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சரமாரியான கல்வீச்சுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலால் களஞ்சியசாலையில் பணிபுரிந்த ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தால் குறித்த பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மக்கள் பதற்றமுற்று ஓடியதால், அந்தப் பகுதியில் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

கல்வீச்சுத் தாக்குதல் நடத்தியதால் களஞ்சிய சாலைக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன தெரிவித்தார். அத்துடன், குறித்த தாக்குதலை நடத்திய சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. குழுக்களாக வந்தவர்கள் குறித்த களஞ்சிய சாலை மீது கற்களை வீசித் தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து. இராணுவம் மற்றும் பொலிஸ் அதிரடிப்படையினரின் உதவியுடன் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதலினால் குறித்த களஞ்சிய சாலையின் உடைமைகளுக்கு பெரும்சேதம் ஏற்பட்டுள்ளன. இதேவேளை சம்பவத்தில் காயமடைந்த களஞ்சியசாலை பணியாளர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரையில் கைதுசெய்யப்படவில்லை. அத்தோடு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

பிரபல முஸ்லிம் வர்த்தக நிறுவனங்களின் காட்சியறைகளில் பணிபுரியும் சிங்களப் பெண்களை, முஸ்லிம்கள் தவறான முறையில் நடத்தி வருகின்றனர்.

இவற்றைத் தாம் இனி மேலும் பொறுத்துக்கொள்ள முடியாது என பொதுபல சேனா அமைப்பு பகிரங்கமாக அறிவித்துவரும் நிலையில், மேற்படி தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மனம் மகிழ
11.12.1924

மனம் நெகிழ
09.04.2012

திதி- திருதியை அபரபக்கம்
(30.03.2013)

நெடுந்தீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
முதலியாகுளம் செட்டி குளத்தில் வசித்து வந்த வருமான
எம்மை வாழ வைத்த தெய்வம்

### அமரர் தனுஸ்கோடி சின்னத்தம்பி

இமைகள் மூடித் திறப்பதற்குள் ஆண்டு ஒன்று சென்ற
தய்யா ஆனால் அன்பின் உருவாய் பண்பின் குல
விளக்காய் பாசத்தின் பொக்கிசமாய் ஊரார்கள் காத்திருக்க
உறவுகள் ஏங்கித் தவிக்க காலனவன் கவர்ந்தாலும்
நாம் வாழும் நாள்களில் உம் நினைவுகள்
எம்முடன் வாழும்

முதலியாகுளம்,
முருகன் கோயில் வீதி,
செட்டிகுளம்.

என்று நினைவில்
மனைவி, மகன், மகள்
மருமகன், மருமகள், பேரன்,
பேர்த்தி, பூட்டப்பிள்ளைகள்.

(34896)(6.7.11)

## திருமலையில் தடுத்து வைக்கப்பட்ட கப்பலை விடுவியுங்கள்

### கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,மார்ச் 30

முன்னர் நீதிமன்ற உத்தரவின் பேரில் திருகோணமலை துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 4 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் தரமற்ற டீசலைக் கொண்டுள்ள கப்பலை, விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

காப்புறுதி நிறுவனம் ஒன்று வழங்கிய உத்தரவாதத்துக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் கொள்வனவு கட்டளைக்கமைய, டீசலை ஏற்றிக் கொண்டு இந் தக் கப்பல் சிங்கப்பூரி லிருந்து இலங்கையை வந்தடைந்தது.

இந்த டீசல் உரிய தரத்தைக் கொண்டிராதமையினால் அதனை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. அதனால் தமக்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான நட்டம் ஏற்படுமெனவும் அதனை ஈடு செய்யும் வரை கப்பலை துறைமுகத்தில் தடுத்துவைக்குமாறும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் நீதி மன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தது.

அதற்கமைய, குறித்த கப்பலை திரு கோணமலை துறைமுகத்தில் தடுத்து வைக்குமாறு கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

எனினும், குறித்த கப்பலை விடுவிக்குமாறு நேற்றுமுன்தினம் உத்தரவிட்ட நீதிமன்றம், மேலதிக விசாரணையை எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது. (ச)

## தரங்குறைந்த தேயிலை மீட்பு

கொழும்பு,மார்ச் 30

கொழும்புத்துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்த 12 மில்லியன் ரூபா பெறுமதியான தரக்குறைவான தேயிலையை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

குவைத்துக்கு ஏற்றுமதி செய்வதற்காக மூன்று கொள்கலன்களில் இந்தத்தேயிலை அடைக்கப்பட்டுக் காணப்பட்டுள்ளது.

பொரலஸ்கமுவையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே இந்தத் தேயிலையை ஏற்றுமதி செய்யவிருந்தார் என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தால் இலங்கையின் உண்மையான தரம்மிக்க தேயிலை பற்றிய தவறான கருத்துக்கு வழிவகுத்திருக்கும் என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

## மரண அறிவித்தல்

### K.K. விஸ்வலிங்கம் சிவசுப்பிரமணியம்



காரைநகர், பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், 45/1, ஓடைலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சிவசுப்பிரமணியம் 26.03.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற குலரட்ணம் மற்றும் பரமானந்தம், தர்மராஜா (சட்டத்தரணி), பஞ்சலிங்கம், கமலாம்பிகை, ராஜேஸ்வரி, திலகவதி, இந்திராணி, சிவபால சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குகநேசபவான் (கனடா), திரவியபவான் (சுவிஸ்), பவளமலர், கோணேசலிங்கம் (லண்டன்), குணமலர் (லண்டன்), பிறைச்சந்திரன், (சுசூரி, உணவகம், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தெய்வராணி (கனடா), வாசுகி (சுவிஸ்), தியாகலிங்கம் (மைலன்ஸ்), பவானி (லண்டன்), சுந்தரேஸ்வரன் (லண்டன்), ரஞ்சிதமலர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விஸ்வரூபன் (State farm, Canada Medical Claim Adjuster), நிஷாந்தன் (BBA, University of Toronto, Canada), விஸ்ணுகா, சஞ்சீவி, சகானா (சுவிஸ்), அருட்சோதி (கனடா), நவசோதி, சுகந்தினி, சிவரூபன் (லண்டன்), விபுசன், கோபி, மயூரி (லண்டன்), ஜெயந்தி, விலூர்தன் (லண்டன்), யதுர்சன் ஆகி யோரின் பாசமிகு பேரனும், சகானா, கவினா (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தில்லை மயானத்தில் (காரை நகர்) தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45/1, ஓடைலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(34945)(10.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



நீங்கள் எம்மைவிட்டு இறை
வனிடம் சென்றீர்கள்
உங்கள் நினைவுகள் என்றும்
எங்களில் அலைபாய்கின்றன
என்றென்றும் உங்கள்
நினைவுகளுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அமரர்

### குழந்தைவேலு சபாபதிப்பிள்ளை

(துங்கோடை, காரைநகர்.)

அன்னாரின் பிரிவால் துயரடைந்திருந்தபோது அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று(30.03.2013) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லடி ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

(சி/7381)(5.6.7)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் இலங்கை மீதான சீனாவின் ஆதிக்கம்

அயல்நாடுகளுடன் எவ்வாறு சுமுகமான உறவைப் பேணுவது மற்றும் அயல்நாடுகள் மீது செல்வாக்குச் செலுத்தக் கூடிய வாய்ப்புக்களைக் கூட எவ்வாறு இழப்பது என்பது தொடர்பாக ஒரு வழிகாட்டல் நூல் இருந்திருந்தால், இலங்கை விடயத்தில் இந்தியா சரியான வகையில் நடந்து கொண்டிருக்கும்.

இலங்கை விடயத்தில் இந்தியா தரை, கடல் மற்றும் வான் ஆகிய மூன்று வழிகளிலும் தனக்கிருந்த செல்வாக்கை இழந்துள்ளது.

இந்தியாவின் இலங்கை மீதான இராஜதந்திர சுய இலக்குகளில் ஏற்பட்டுள்ள இடைவெளியை தற்போது சீனா மிகத் துரிதமாக நிரப்பியுள்ளது.

கடந்தவாரம் இந்தியா இரு வேறுபட்ட பிரச்சினைகளுக்குள் மாட்டிக் கொண்டது.

அதாவது ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் முன்வைக்கப்பட்ட தீர்மானம் மற்றும் மத்தியில் அரசை அமைத்துள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் விலகியமை ஆகிய இரு அழுத்தங்கள் தொடர்பில் இந்தியா முடிவெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது.

இலங்கை மீதான இந்தியாவின் நிலைப்பாட்டை சீனா தனக்கு சாதகமாக்கியுள்ளது.

இலங்கை அதன் தேசிய இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக எடுக்கும் முயற்சிகளுக்கும் ஐ.நா மனித உரிமைகள் சபையால் நிறைவேற்றப்படும் தீர்மானம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் சீனா தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிக்கும் எனவும் தற்போது சீனாவில் புதிதாக பதவியேற்றுள்ள அதிபர் ஜி ஜின்பிங் தொலைபேசி ஊடாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உறுதியளித்திருந்தார்.

ஈழத் தமிழர்கள் விவகாரம் தொடர்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்லாது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் ஏனைய அரசியற்கட்சிகளும் இந்திய மத்திய அரசு மீது அதிக அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன.

இந்திய மத்திய அரசு உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் அழுத்தங்களை ஈடுசெய்து தனது ஆட்சியை நிலை நிறுத்திக் கொள்வதற்காக இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையில் சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான விட்டுக்கொடுப்புக்கள் ஆபத்தை உண்டுபண்ணுகின்ற போதிலும் இந்தியா இதனைச் செய்ய வேண்டியுள்ளது.

எடுத்துக்காட்டாக, இலங்கையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளாது அதனை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என தி.மு.க மற்றும் அ.இ.அ.தி.மு.க போன்ற தமிழ்நாட்டுக் கட்சிகள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

அண்மையில் தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்த இலங்கை யாத்திரிகர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள இலங்கை வர்த்தக நலன்கள் மீதான தாக்குதல்கள் போன்றன சென்னையிலுள்ள இலங்கை தூதரகம் மூடப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அந்த நாட்டு அரசு எடுப்பதற்குத் தூண்டியுள்ளன.

இலங்கை மீதான இந்தியாவின் மூலோபாய மற்றும் வர்த்தக சார் நலன்கள் பாதிக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை சீனா மிக இலகுவாகப் பயன்படுத்துகின்றது.

சீனாவை இலங்கையர்கள் தமது நட்புநாடாகப் பார்க்கின்ற நிலை உருவாகியுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இலங்கையின் மூலோபாய மற்றும் வர்த்தகம் சார்ந்த வடிக்கைகளில் சீனாவின் ஆதிக்கம் அண்மைக்காலத்தில் மிகவும் அதிகரித்து வருகிறது.

எடுத்துக்காட்டாக, சீன உதவியுடன் இலங்கையில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அம்பாந்தோட்டை துறைமுகம் கட்டப்பட்டுள்ளது.

இத்திட்டம் வர்த்தக ரீதியில் பயனற்றது என இந்தியா தட்டிக்கழித்த நிலையில் சீனா இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டது. இந்தியா பாதுகாப்பு மற்றும் வர்த்தகம் சார் விடயங்களைக் கருத்திற் கொண்டே அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை தட்டிக்கழித்திருந்தது.

அண்மையில், சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கியின் உதவியுடன் 206 மில்லியன் டொலர்கள் செலவில் மத்தளையில் கட்டப்பட்ட ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையத்தை அதிபர் ராஜபக்ஷ உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தார். இத்திறப்பு விழாவில் சீன அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

கொழும்பு காலி வீதிக்கு அருகில் முன்னர் இந்திய கலாசார மையம் அமைக்கப்பட்டிருந்த நிலத்தை சீன விமான உற்பத்தி நிறுவனத்திற்கு இலங்கை கடந்த ஆண்டில் விற்றது.

இலங்கையின் இந்நடவடிக்கையால் இந்தியா அதிர்ச்சியுற்றிருந்தது. ஆனால் இது தொடர்பில் இந்தியாவால் எதனையும் செய்ய முடியாதிருந்தது இலங்கைக்குச் சீனா 2007லிருந்து 2 பில்லியன் டொலர்களை கடனாக வழங்கியுள்ளது. ஆனால் இந்தியா 298.1 மில்லியன் டொலர்களை மட்டுமே வழங்கியுள்ளது.

சீனப் பொறியியலாளர்கள் இலங்கையில் வீதிகள், தொடருந்துப் பாதைகள் போன்றவற்றையும் தொலைத் தொடர்பாடல் இணைப்புக்கள், அணைக்கட்டுக்கள், வைத்தியசாலைகள், அரங்கங்கள், பாடசாலைகள், விடுதிகள், அனல் மின்நிலையங்கள் போன்றவற்றையும் புதிதாக நிர்மாணித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு இலங்கை சீனாவின் உதவியுடன் முதலாவது தொடர்பாடல் செயற்கைக் கோளை அனுப்பியது.

அதன் பின்னர் சீன நிறுவனம் இலங்கையுடன் செயற்கைக் கோளை விண்ணுக்கு ஏவுதல் தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

அத்துடன் விண்வெளிக் கற்கை நெறியைக் கற்பதற்கான கல்லூரி ஒன்றையும் சீனா இலங்கையில் அமைப்பதற்கு உதவுகிறது.

தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வலைப்பின்னல்கள் போன்றவற்றை சீனா மற்றும் இலங்கை ஆகியவற்றுக்கிடையில் கட்டியெழுப்புவதற்கான உடன்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் இவ்விரு நாடுகளும் தமக்கிடையில் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான உடன்பாடுகளையும் மேற்கொண்டுள்ளன என அறியமுடிகிறது.


சுருக்கமாகக் கூறின் இலங்கை மீதான இந்தியாவின் நலன் இழக்கப்படுவதானது, சீனா தனது செல்வாக்கைப் பெருக்குவதற்கான சிறந்த வாய்ப்பாக காணப்படுகிறது. இன்று சீனா, இலங்கையில் ஆதிக்கம் செலுத்துகிறது.

இதனால் இலங்கை மீதான இந்தியாவின் மூலோபாய மற்றும் வர்த்தகம் சார் நலன்கள் சீனாவிடம் கைமாறிப் போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது எனக் கூறலாம்.

*(நன்றி: புதினப்பலகை)*

# தென்னையைத் தாக்கும் ‘அசேறியா மயிட்’

■ த.தவரத்தினராசா,
இளைப்பாறிய முகாமையாளர்
(தோட்டங்கள்)
தெ.ஆ.ஸ்தாபனம், லுனுவில



ஆபிரிக்காக் கண்டத்தின் மிக வறண்ட வலய கரையோரங்களில் உற்பத்தியாகி இந்தியா மூலம் இலங்கையின் கரையோரப் பகுதிகளான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், புத்தளம், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களுக்கு வரண்ட காற்றினாலும் மிகு வரட்சியாலும் மிக வேகமாகப் பரவுகின்றது அசேறியா மயிட். தென்னை ஆராய்ச்சி ஸ்தாபனத்தால் 1996, 1997 ஆண்டுகளில் கற்பிட்டி, புத்தளப் பிரதேசத்தில் இப்பரவுகை கண்டுபிடிக்கப்பட்டது.

**மயிட்டின் வகைகளும் அதன் அறிகுறிகளும்**

(Asceria Mite) மயிட்டில் இரண்டுக்கு மேற்பட்ட வகைகளைக் காணக்கூடியதாக உள்ளது.

1 (White Mite) வெள்ளை நிற மயிட்

2 (Red Mite) சிவப்பு நிற மயிட்

இதில் முதலாவது, இளம் குரும்பைகளில் பாதத்தில் காட்டியது போல் ஆரம்பத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த அழிவுக்கு வழி கோலுகின்றது. இரண்டாவது, வட்டம் வட்டமாய்த் தாக்கினாலும் சேதம் அதிகமில்லை. முந்தியது நீள் வெடிப்புக்களும் தேங்காயைப் பாதித்து உற்பத்தியில் 40 வீதம்-45 வீதம் வீழ்ச்சியைக் காட்டும். இது தமிழில் ஒரு கலத்தவர உண்ணி என அழைக்கப்படும். குரும்பையின் முகிழ்ப் பகுதியையே தாக்கித்தங்கும் இயல்புடையது.

**பீடை பைக்கட்டுப்படுத்தலும் இடைக்கால சிபாரிசுகளும்**

இந்த நோய் முதலில் கண்டறியப்பட்டவுடன் தென்னை ஆராய்ச்சி ஸ்தாபனத்தினால் மொனோகுரோட்டபொஸ் என்னும் இரசாயன கிருமிநாசினி கொண்டு மரத்தின் [illegible] ஊசி மூலம் (Trunk Injection) செலுத்தப்பட்டது. இதனால் பெரிய பின் விளைவுகளும் தற்காலிக பலனும், பொருளாதார விரயமும் ஏற்பட்டதனால் ஆரம்பித்து 9 மாதமளவில் மருந்துப் பாவனை முற்றுமுழுதாக இடைநிறுத்தப்பட்டது.

அதன் பின்னர் உள்ளியும், வேப்பெண்ணெய்யும், சவர்க்காரக் கரைசலும் தெளிகருவி மூலம் விசிறப்பட்டது.

பின்விளைவு குறைவு தாக்கமும் மிக சொற்பகாலம்: மூன்றாவதாக எண்ணெய் மற்றும் கந்தகக் கலவை மற்றும் இதர சிபாரிசுகளினாலும் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு மேலும் ஆய்வுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன எனலாம்.

[illegible]

[illegible] லீற்றர் கலவைக்குத் தேவையான பொருள்கள்

★ பாம் எண்ணெய்-200 மில்லி லீற்றர் (1 கப்)

★ நீர்-800 மில்லி லீற்றர் (4 கப்)

★ சவர்க்காரத் தூள் 12 கிராம் (2 நிரம்பிய மேசைக் கரண்டி)

★ கெந்தகத் தூள் 5 கிராம் (1 நிரம்பிய மேசைக் கரண்டி) நீரில் கரையக் கூடியது

1. முதலாவதாக நீரில் சவர்க்காரத்தையும் கெந்தகத் தூளையும் கரைக்கவும்

2. பின் இக் கலவைக்குள் பாம் எண்ணெய்யைக் கலந்து நன்றாக சேர்க்கவும்

கோடை தொடங்கும் காலங்களில் பங்குனி வரையில் முற்றிய காய்களை அறுவடை செய்து 4-3 மாத இடைவெளியில் (Knapsack) நாப்சக் தெளிகருவியில் நீண்ட சிறிய டைப்பினை மூங்கில் தடியில் (Plastic) பொருத்தி விசிறலாம். மரத்தில் ஏறத் தேவையில்லை.

இந்தக் கலவை ஒரு மரத்துக்கு 1 லீற்றர் போதுமானது. விசிறும் போது பூந்துணர் தொடக்கம் 6-7 குலை வரை நனைய விசுறுதல் வேண்டும். இந்தப் பிரயோகத்தின் போது மரத்தின் குருத்தோ, மெல்லிய பூக்களோ தாக்கப்படாது. பீடை மாத்திரம் 90 வீதம் அழிக்கப்படும். அத்தோடு அசேறியா மயிட்டை உணவாகக் கொள்ளும் பூச்சிகளும் அதாவது இயற்கை எதிரிகளும் தாக்கப்படுவதில்லை. அதே நேரம் ஆரம்ப தாக்கத்துக்கு உள்ளான தேங்காய்களும் மின் குணமடையும். அத்தோடு சிறு குரும்பை முகிழ் பகுதியில் உள்ள மயிட்டை உட்செறிந்து தாக்கும். எது எப்படியிருப்பினும் இதன் சுற்றாடல் பகுதியிலும் இவ்வாறு பீடை ஒழித்தல் அவசியம். சிபாரிசுகளும் ஆய்வுகளும் தொடர்கின்றன.

**மேலும் கையாள வேண்டியவை**

1. மரத்தின் அடியில் போதிய ஈரலிப்பை பேணல் வேண்டும். அதாவது தேங்காய் மட்டை புதைப்பது. அடியில் பத்திரக் கலவை இடல் (தென்னை ஓலை)

2 உரப் பாவனையின்போது A.P.M. (முதிர் தென்னைப் பசளை) மியூரேற்றப் பொட்டாசியம் சாதாரண நிலையிலும் 2-5 வீதம் மடங்கு கலந்து பாவித்தல் வேண்டும்.

மேலும் மயிட்டை தேடி உண்ணும் பரசீவிகள் ( Prasite) உற்பத்திச் செயல்கள் மூலம் தெ.ஆ.ஸ்தாபனம் ஊடாக வெளிவரக் காலம் சொல்லலாம்.


3. திருந்திய நோய் எதிர்ப்பு இனங்களும் ஆய்வில் அடங்கும்.

அத்துடன் இந்திய ஆய்வில் (Neem Cake ) வேப்பம் பிண்ணாக்கு நோயுள்ள மரத்தடியில் பிரயோகத்திலும் சிபாரிசில் உண்டு.

அத்துடன் மேலதிகமாக விபரங்களுக்கு உங்கள் பகுதியிலுள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரை நாடுங்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மாமன்ற யாழ். கிளையில் நேற்று சிவதொண்டர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு



யாழ்ப்பாணம், மார்ச் 30

அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்திய சிவ தொண்டர் பயிற்சி கருத்தரங்கு நேற்று வெள்ளிக்கிழமை இந்துமாமன்ற யாழ்.கிளை அலுவலகத்தில் சட்டத்தரணி க.நீலகண்டன் தலைமையில் நடைபெற்றது. ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதசுவாமி மங்கல விளக்கு ஏற்றினார். தொடர்ந்து அவர் நந்திக் கொடியேற்ற, ஆரம்ப உரையை மன்றத்தின் உப தலைவர் ஆறு. திருமுருகன் நிகழ்த்தினார்.

அடுத்து சமயத்தை வழி நடத்துவதற்கான தொண்டுகள், வழிமுறைகள் மற்றும் சமூகத்தில் முன்னெடுக்க வேண்டிய பணிகள், 21ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான சமயப் பணிகள் குறித்து வளவாளராகக் கலந்து கொண்ட ரிஷி தொண்டு நாத சுவாமிகள் கருத்துரை வழங்கினார்.

தொண்டர்களின் கேள்விகளுக்கு தெளிவான பதில்களை வளவாளர்கள் வழங்கினர்.

திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, வன்னி, பொலநறுவை, யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான தொண்டர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர். (ஒ-7)

# மிருசுவிலில் மதுபானசாலை திறப்பதற்கு ஏற்பாடு

### மக்கள் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

உசன் மிருசுவில் பகுதியில் புதிய மதுபானசாலை அமைப்பதற்கு அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அத்துடன் அந்தப் பிரதேசத்தின் கலாசாரத்தை பாதுகாக்க துறைசார்ந்த அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உசன் சந்தி மிருசுவில் பகுதியில் உசன் கெற்பேலி வீதி ஆரம்பிக்கும் இடத்தில் வீடொன்றில் புதிய மதுபான சாலை திறக்கப்படுவதற்கான முன்னேற்பாடுகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

மஹிந்த சிந்தனையின் கீழ் புதிய மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு புதிய மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது என பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது தவசிக்குளம், கெற்பேலி, கச்சாய், பழைய வாய்க்கால், மிருசுவில் பகுதிகளில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதுடன் குழு மோதலும், கலாசார சீரழிவுகளும், குடும்ப வன்முறைகளும் மதுபாவனையால் அதிகரித்துள்ள நிலையில் மிருசுவில் பகுதியில் புதிய மதுபான சாலை அமைக்கப்படுவதால் இன்னும் அதிகளவு கலாசார சீரழிவுகள் ஏற்பட வாய்ப்பாக அமையும் என மக்கள் கூறுகின்றனர்.

புதிதாக அமைக்கப்படும் இந்த மதுபானசாலை பிரதான வீதிச் சந்திகளில் 100 மீற்றர் தூரத்திலும், வணக்கத்தலங்களுக்கு அருகிலும், சாவகச்சேரி பிரதேச சபையின் பொது நூலகத்திலிருந்து 100 மீற்றர் தூரத்திலும், விளை யாட்டுக் கழகம் 100 மீற்றர் தூரத்திலும், இடு காடுகளுக்கு 100 மீற்றர் தூரத்திலும், திருக்குடும்ப கன்னியர் மடச் சிறுவர் பராமரிப்பு நிலையம், மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை, இராணுவ படைத் தலைமையகம் என்பவற்றிலிருந்து 200 மீற்றர் தூரத்திலும், அமைவதாக மக்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் கலாசார சீரழிவை ஏற்படுத்தக் கூடியதாக அமைக்கப்படும் இந்த மதுபானசாலையை அமைப்பதற்கு தடை விதிக்க அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கோரிக்கைகளை வடமாகாண ஆளுநர், யாழ். மாவட்ட அரச அதிபர், சாவகச்சேரி மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி, சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர், சாவகச்சேரி சுகாதார திணைக்களப் பொறுப்பதிகாரி, புனித நீக்கிலார் தேவாலய பங்குத் தந்தை, உசன் கந்தசாமி கோயில் பிரதம குரு, யாழ். மனித உரிமை ஆணைக்குழு ஆணையாளர், கொடிகாமம் பொலிஸ் பொறுப்பதிகாரி, யாழ். பொலிஸ் தலைமையக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மிருசுவில் மதுபானசாலை உரிமையாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளனர். (ந-14,9)

### சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



வெள்ளவத்தை இல 12, பெனிகுயிக் வீதியில் வசிக்கும் செல்வத்துரை நடேசன் கொழும்பு மாவட்ட நீதிவான் ஆர். ஏ.டி.ஜீ.ஈ. ரணவக்க முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரும், கொழும்பு றோயல் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியரும் ஆவார். (எ)

★ ★ ★



இறத்தோட்டை இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும், மாத்தளை கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகவும், அண்மையில் வழங் கப் பட்ட ஜனாதிபதி விருதாகிய ஆசிரியர் பிரதீபா பிரபா கௌரவ விருதினை பெற்றவருமான ந.பி. கிருஷ்ணகுமார் அகில இலங்கை சமாதான நீதிவானாக கண்டி உயர் நீதி மன்ற நீதிவான் ஏ.டி.சி. எஸ். ஹேவாகம முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (ந)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மறைவு 10 * 04 * 2012

தோற்றம் 29 * 05 * 1932



அமரர்

ஞானசேகரம் சரஸ்வதிப்பிள்ளை

நேசத்துடன் எமை வளர்த்து நேர்வழியில் வாழவைத்து
ஆசைக்கனவுகளை அவனியிலே நிறைவேற்றிய
எங்கள் அன்புத் தெய்வமே! இப்பாரினில் நாம் வாழும் வரை
எம் இதயத்தில் இருத்தி எந்நாளும் வணங்குவோம்.

'மலரகம்'
புற்றளை, புலோலி தெற்கு,
புலோலி. 077 711 1688 (35309)(5-7)

குடும்பத்தினர்.
நி.மு.: புலோப்பளை, பளை.


## சொர்ணதானம் பெற விண்ணப்பிக்கலாம்

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு அமரர் சின்னப்பு தம்பதிகளின் நினைவாக அன்ன சொர்ணதானம் வழங்கப்படவுள்ளது.

மாற்று வலுவுள்ளோர், உள நலம் பாதிக்கப்பட்டவர்கள், 15 வயதுக்குட்பட்ட தாய், தந்தை இருவரும் இல்லாத பெண் பிள்ளைகள், பராமரிப்பற்ற வயோதிபர்கள், விவாகம் செய்தும் தனித்து வாழும் 40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இதன் மூலம் பயனடையலாம். இவர்கள் அளவெட்டியைச் சொந்த இடமாகவும், அண்மையில் மீள்குடியேறி வசித்து வருபவர்களுமாக இருக்க வேண்டும். சொர்ணதானம் பெறத் தகுதியுடையோர் எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதிக்கு முன்னர் திருமதி விக்னேஸ்வரி கந்தையா, எம்.பத்மநாதன் ஓய்வு பெற்ற உப அதிபர், அளவெட்டி அருணோதயக் கல்லூரி, அருளம்பலம் ஓய்வு பெற்ற உப அதிபர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆகியோரிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். (ந-36)

### சுதர்சனக் கிரியாவும் ஆன்மிக விளக்கமும்

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணி தொடக்கம் 8.45 மணிவரை நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் பூஜ்ய ஸ்ரீலஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் பிரதம சிஷ்யர்களில் ஒருவரான சுவாமி நிர்மலானந்ஜியால் சுதர்சனக் கிரியாவும் ஆன்மிக விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன. வாழும் கலை அடிப்படைப் பயிற்சி எடுத்தவர்கள் இதில் கலந்து பயன்பெறலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம)

### கைவினையாளர்களுக்கான விசேட செயலமர்வு

யாழ். மாவட்ட கை வினையாளர்களுக்கான விசேட செயலமர்வு எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பன்னவேலை, தோற்பொருள் உற்பத்தி, சிலை வடிவமைப்பு, வார்ப்புச் சிற்பங்கள், செதுக்கற் சிற்பங்கள், தையல் வடிவமைப்பு போன்ற துறைகளின் கைவினையாளர்கள் மற்றும் ஏனைய கைவினையாளர்களையும் இதில் பங்கு பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வில் கைவினையாளர்களை பதிவு செய்தல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. தேசிய அருங்கலைகள் பேரவையின் மாகாண மற்றும் தேசிய மட்ட கைவினை கண்காட்சியை முன்னிட்டு இந்த செயலமர்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

### கண்காட்சி

வல்வை கணபதி பாலர் பாடசாலை மாணவர்களது கல்விசார், மற்றும் கைவினைப் பொருள்களின் ஆக்கக் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (ந)


## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு -09.09.1920
இறப்பு -09.04.2012
திதி 30.03.2013

அமரர்
சுப்பிரமணியம் சுந்தரம்மா

பொறுமைக்கு அணிகலனாகத் திகழ்ந்த
எங்களது அருமைத் தெய்வமே அம்மா!
ஓர் ஆண்டு அல்ல, எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களது நினைவுகள் எம்மை விட்டு அகலாது அம்மா
உங்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(34968)(6,7)

நந்தாவில், களபூமி, காரைநகர். குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19.04.1932



மறைவு 01.04.2010

அமரர் சின்னத்தம்பி பாலசிங்கம்
திதி:- திருதியை, 30.03.2013

முற்றத்தில் நிற்பது போல் முகம் மலர்ந்து சிரிப்பது போல்
பக்கத்தில் இருந்து பல கதைகள் சொல்வது போல்...
கண் முன்னே காட்சி பல விரிகிறதே
அன்பான அப்பாவே நீங்களின்றி
மூன்றாண்டுகள் கழிந்தனவோ?
துயர் சுமக்கும் இதயத்துடன்
விழி நீர் சொரிகின்றோம்.
இன்றைய நாளில்உங்கள் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்

20, பீ.ஏ.தம்பி லேன்,
வண்ணார்பண்ணை. (34960) (6.7.11)

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08 * 04 * 1957

மறைவு 18 * 02 * 2012

திதி: திருதியை

அமரர் நடராஜா மனோகரதாஸ்

கண்ணை இமை காப்பது போல எமைக்காத்து வந்தீரே
கனவு கலைவது போல் நினைவில்
எமைவிட்டு கலைந்து சென்றீரே
கோயில் கட்டித் தந்து அதில்
நீங்கள் தான் கடவுள் என சொல்லாமல்
சொல்லிவிட்டு சென்றீரே
நீங்கள் எம்மை விட்டு சென்று
ஓராண்டு ஆகிவிட்டது என்பதை
என்னால் நம்ப முடியவில்லையே
என் பெரியப்பா!

அல்லாரை, வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம். (34972)(5-6-7)

பாசமிகு அன்பு மகன்
கனிஸ்ரன்
(தாசன் சலூன் பங்காளர்),
சகோதரன்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தின் மகுடம் கண்காட்சி நிறைவு நாள் நிகழ்வு இன்று

## பிரதம விருந்தினர்களாக பிரதமர், பாதுகாப்புச் செயலர்

அம்பாறை,மார்ச் 30

அம்பாறையில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்று வரும் ஏழாவது தேசத்தின் மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி இன்று சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. இன்றைய நிறைவு நாள் வைபவத்தில் பிரதமர் டி. எம். ஜயரட்ன, பாதுகாப்பு மற்றும் நகர அபி விருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

தேசத்தின் மகுடம் கண்காட்சி ஏற்பாட்டுக் குழு தலைவர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் இன்று நடைபெறவுள்ள நிறைவு நாள் நிகழ்வில், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் உட்பட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், முக்கி யஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கண்காட்சி நடைபெறும் ஹாடி உயர் தொழில்நுட்ப வியல் நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதான மேடையில் நிறைவு நிகழ்ச்சிகள் இடம்பெற வுள்ளன. பிரதமர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரின் வருகையைத் தொடர்ந்து நிறைவு நாள் பிரதான வைபவம் ஆரம்பமாகவுள்ளது.

தேசத்தின் மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி கடந்த 23 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. கண்காட்சி ஆரம்பிப்பதை குறிக்கும் வகையில் கண்காட்சி பிரதான மேடைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் ஜனாதிபதியினால் வைக்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட வாள் தேசத்துக்கு மகுட கண்காட்சி நிறைவை அறிவிக்கும் வகையில் பிரதமரினால் அமைச்சர் சியம்பலாப்பிட்டியவிடம் மீண்டும் கையளிக்கப்படும். அதனைத் தொடர்ந்து கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. பின்னர் பிரதமர் மற்றும் பாதுகாப்புச் செயலர் ஆகியோர் காட்சிக் கூடத்தை பார்வையிடுவர். இதேவேளை ஆறாவது நாளான நேற்றுமுன்தினம் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள், மாணவர்கள் வருகை தந்து காட்சியை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



கண்காட்சிக் கூடங்களை பார்வையிடத் திரண்டிருந்த மாணவர்கள்....



துணுக்காய் அம்பலப்பெருமாள்குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள்.



கிளிநொச்சி ஐயனார்புரம் அ.த.க. பாடசாலையின் இந்த ஆண்டுக்கான மாணவர் தலைவர்கள் அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர்.



ஸ்கந்தபுரம் இல-4 பாடசாலையில் திறந்து வைக்கப்பட்ட சிறுவர் பூங்காவில் சின்னஞ்சிறுசுகள் கூடி மகிழ்வு.

ஓம் சக்தி

வவுனியா ஸ்ரீ அபிராமி உபாசகி அம்பாள் ஆலய

புனருத்தாரண கும்பாபிஷேக விழா



பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

தனம் தரும், கல்வி தரும், ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே,
கனம் தரும் பூங் குழலாள், அபிராமி, கடைக்கண்களே.

காலம் : 31.03.2013

அம்பிகை அடியார்களே.

நீர் வளமும் நிலவளமும் நிறைந்த வவுனியா மாநகரில் கலியுகத் தெய்வமாக தான்தோன்றியாகத் தோன்றி, அடியார்களின் ஆன்மீ கத் தாகத்தை தீர்த்துவரும் ஸ்ரீ அபிராமி உபாசகி அம்பாளின் புனருத்தாரண கும்பாபிஷேக விழா நிகழும் நந்தன வருடம் பங்குனி மாதம் 31.03.2013 ஞாயிற்றுகிழமை நடைபெறுவதற்கு அபிராமி உபாசகி அம்மையாரின் ஆசீர்வாதமும் அம்பாளின் திருவருளும் கைகூடியுள்ளது.

இவ்விழா மு.ப. 10 மணிக்கு யாக பூஜையுடன் ஆரம்பமாகி, அதனைத் தொடர்ந்து விஷேடமாக அபிஷேகங்களும் இடம் பெற்று, அதனைத் தொடர்ந்து விஷேட தீப ஆராதனைகள் நடைபெறுவதுடன் சர்வமங்கள வாத்தியங்களுடன் இவ்விழா வெகுசிறப்பாக நடைபெறும். அதனைத் தொடர்ந்து உலகளாவிய அடியார்கள் அபிராமி அம்பாளின் இஷ்ட சித்திகளை பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு
- மங்கள வாத்தியக் கச்சேரிகள் இடம்பெறும்.
- பால் செம்பு எடுக்கும் பக்தர்கள்(பெண்கள்) பெயர்களைப் பதிவு செய்யவும்.
- அன்றைய தினம் அன்னதானம் வழங்கப்படும்.

மங்கள வாத்தியங்கள்

நாதஸ்வரம் : இ. ராஜ்குமார், ச. ஐங்கரன், க. பவித்திரன்

தவில்: இ. முருகானந்தம், ந. அம்பிகைபாலன்,

பூக்கள் மற்றும் அபிஷேகத் திரவியங்கள் அன்னதானப் பொருள்கள் பூஜை நேரத்திற்கு முன்பாகக் கொடுத்து உதவுமாறு வேண்டுகின்றோம்.

ஆலயத் தொடர்புக்கு:
Tel: 0045 97180192
0045 40413431
Fax: 0045 97184192
www.abiramiamman.dk

தொடர்புகளுக்கு : 0776 993861, 0777 882498,

(C7228)(10.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். வியாபாரத்தில் இருந்து வந்த தேக்கநிலை மாறும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிட்டும். அயல் வீட்டாரின் ஆதரவு உண்டு.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்..

**மிதுனம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**கடகம்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். சகோதரவகையில் நன்மை பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**சிங்கம்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். வாகனச் செலவுகள் குறையும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தாயின் உடல் நிலை சீராகும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

## நாளை

பங்குனி-18 ஞாயிற்றுக்கிழமை 31.03.2013
திதி: சதுர்த்தி மு.ப. 08.55 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.ப. 06.50வரை
சுபநேரம்: 09.11- 10.41 வரை
இராகுகாலம்: 04.41- 06.11 வரை

**துலாம்:** மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் சுட்டிக் காட்டினால் அமைதியாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:** வேலைச்சுமையால் சோர்வாகக் காணப்படுவீர்கள். உறவினர், நண்பர்கள் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியத்தைத் தவிர்க்கவும். பேச்சில் காரம் வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**தனுசு:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**மகரம்:** மனநிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உறவுகளின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கிடைக்கும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும்.முன்கோபம் விலகும். அரச பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்.

**மீனம்:** விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தினரைக் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக முடிவெடுக்க வேண்டாம். யாரும் உங்களை புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 6 | 8 | 3 | 2 | 9 | | |
| | | 8 | 9 | 7 | | 3 | | 6 |
| 9 | | | | | 5 | | 8 | |
| | 8 | | | | | | | |
| 7 | 6 | | 5 | | 3 | | 4 | 1 |
| | | | | | | | 3 | |
| | 9 | | 1 | | | | | 3 |
| 5 | | 2 | | 9 | 8 | 7 | | |
| | | 7 | 4 | 2 | 6 | 1 | 9 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 8 | 5 | 9 | 6 | 7 | 1 | 4 |
| 6 | 9 | 1 | 3 | 4 | 7 | 5 | 8 | 2 |
| 5 | 7 | 4 | 1 | 2 | 8 | 3 | 6 | 9 |
| 1 | 4 | 7 | 9 | 6 | 5 | 2 | 3 | 8 |
| 3 | 5 | 6 | 2 | 8 | 4 | 1 | 9 | 7 |
| 8 | 2 | 9 | 7 | 1 | 3 | 6 | 4 | 5 |
| 9 | 1 | 3 | 8 | 7 | 2 | 4 | 5 | 6 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 8 | 2 | 1 |
| 4 | 8 | 2 | 6 | 5 | 1 | 9 | 7 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டிப்பாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு
23★ 01★ 1988

அரக்கர்களின் அழிப்பு
14★ 02★ 2013



## துரைராஜசிங்கம் துரேந்திரா

(H.N.B. ஊழியர்)

ஆண்டவனின் அருளால்
ஆளவந்த முத்தே
அரவணைத்த உறவுகளை
அரைகுறையில் விட்டாயே!
லொறி மூலம் வந்த அரக்கர்களால்
பறிக்கப்பட்ட எம் சொத்தே
பாதி வழியில் நீ
எம்மை விட்டுச் சென்றாயே!

எமது அன்புச் செல்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து பல வழிகளிலும் உதவி செய்தோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலைவாணி வீதி, சித்தன்கேணி. (21139)(45-6-7) குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மண்மகிழ
21.05.1931



கண்நெகிழ
28.02.2013

## அமரர் விஸ்வநாதன் பாலசுப்ரமணியம்

நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமா எம்துயர்.


உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 28.02.2013 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் விஸ்வநாதன் பாலசுப்ரமணியம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (30.03.2013) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனி.

கல்லூரி வீதி,
மானிப்பாய். (34852) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் உயர்மட்டக் குழுவொன்று சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை அங்குரார்ப்பணம் தொடர்பாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியது. இதன் போது சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் உட்பட சங்க முக்கியஸ்தர்கள் அரச அதிபருடன் காணப்படுகின்றனர். (ச-30)

# வடக்கு, கிழக்கைப் பிரித்த பின்னரே சிறுபான்மையினருக்கு அடக்குமுறை

## பேரினவாதிகளால் காணிகள் அபகரிப்பு என்கிறார் லோகநாதன்

யாழ்ப்பாணம், மார்ச் 30

வடக்கும் கிழக்கும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்ட பின்னரே சிறுபான்மை இன மக்கள் அடக்கு முறைகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் கூறினார்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கும்கிழக்கும் இணைந்திருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே எமது சங்கம் தொடர்ந்தும் இருந்து வருகின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்று எட்டப்படும் பொழுது இணைந்த வடகிழக்கில் மாநில சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம்.

மக்களின் காணிகள் பேரினவாதிகளால் அபகரிக்கப்படுவதோடு அவர்கள் இனவாத நெருக்குதல்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். பௌத்த பேரின வாதத்தின் வேண்டத்தகாத செயற்பாடுகளும் தமிழர் பகுதிகளில் விஸ்வரூபம் பெற்று தலைவிரித்தாடுகின்றன.

எனவே வடக்குக் கிழக்கில் மக்கள் நிம்மதியாக வாழவும் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படவும் வடக்கு கிழக்கு இணைப்பு மிக அவசியமாகும்.- என்றார். (ச-30)

### மட்டக்களப்பு மாநகர சபை உட்பட

# 9 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் வட்டார முறையில்

மட்டக்களப்பு,மார்ச் 30

மட்டக்களப்பு மாநகர சபை உட்பட ஒன்பது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள், வட்டார முறையின் அடிப்படையில் இடம்பெறவுள்ளன என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி சட்டவரைவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் புதிய திருத்தத்தின் அடிப்படையில் வட்டார முறையிலேயே ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களும் நடத்தப்படும் என்று பிரதித் தேர்தல் ஆணையாளர் ஏ.மொஹமட் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பிலான அறிவிப்பை அரசே மேற்கொள்ள வேண்டும். அதுவரையில் தேர்தல் திணைக்களத்தால் தேர்தல் தொடர்பிலான எந்தவித முடிவுகளையும் எடுக்க முடியாது.

மட்டக்களப்பு மாநகர சபை, ஏறாவூர்பற்று பிரதேச சபை, கோரளைப்பற்று பிரதேச சபை, கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபை, மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபை, மண்முனைப் பற்று பிரதேசசபை, மண்முனை மேற்கு பிரதேச சபை, மண்முனை தென்மேற்கு பிரதேச சபை மற்றும் போரதீவு பற்று பிரதேசசபைஆகியஉள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் நிறைவடைந்துள்ளன.

இந்த ஒன்பது சபைகளினதும் பதவிக் காலமும் கடந்த வருடம் மார்ச் மாதத்துடன் முடிவடைந்தது. எனினும் மேலும் ஒரு வருடத்துக்கு அவற்றின் பதவிக் காலம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சால் நீடிக்கப்பட்டன.

அதற்கமைய இந்த ஒன்பது உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் கடந்த மார்ச் 17ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது. இதனையடுத்து மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளரின் கீழும் ஏனைய எட்டுப் பிரதேச சபைகளும் பிரதேச செயலர்களின் நிர்வாகத்தின் கீழும் கொண்டு வரப்பட்டுள்ளன. இது தொடர்பாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சால் கிழக்கு மாகாண பிரதம செயலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.- என்றார். (ச)

# ரணில் மட்டக்களப்பு பயணம்

மட்டக்களப்பு,மார்ச் 30

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று சனிக்கிழமை மட்டக்களப்புக்குச் செல்லவுள்ளார்.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்த பொதுக் கூட்டம் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ கட்டடத்தில்இன்று நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளார். இந்தக் கூட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராயப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)


# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**கந்தையா மகாலிங்கம்**

அமரர்
**மகாலிங்கம் புவனேஸ்வரி**

| | | |
|---|---|---|
| 04.01.1933 | மலர்வு | 09.01.1944 |
| 01.03.2008 | உதிர்வு | 30.03.2008 |

**30.03.2013 சனிக்கிழமை**

எம்மைப் பெற்றெடுத்த ஆருயிர் தெய்வங்களே...
எங்கு சென்றீர்கள் ! ... எங்கு சென்றீர்கள் !...
மண்ணுலகு வேண்டாமென்று ... விண்ணுலகு சென்றீர்களோ...
நீங்கள் பெற்றெடுத்த செல்வங்கள் - நாம் இங்கு வேதனையில் துவழ...
ஆண்டுகள் ஐந்து சென்று விட்டன... ஆனாலும், என்றும் எம்முன் நீங்கள்...

உங்கள் முத்துப் பிள்ளைகள் மூன்றும் தவிக்க ...
மருமகனாய் வந்த மகனும் தவிக்க ...
முத்துக்களாம் அழகான பேரப்பிள்ளைகளும் ஏங்கித் தவிக்க ...
எங்கு சென்றீர்கள் ... எங்கு சென்றீர்கள்! ...
நீங்கள் விண்ணுலகு சென்றாலும் - என்றும் எம் வாழ்வில் நிலைத்தீர்கள் ...
எமது அன்பின் அப்பாவே ! ... எமது ஆருயிர் அம்மாவே !
உங்கள் ஆசிகள் என்றும் எமக்குண்டு.





கரவிழிகளுடன் எங்கள் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரநாதனையும்,
வண்ணை வெங்கடேசப் பெருமானையும் வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

இல. 148, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

(C/7363)(10,6,7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழுதான பஸ்களை சேவையிலிருந்து நிறுத்த பொலிஸாரே நடவடிக்கை எடுக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,மார்ச் 30

பழுதடைந்த பஸ்களை சேவையில் இருந்து இடை நிறுத்துவதற்குரிய நட வடிக்கைகளை வீதிப் போக்கு வரத்துப் பொலிஸாரே மேற் கொள்ள வேண்டும் என்று தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவர் பொ. கெங்காதரன் தெரிவித்தார்.

**தனியார் பஸ் சங்கத்தின் இணையத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பஸ்களில் 60 வீதமான பஸ்களே நவீன நிலையில் உள்ளன. மீதி 40 வீதமான பஸ்கள் பழுதடைந்த நிலை யிலேயே சேவையில் ஈடுபடுகின்றன.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனியார் பஸ் சங்கத்தின் இணையத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பஸ்களில் 60 வீதமான பஸ்களே நவீன நிலையில் உள்ளன. மீதி 40 வீதமான பஸ்கள் பழுத டைந்த நிலையிலேயே சேவையில் ஈடுபடுகின்றன.

இந்த பஸ்களை சேவையில் இருந்து இடைநிறுத்த சங்கம் நடவடிக்கை எடுக்க முடியாது. இதன் காரணமாக பஸ் உரிமையாளர்களுடன் சங்கம் முரண்பட வேண்டிய நிலை ஏற்படும்.

இது தொடர்பாக பொது மக்களால் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளன. வீதிப் போக்குவரத்து பொலிஸாரே இதனைக் கண்காணித்து பஸ்களை தற்காலிகமாக சேவையில் இருந்து இடை நிறுத்தி, உரிமையாளர்கள் பஸ்களை நல்ல நிலையில் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பழுதடைந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுவதால் பயணிகள் பல்வேறு அசௌ கரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக பஸ்கள் சேவையின் போது இடைநடுவில் பழுதடைந்து நிற்பதால் பயணிகளது போக்கு வரத்து நேரம் விரயமாக்கப்படு கிறது.

இதனைவிட கர்ப்பிணிப் பெண்களும், முதியவர் களும் ஆசனங்களில் அமர்ந்து செல்ல முடியாது இருக்கை கள் பழுதடைந்து காணப்படு கின்றன.

இவ்வாறு பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற் படுத்தும் பஸ்களை பரி சோதித்து நல்ல முறையில் சேவையில் ஈடுபடுத்த வேண் டிய பொறுப்பு வீதிப்போக்கு வரத்துப் பொலிஸா ருக்கே உரியது எனவும் தெரிவித்தார். (ந-14)

## கட்டாக்காலிகளால் பயிர்ச்செய்கை அழிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 30

அராலியில் கட்டாக் காலி களால் சிறு தானிய பயிர்ச் செய் கையாளர்கள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர்.

கால்நடைகளை வளர்ப் போர் மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடுவதனால் விவசாயி களின் சிறுதானிய பயிர்கள் முற்றாக அழிவடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வீதிகளிலும் பொது கட்டடங்களிலும் தங்கி கட்டாக்காலிகளாக திரியும் கால்நடைகளால் சிறு தானி யப் பயிர்கள் அழிவடைகின் றன.

இதனால் அராலிப் பகுதி விவசாயிகள் தமது முறைப் பாட்டை கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலருக் கும் விவசாய சம்மேளனங் களுக்கும் தெரிவித்துள்ள னர். (எ-50)

## ஆண்டு விழாவும் ஈஸ்ரர் கலை நிகழ்வும்

கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு விழாவும், ஈஸ்ரர் கலை நிகழ்வுகளும் நாளை ஞாயிற்றுக் கிழமையும், நாளை மறுதினம் திங்கட்கிழமையும் யாழ்ப் பாணம் மத்தியூஸ் வீதி நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தின் தலை வர் லிகோறி நிர்மலன் தலைமையில் நடைபெறும் . (ந-13)

## பற்றைக் காடாக நவாலி மயானம்

யாழ்ப்பாணம்,மார்ச் 30

நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானம் மீள்புனரமைப்பு இன்றி பற்றைக்காடாக காணப் படுகிறது.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக மேற்படி நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானம் மீள் புனரமைப்பின்றி காணப்படுகின்றது.

மேற்படி மயானத்தை புனித பூமியாக்கி சுற்று மதில் அமைத்துத் தருமாறு பொது அமைப்புக்கள் சபைத் தலைவரின் கவனத் துக்கு கொண்டு வந்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக் கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-50)

**விற்பனைக்கு**

17-XXXX தொடரிலக்கமுடைய MAZDA(JAPAN) Model கார், புதிய Wheel Chair என்பன விற்பனைக்கு உண்டு.

(35455) (5-6-7) தொ.பே: 021 222 7093,077 175 1393

**கருங்கல்**

சான்பிளாஸ்ட் மூலம் எழுத்துக்கள் பொறித்து வழங்க 1 சதுர அடிக்கு கல்லுடன் 3500/= மட்டுமே

S.S.JASOTHARAN ARTS

0777 110 610

**தேவை**

புதிதாக திறக்கப்படவுள்ள Bicycle, Baby Items விற்பனை காட்சியறைக்கு ஆங்கிலம், கணினி அனுபவமுள்ள பெண்கள் தேவைப்படுகிறார்கள். நேர்முகத் தேர்வு சனிக்கிழமை (30.03.2013) மாலை 3.00 - 5.00 மணிவரை, ஞாயிற்றுக்கிழமை (31.03.2013) காலை 10.00 - 12.00 வரை நடைபெறும். சுயவிவர கோவையுடன் நேரில் வரவும். (சி/7230) (6.7)

இல: 30, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்.

0778 485 858

**பணியாளர் தேவை**

புத்தகக் கடைக்கு பணியாளர் தேவை. O/L.A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது. சுயவிவரக்கோவையுடன் நேரில் சமுகம் தரவும். தொடர்பு: BOOK LAB,

இல. 20,22, சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

(35461) (5-6-7) 021 222 7290, 077 200 2015

ALL OUT

Pest control service




தொடர்புகளுக்கு

ந.ருபகாந்த் : 0771515897 , கு.கிருஷாந்தன் : 0771588022




Email : pestcontrolallout@gmail.com

140/12 நான்காம் குறுக்குத்தெரு , யாழ்ப்பாணம். (35460) (45.6.7)

**நீங்காத நினைவுகள்**

திதி:சதுர்த்தி

30.03.2013




அமரர் கந்தசாமி தர்மராசா

05 ம் ஆண்டு நினைவு தினம்

வையத்துள்:09.01.1934

தெய்வத்துள்:26.03.2008





அமரர் தர்மராசா கனகாம்பிகை

15 ம் ஆண்டு நினைவு தினம்

வையத்துள்:13.04.1935

தெய்வத்துள்:02.11.1997

வாழ்வாங்கு வாழ உயிர் தந்தாய்...உறவென்னும் உடல் தந்தாய்...
கல்வியெனும் சிறகு தந்தாய்..பண்பெனும் மாலை தந்தாய்...
அன்பெனும் ஆடை தந்தாய்...ஏற்றம் எனும் ஏணி தந்தாய்...
உருவத்தெய்வமாய் எம்முடன் இருந்தாய்...அருவத் தெய்வமாய் சடுதியில் வானுறைந்தாய்...
மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய் ...ஏழேழு ஜென்மங்களிற்கும் உம்...
மக்களாய் தோன்றும் வரம் தருவாய்...

பிளாக் வீதி
சங்கானை

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்
Computer World

(35458)(6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் உடன் பதவி விலக வேண்டும்

## ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு,மார்ச் 30

வெளியுறவுக் கொள்கைகளை முறையாகக் கடைப்பிடித்து சர்வதேச நாடுகளுடன் நட்புறவைப் பேணும் இராஜதந்திரம் தெரியாத வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், தமது தோல்வியை ஒப்புக்கொண்டு உடன் பதவி விலகவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் நவநீதம் பிள்ளையுடன் இலங்கை அரசு இணக்கப்பாட்டுடன் செயற்பட்டிருக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய ஐ.தே.கவின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, இலங்கைக்கு எதிராக அதிகரித்து வரும் தமிழக எதிர்ப்புகளும் இந்தியாவின் ஆதரவற்ற போக்கும் சர்வதேச ரீதியில் நாட்டுக்குப் பெரும் அழுத்தங்களை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் கொழும்பிலுள்ள தொழிற்சங்கப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழகத்தில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகள், இலங்கைக்கு ஆதரவற்ற வகையிலான இந்திய அரசின் போக்கு ஆகியவற்றுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸே முழுக் காரணம். இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுடன் பேச்சு நடத்திய அமைச்சர் ஜி.எல். பீரிஸ், 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றார். இதனையடுத்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அப்படி எதுவும் கூறவில்லை என்று ஓரிரு தினங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார். இதுதான் இந்திய அரசின் கோபத்துக்குக் காரணம்.

**ஜி.எல்.பீரிஸ் உடன் பதவிவிலக வேண்டும்**

சர்வதேச நாடுகளுடன் நட்புறவைப் பேணும் கொள்கைகளைக் கையாளும இராஜதந்திரம், வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்குத் தெரியாது. அதுமட்டுமல்ல, இந்த அரசுக்கே இராஜதந்திரம் என்றால் என்ன என்பது தெரியாது. இலங்கைக்கு எதிராக அதிகரித்துவரும் தமிழகத்தின் எதிர்ப்பு சர்வதேச ரீதியில் நாட்டுக்குப் பெரும் அழுத்தத்தைக் கொடுக்கும்.

தனக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பொறுப்புகளை யேற்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸால் செயற்பட முடியாது. அதனால் தான் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோதுகூட அதில் கலந்துகொள்வதைத் தவிர்த்து இவர் இலங்கையிலேயே இருந்தார். எனவே, தனது தோல்வியை ஏற்றுக் கொண்டு அவர் உடன் பதவிவிலக வேண்டும்.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவந்த பிரேரணைக்கு பேரவையில் உறுப்பு நாடுகளல்லாத 43 நாடுகள் இணை ஆதரவு வழங்கியிருந்தன. இவ்வாறான நிலையிலும் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான அழுத்தங்களைத் தணிக்க இலங்கை அரசு எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஐ.நா. கூட்டத் தொடர் நடைபெறுவதற்கு முன்னர் சர்வதேச நாடுகளிடம் சென்று இலங்கை ஆதரவைப் பெற்றிருக்கவேண்டும். ஆனால் அரசு அவ்வாறு செய்யவில்லை. அதனால் தான் எமக்கு சர்வதேச ஆதரவு கிடைக்கவில்லை.

**19 தூதரகங்களில் இராணுவ உயர திகாரிகள்**

19 நாடுகளில் இலங்கைத் தூதர்களாக இராணுவ உயரதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டுடன் தொடர்பை ஏற்படுத்தும் இராஜதந்திரம் இவர்களுக்குத் தெரியுமா? இராணுவத்தினர் என்ற வகையில் கண்டிப்புடன் செயற்படத்தான் இவர்களுக்குத் தெரியும். இராஜ தந்திரம் வேறு, இராணுவ மயம் வேறு. ஆனால் இந்த அரசு இதைக் கூட பிரித்தறிய முடியாதுள்ளது. 19 நாடுகளில் இலங்கைத் தூதர்களாக இராணுவ உயர் அதிகாரிகளை அரசு நியமித்ததில் எந்தப் பயனும் இல்லை. இராஜ தந்திர யுக்திகளைக் கையாளும் திறமை மிக்க இராஜதந்திரிகள் நாட்டில் இருக்கின்றபோதிலும், அவர்களிடம் இந்தப் பொறுப்புகளைக் கையளிக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் முன்வைக்கும் கருத்துகள் எமக்கு ஏற்றுக் கொள்ள முடியாதவையாக இருப்பினும், அவருடன் நாம் இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டும். ஏனெனில், இன்னும் நான்கு வருடங்களுக்கு அவர் அந்தப் பதவியில் இருக்கப் போகிறார். இதனைக் கருத்திற்கொண்டு அரசு செயற்படவேண்டும் - என்றார்.

# ஷிராணி பதவி நீக்கப்பட்டமை சட்டவிரோதமான செயற்பாடு

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம செய்யப்பட்டமை சட்டவிரோதமானது என சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமை நிறுவகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் இணைத் தலைவர் ஸ்டென்போர்ட் மோயோ விடுத்துள்ள அறிக்கையில்,

ஒரு நாட்டின் நீதித்துறையில் ஏற்படும் குழப்பங்கள் அந்த நாட்டு மக்கள் தமது அரசுமீது கொண்டுள்ள நம்பிக்கை வீழ்ச்சியடையச் செய்யும்.

இலங்கையில் பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்பட்டமை அரசியல் சாசனத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நீதிமன்றின் சுயாதீனத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

எனவே பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை மீளப்பெற்றுக்கொண்டு அவரைத் திரும்பவும் பணியில் அமர்த்துவதன் மூலம் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியும்.

இலங்கையில் பிரதம நீதியரசர் பணி நீக்கம் செய்யப்பட்டமை குறித்து தமது உயர் மட்டக் குழுவினர் விசாரணை நடத்தியுள்ளனர். இதன்போது இலங்கையில் உள்ள சட்டத்தரணிகள், நீதிவான்கள், ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள் எனப் பல்வேறு தரப்பினருடன் இணையம் மற்றும் தொலைபேசி ஊடாக சாட்சியங்கள்திரட்டப்பட்டு இலங்கை அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் பணி நீக்கம் தொடர்பில் விசாரணை செய்வதற்கு தமது குழு இலங்கை வர அனுமதி கோரியபோது அதற்கு அரசு மறுத்துவிட்டது. இதனாலேயே தொலைவில் இருந்து விசாரணை நடத்த நேரிட்டது - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பிரபல சைவ உணவகம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.

★ உதவி சமையலாளர் ★ உணவு பரிமாறுபவர்கள் ★ ரீ மேக்கர்

அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு-0779758997

## மரண அறிவித்தல்

### திருமதி பிலோமினா டோனாஸ் (ராணி)



யாழ்ப்பாணம், இலக்கம் 25, டேவிற் வீதியைப் பிறப்பிடமாகவும் இல. 14 செபஸ்ரியார் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டோனாஸ் பிலோமினா (ராணி) நேற்று (29.01.2013) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் பர்னாந்து டோனாசின் அன்பு மனைவியும் ரவீந்திரன் (வவுனியா), நதி(வவுனியா), ரமேஸ், பிளசிடா (ரஜனி-யாழ்.மாநகர சபை சுகாதார உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தாயும் கேமா, பிறேமசிறி, கீதா, விஜயகுமார் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 30.03.2013 சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

14, செபஸ்ரியார் கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
0776166844, 0776906643

தகவல்:
குடும்பத்தினர்

## வாகனம் விற்பனைக்கு



முழுமையாக வடிவமைக்கப்பட்ட பெற்றோல் 70-XXXX தொடரிலக்கமுடைய ''லைட்ஆஸ்'' வான் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்
★கசட் ★புஸ் பாக் சீற், A/C அமைக்கப்பட்டது

தொடர்பு:- 0777707465

தற்போது யாழ் நகரில்...

LLB (Hons) in

LAW

from UNIVERSITY OF WOLVERHAMPTON



edexcel

Why Choose BCAS for Law?

> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.

> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது.

> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.

> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நாடாத்துகின்றது.

> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

Macro Ads

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For further details :
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk
Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 9874747

உதயன் விளம்பரத்
0215671111

## பணிநிலை வேண்டுகை



கணனி பக்க வடிவமைப்பாளர்
(ஆண் / பெண்)
அச்சகத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

நேரச்சு இயக்குனர்
(ஆண்)
அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

அலுவலக துப்பரவுப் பணியாளர்
(பெண்)

மேற்படி பணிநிலைக்கு அனுபவம் உள்ளவர்கள் 01ஆம், 02ஆம் திகதிகளில் (01,02-04-2013) மு.ப 9.00 - பி.ப 3.00 மணி வரை நேரில் வரவும்.

பைண்டிங், ஸ்கிறீன் பிறிண்டிங் பழக விருப்பம் உள்ளவர்களும் (பெண்) நேரில் வரவும்.
குறிப்பு: எமது நிறுவனத்தில் இருந்து 3Kmக்குள் வசிப்பவர்கள் மட்டும்

கரிகணன் பிறிண்டேர்ஸ்
681, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்பிலியான தாக்குதல் துரித கதியில் விசாரணை

## விசேட பொலிஸ் குழுக்கள் நியமனம்

கொழும்பு, மார்ச் 30

பொரஸ்கமுவ, பெப்பிலியான பகுதியிலுள்ள பிரபல முஸ்லிம் வர்த்தக களஞ்சியசாலைத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணை நடவடிக்கைகளைப் பொலிஸார் முடுக்கி விட்டுள்ளனர்.

இதற்கமைய பல விசேட பொலிஸ் குழுக்களூடாக இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், சம்பவம் தொடர்பில் இது வரையில் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன தெரிவித்தார்.

தாக்குதல் சம்பவம் இடம்பெற்றபோது குறித்த இடத்தில் 500இக்கும் மேற்பட்டோர் அந்த இடத்தில் திரண்டிருந்ததால், சம்பவம் தொடர்பில் பலகோணங்களிலும், பல பகுதிகளிலும் விசாரணை நடத்த வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. அதனால் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காகப் பல குழுக்களை நியமித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கெப்பிலியான பகுதியிலுள்ள பிரபல முஸ்லிம் வர்த்தக நிலைய களஞ்சியசாலைமீது நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கல், ஏனைய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் பலர் காயமடைந்ததுடன், களஞ்சியசாலைக்கும் பெரும் பொருள்சேதம் ஏற்பட்டது.

காதல் விவகாரத்தின் காரணமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டபோதும், இந்தத் தாக்குதலுக்கும் காதல் விவகாரத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## நிறைபோதை உயிர் குடித்தது

வீதியில் சென்ற ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்தார். இவர் நிறை போதையில் சென்றதால் இந்தச் சம்பவம் நடைபெற்றதென மரண விசாரணைகளின் போது தெரிய வந்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் துன்னாலை, தாமரைக்குளப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதே இடத்தைச் சேர்ந்த வல்லி செல்வன் (வயது-54) என்பவரே உயிரிழந்துள்ளார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-8-400)

**வளர்மதியின்**
**கண்ணீர் அஞ்சலி**

எமது கழகத்துக்கு இலவசமாக காணி
அன்பளிப்புச் செய்த

**இராசரத்தினம் இராசருபன் (ராசன்)**

அவர்கள் கனடாவில் காலமானார். அன்னாரின்
இறுதிக்கிரியை கனடாவில் நடைபெற்றது.
அன்னாரின் பிரிவையிட்டு ஆழ்ந்த
துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சர்ரியன் லேன்,
கொக்குவில் மேற்கு.
(c/7235)
வளர்மதி முன்னேற்றக்கழகமும்,
சனசமூக நிலையமும்.

**இதய அஞ்சலி**



**நாகன் கந்தையா**

முன்னாள் அதிபர்-யா/கைதடி கலைவாணி
வித்தியாலயம், மக்கள் நலன்புரிக்கழக
தலைவர்(கனடா) உட்பட பல்வேறுபட்ட சமூக
சேவையாற்றி (25.03.2013) அன்று கனடாவில்
அமரத்துவம் அடைந்த நாகன் கந்தையா அவர்களின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழகம் கைதடி.

## இராமேஸ்வரம் மீனவர் இன்று ரயில் மறியல்

இராமேஸ்வரம், மார்ச் 30

கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க இந்திய மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இராமேஸ்வரம் மீனவர்கள் ரயில் மறியல் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

கடந்த 13ஆம் திகதி கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம், தங்கச்சி மடம் மீனவர்கள் 19 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து வவுனியா விளக்கமறியல் சிறையில் அடைத்துள்ளனர்.

இதனைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் இன்று ரயில் மறியலில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளனர்.

(உ-14)

**மரண அறிவித்தல்**

***சிதம்பரப்பிள்ளை சுப்பையா (கிளி)***

தொண்டமனாறு சந்நிதி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சுப்பையா (கிளி) நேற்று (29.03.2013) வெள்ளிகிழமை காலமானார்.

அன்னார் சறோஜினிதேவி (பேபி)யின் அன்புக் கணவரும் நாகவதனி (பிரான்ஸ்), ரமேஸ்வதனன் (பிரான்ஸ்), ஜரேஸ்வதனன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரி இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2013) சனிக் கிழமை காலை 9 மணியளவில் சந்நிதி கோயிலடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தொண்டமானாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்நிதி கோயிலடி,
தொண்டமனாறு
(35478)
தகவல்:
குடும்பத்தினர்.

**நினைவஞ்சலி**



முன்னாள் அதிபர், யா/ கைதடி கலைவாணி
வித்தியாலயம், சரஸ்வதி சனசமூக நிலையத்
தின் முன்னோடியும், சமூகசேவையாளரும் ஆகிய

**நாகன் கந்தையா**

(25.03.2013) கனடாவில் அமரத்துவம்
அடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

கைதடி மேற்கு, சரஸ்வதி சனசமூக நிலையம்.



## யாழ்.மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் திட்டமிட்ட சதி

யாழ்ப்பாணத்தில் முற்றுகையிடப்பட்ட விபச்சார விடுதி ஒன்றுடன் யாழ் மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை தொடர்புபடுத்தி வெளிவரும் செய்திகள் தொடர்பில் கடும் கண்டனம் தெரிவித்துள்ள அக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் இ.அங்கஜன். யாழ்.மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அசுர வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள முடியாதவர்களின் திட்டமிட்ட கீழ்த்தரமான புனைகதை இதுவெனக் குற்றம்சாட்டியுள்ளதுடன் இது தொடர்பில் உடனடி விசாரணை நடத்தி உண்மைகளை வெளிக்கொண்டு வருமாறு யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் கோரியுள்ளார்.இது தொடர்பில் அங்கஜன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அருகில் இயங்கி வந்த விபச்சார விடுதியொன்று முற்றுகையிடப்பட்டதாகவும் இதில் பலர் கைது செய்யப்பட்டதாகவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட மகளிர் அமைப்பாளரான பெண்ணே இவ்விபச்சார விடுதியின் உரிமையாளர் என்றும் சில ஊடகங்கள், இணையத்தளங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் என்ற வகையில் இதனை நான் முற்றாக நிராகரிப்பதுடன் உண்மை நிலைகளை தீர விசாரித்தறியாது செய்திகளை வெளியிட்டுள்ள ஊடகங்கள் தொடர்பிலும் கவலையடைகின்றேன். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட மகளிர் அமைப்பாளர் என்று எவருமே இதுவரை நியமிக்கப்படவில்லை. இது ஊடகங்களுக்கும் நன்கு தெரிந்திருந்த நிலையிலும் ஒரு பெண்ணின் பெயரைக் குறிப்பிட்டு எமது கட்சியுடன் தொடர்புபடுத்தி செய்திகள் வெளியிட்டுள்ளமை நிச்சயம் ஊடக தர்மத்தின் வெளிப்பாடல்ல.

யாழ்.மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அசுர வளர்ச்சியையும் அதற்கு பெருகிவரும் மக்கள் ஆதரவையும் யாழ்.மாவட்டத்தில் எம்மால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்களையும் அபிவிருத்திகளையும் பொறுக்க முடியாத அரசியல் காழ்ப்புணர்வு கொண்டவர்களின் இழி செயலே எமது கட்சி மீதான இந்த அபாண்டமான பொய்க்குற்றச்சாட்டு.

எனவே தான் நாம் இந்த விபச்சார விடுதி தொடர்பில் உடனடி விசாரணைகளை நடத்தி அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள், எமது கட்சியை தொடர்புபடுத்தி பொய்த் தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கியவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி உண்மை நிலையை அறிந்து கொள்ளுமாறும் அதற்கு எமது கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்குமெனவும் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் கேட்டுள்ளோம். அத்துடன் இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளோம்.

யாழ்.குடாநாட்டுக் கலாசாரத்தை மட்டுமன்றி தமிழரின் கலாசாரத்தை சீரழிப்பவர்கள், சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடுவோர், அதற்கு உடந்தையாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதில் நாம் மிகவும் உறுதியுடையவர்கள்.

எனவே இவ்வாறான செய்திகளை வெளியிடும் போது ஊடகங்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதுடன் அரசியல் காழ்ப்புணர்வுடன் செயற்படும் கையாலாகாதவர்களின் சதி வலையில் ஊடகங்கள் விழுந்துவிடக் கூடாதென்றும் வேண்டுகிறேன்.

யாழ்.மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இல்லாத ஒரு பதவிக்கு ஒரு பெண்ணின் பெயரைக் குறிப்பிட்டதன் மூலமும் அந்த விபசார விடுதிக்கு முன்னால் எமது மாவட்ட செயலகம் இருந்ததாகக் கூறி அதனால் அவ்விபசார விடுதியை எமது கட்சியுடன் தொடர்புபடுத்தியதன் மூலமும் எமக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முயன்றவர்களை மக்கள் நன்கு அறிவார்கள் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இவ்வாறான இழிவான பொய்ப்பிரசாரங்கள் மூலம் எமது கட்சியை மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி விடலாமென யாரும் பகற்கனவு காணக்கூடாதெனவும் கேட்டுக்கொள்கிறோம்.

***யாழ். மாவட்ட சிறிலங்கா சுதந்திர கட்சியின் பிரதான அமைப்பாளர்***
***அங்கஜன் இராமநாதன்***

(சி/7237)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வீரர்களை வெளியேற்றாவிடில் சன் ரி.வி. அலுவலகங்கள் முற்றுகை

## மாணவர் கூட்டமைப்பு எச்சரிக்கை

சென்னை, மார்ச் 30

ஹைதராபாத் ஐ.பி.எல். போட்டியில் பங்குபற்றும் இலங்கை வீரர்களை வெளியேற்றாது விட்டால் சன் தொலைக்காட்சி குழுமம் அலுவலகங்கள் முற்றுகையிடப்படும் என்று மாணவர் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

செய்தியாளர்களை நேற்று முன்தினம் சந்தித்த தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு அரசுக்கும் சன் குழுமத்துக்கும் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

முதல் கட்டமாக சன் தொலைக்காட்சியின் உரிமையாளரின் அணியான ஹைதராபாத் ஐ.பி.எல். அணியில் இருந்து இலங்கை வீரர்களை உடனடியாக நீக்க வேண்டும். எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவுக்குள் சன் குழுமம் இந்த அறிவிப்பை வெளியிட வேண்டும். அவ்வாறு இலங்கை வீரர்களை வெளியேற்றாத பட்சத்தில் மாணவர்கள் தமிழகமெங்கும் உள்ள சன் குழும அலுவலகங்களை முற்றுகையிடுவர் என்று தெரிவித்தனர்.

மேலும் மத்திய அரசுக்கும் சில கோரிக்கைகளை மாணவர்கள் முன்வைத்தனர்

★தமிழக சட்டமன்ற தீர்மானத்துக்கு அமைவாக இலங்கையுடனான ராஜதந்திர உறவுகளை இந்தியா இத்துடன் முறித்துக் கொள்ள வேண்டும்.

★இந்தியாவிலும் தமிழகத்திலும் உள்ள இலங்கைத் தூதரகத்தை உடனே மூட வேண்டும்

★இலங்கை மீது பொருளாதாரத் தடையைக் கொண்டு வர வேண்டும்.

★தமிழக முதல்வர் கூறியது போல் இந்தியா, இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும்.

★ ஐ.நாவின் மூலமாக இலங்கை மீது சர்வதேச இனப்படுகொலை விசாரணை மற்றும் பொது வாக்கெடுப்புக்கு இந்தியா தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

★ இந்திய அரசு நேரடியாகவும் மறைமுகமாகவும் இலங்கைக்கு வழங்கும் இராணுவ, காற்படை பயிற்சிகள் அனைத்தையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். இலங்கை அரசுக்கு




தொலைத் தொடர்பு ராடர் போன்ற சாதனங்களை கொடுத்து உதவுவதை நிறுத்த வேண்டும்.

★பாகிஸ்தான் உடனான விளையாட்டு உறவை முறித்தது போன்று இலங்கை உடனான விளையாட்டு உறவையும் முறித்துக் கொண்டு, இந்தியாவில் எங்கும் இலங்கை வீரர்களை விளையாட அனுமதிக்கக்கூடாது.

இவ்வாறான கோரிக்கைகளை மாணவர்கள் முன்வைத்தனர். (வ)

### பூந்தமல்லி சிறப்பு முகாமில் ஈழத் தமிழர் தற்கொலை முயற்சி

பூந்தமல்லி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பூந்தமல்லி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டவர்களுக்கு அடிப்படை தேவைகளுக்காக அரசால் ஒரு நாளைக்கு 70 ரூபா வழங்கப்பட்டு வந்தது. இந்தப் பணத்தில் தான் இவர்களின் அனைத்து தேவைகளையும் அவர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

அந்தத் தொகையில் அரைப் பங்கு அவர்களுக்கு பொருள்கள் வாங்கிக் கொடுக்கும் தலைவருக்கே செலவாகிவிடும் என்பதே உண்மை. இதனால் இந்த தொகை தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லையென்றும் இந்தத் தொகையை உயர்த்தி தரவேண்டும் என்றும் பூந்த மல்லி சிறப்பு முகாம் வாசிகள் கடந்த 9 மாதங்களாக இந்தத் தொகையை வாங்க மறுத்து புறக் கணித்து வந்தனர். (வ)

# சுய நினைவை இழந்து விட்டார் 'ஜெ'

## சுப்பிரமணிய சுவாமி அதிரடி



சென்னை, மார்ச் 30

முதல்வர் ஜெயலலிதா சுயநினைவை இழந்து விட்டார். தமிழகத்தின் முக்கிய தலைவர்கள் படிப்பறிவு இல்லாத காரணத்தால் சுயமாகச் சிந்திக்காமல் பேசுகின்றனர் என்று ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி அதிரடியாகப் பேசியுள்ளார்

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை விவகாரம் குறித்த ஜெயலலிதாவின் தற்போதைய கருத்துகள் கேட்பதற்கு மிகவும் சுவையாக இருக்கின்றன.

ஜெயலலிதா தன்னுடைய சுய உணர்வை இழந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். வெளிநாட்டு விவகாரங்களில் அவர் தலையிடக்கூடாது. அதுகுறித்து முடிவு எடுக்க வேண்டியது மத்திய அரசின் உரிமை-என்றார்.

சுப்ரமணியசுவாமி அண்மைக்காலமாக இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக அதிக அளவில் கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். (வ)

# கொமன்வெல்த் தலைவராக மஹிந்தவை அனுமதிக்க இயலாது

## மத்திய அமைச்சர் வாசன் தெரிவிப்பு

சென்னை, மார்ச் 30

இலங்கையில் கொமன்வெல்த் மாநாட்டை நடத்தக் கூடாது. அந்த மாநாட்டை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும் என்று இந்திய மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே. வாசன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே வாசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை தமிழர்கள் விவகாரத்தில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இலங்கைப் பிரச்சினையில் மாணவர்களின் உணர்வுகளை மதிக்கிறோம்.

காங்கிரஸ் கட்சியை



தனிமைப்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. பரீட்சைகள் நெருங்குவதால் மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானத்தை இந்தியா இரண்டாவது முறையாக ஆதரித்தது. அமெரிக்காவின் தீர்மானம் நீர்த்துப் போவதற்கு இந்தியா காரணம் என கூறுவது தவறு. தமிழக மக்களின் பிரதிபலிப்பை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தெரிவித்துள்ளேன்.

இலங்கையில் கொமன்வெல்த் மாநாடு நடைபெற உள்ளது. கொமன்வெல்த் தலைவராக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருப்பதை அனுமதிக்கக் கூடாது.

அந்த மாநாட்டை வேறு நாட்டில் நடத்த அனைத்து நாடு களும் இணைந்து முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்கேற்கமாட்டார்கள் என்ற ஐ.பி.எல். அறிவிப்பு வரவேற்கத் தக்கது - என்றார். (வ)

# தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை பிரதமரிடம் நேரில் வழங்குக

## திருமா எம்.பி. தமிழக முதல்வரிடம் வேண்டுகோள்

சென்னை, மார்ச் 30

சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பிலான தீர்மானத்தை தமிழக முதல்வர் பிரதமரிடம் நேரில் வழங்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழக அரசியல் கட்சிகளும், பொதுமக்களும், மாணவர்களும் ஈழ விவகாரம் தொடர்பாக வலியுறுத்திவந்த கருத்துகளை தமிழக சட்டப் பேரவையில் தீர்மானமாக முன்மொழிந்த தமிழக முதல்வருக்கும் அதனை நிறைவேற்றித்



தந்த சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அந்தத் தீர்மானத்தில் இடம்பெற்றிருக்கும் பொது வாக்கெடுப்பு, சர்வதேச விசாரணை முதலான கருத்துகள் ஏற்கனவே 'டெசோ' உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளால் முன் வைக் கப்பட்டு அதற்காகப் பல் வேறு போராட்டங்களும் நடத்தப்பட்டிருக்கின்றன. எனினும், தமிழக சட்டப் பேரவையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதன்மூலம் அவை இன்னும் அதிகமான வலிமையைப் பெற்றிருக்கின்றன. இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும், ஐ.நா. மனித உரிமை சபையில் தீர்மானம் கொண்டுவர இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் இந்திய அரசுக்கு மேலும் அழுத்தம் தருவனவாக அமைந்துள்ளன.

தகுந்த நேரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதன் மூலம் ஒட்டு மொத்தத் தமிழகத்தின் உணர்வுகளும் உலகறியச் செய்யப்பட்டுள்ளன.

சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக விமர்சனங் கள் எழுந்துள்ளன. குறிப்பாகச் சில ஆங்கில ஊட கங்களும் விமர்சித்துள்ளன. தமிழ் இனத்தில் பிறந்த காரணத்தாலேயே பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதை 'இனப் படுகொலை' என அறிவிக்கக் கூடாது என வாதிடுகிறவர்கள்தான் இவ்வாறு விமர்சிக்கின்றனர் -என்றுள்ளது. (வ)

## ஈழத் தமிழருக்கான மாணவர் பேரணி...



இலங்கைத் தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து சென்னை பாரிமுனையில் இருந்து மத்திய ரயில் நிலையத்துக்கு ஈழத்தமிழர் தன்னுரிமைக்கான மாணவர் முன்னணி அமைப்பினர் ஊர்வலமாகச் சென்றனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 வயது பிரிவு பூப்பந்தாட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் சாதனை



வலி.வடக்கு , மார்ச் 30
நீண்ட காலச் சாதனையாளர் களாக இருந்த உடுவில் மான்ஸ் வித்தியாலய 15 வயதுப் பிரிவு பூப்பந்தாட்ட அணியை வீழ்த்தி வலிகாமம் கல்வி வலயச் சம்பியனாக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி தெரிவானது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு இறுதிப் போட்டியில் உடுவில் மான்ஸ் வித்தியால அணியும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை அணியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாக காணப்பட்ட நிலையில் முதலில் இடம்பெற்ற இரண்டு ஒற்றையர் ஆட்டத்தில் இரு பாடசாலை அணிகளும் தலா ஒரு செற் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றன.

மூன்றாவதாக இடம் பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் முதல் சுற்றை உடுவில் மான்ஸ் வித்தியாலயம் வென்றபோதிலும் அடுத்த மூன்று சுற்றுக்களையும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை வென்று வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(த-86)

## சாதனையை தக்க வைத்தது உடுவில் மான்ஸ் அணி



வலி.வடக்கு , மார்ச் 30
உடுவில் மான்ஸ் வித்தியாலய 19 வயதுப் பிரிவு பூப்பந்தாட்ட அணி தனது சாதனையை தொடரும் வகையில் பண்டத்தரிப்பு பெண்கள், உயர்தரப் பாடசாலை அணியை வீழ்த்தி வலிகாமம் கல்வி வலய சம்பியனாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப்போட்டியில் உடுவில் மான்ஸ் வித்தியாலயமும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாக காணப்பட்ட போதிலும் உடுவில் மான்ஸ் வித்தியாலயாம் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப்பாடசாலை அணியைத் தோற்கடித்து வலயச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

(த-86)

## சங்கானை கோட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 30
சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான பெரு விளையாட்டுக்களில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

கிரிக்கெட்

முதலாமிடம் விக்ரோறியாக் கல்லூரி, இரண்டாமிடம் - வட்டு. இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் - வட்டு. மத்திய கல்லூரி.

கரப்பந்து

15 வயது:- முதலாமிடம் விக்ரோறியாக் கல்லூரி, இரண்டாமிடம் - அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

17 வயது :- முதலாமிடம் - விக்ரோறியாக் கல்லூரி, இரண்டாமிடம்- வட்டு மத்திய கல்லூரி, மூன்றாமிடம் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

19 வயது:- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், இரண்டாமிடம் - வட்டு. மத்திய கல்லூரி, மூன்றாமிடம் - வட்டு. இந்துக் கல்லூரி. (த-400)

## பரந்தன் இளைஞர் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 30
கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

இதில் பரந்தன் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளம் தாரகை விளையாட்டுக் கழக அணிமோதிக் கொண்டது.

பரந்தன் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 2:0 என்றபுள்ளிஅடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

(த-23)

## இளைஞர் வட்ட அணி இரு பிரிவுகளிலும் வெற்றி

யாழ்ப்பாணம் , மார்ச் 30
கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான

ஆண்,பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டியின் இறுதியாட்டத் தில் இரு பிரிவிலும் பரந்தன் இளைஞர் வட்டம் விளை யாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பிரமந்தனாறு புதிய சூரியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில்இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழகஅணி 1:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

**இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.**

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தர்மபுரம் இளம் தாரகை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில், பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி பெற்றது.

(த-23)

# யாழ். பல்கலை வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 30
யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் வீ.டி. ஜெயரெட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ்.பல்கலைக் கழகஅணி 4 இலக்குகள் வெற்றிபெற்றுள்ளது.

கடந்த செவ்வாய் கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் விளையாட்டுக்கழகஅணி 39.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 123 ஓட்டங்களை பெற்றறு.

கஜேந்திரன் 60 ஓட்டங்களையும் இளங்கோ16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்

பந்து வீச்சில் யாழ்.பல்கலைக்கழக அணி சார்பில் அச்சுதன் 9.3 பந்து பரிமாற்றங்கள் பந்துவீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், விதுபாலா 10 பரிமாற்றங்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் ஜெயறூபன் 9 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 32.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

தகிந்தன் 56 ஓட்டங்களையும் தனஞ்சேயன் 22 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்

பந்துவீச்சில் நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் நிசாந்தன் 10 பந்து பரிமாற்றங்கள் பந்துவீசி 26ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும் அருண் 8 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 21ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

(த-23)

# தாச்சி இறுதிப் போட்டி

கைதடி,மார்ச் 30
கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுத் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை மின்னொளியில் இரவு 8 மணியளவில் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் சனசமூக நிலைய தலைவர் செ.மயூரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.



கைதடி கள்ளிநகர் தூர்க்கா வி.க.



கைதடி குமாரநகர் வி.க.

இறுதியாட்டத்தில் கைதடி குமாரநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி கள்ளிநகர், தூர்க்கா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இந்த இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுரேஸ் பிரேமச்சந்திரன் கலந்துகொள்ளவுள்ளார்.

(த-23-288)

## விளைபூமி, தர்மபுரம் இளம் தாரகை இறுதி ஆட்டத்தில் மோதும்

கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் விளைபூமி விளை [illegible] தர்மபுரம் இளம்தாரகை ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

முதலாவதாக இடம்பெற்ற ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் முரசுமோட்டை முரசொலி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விளைபூமி விளையாட்டுக் கழக அணிமோதிக் கொண்டது.

இதில் விளைபூமி விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் தர்மபுரம் இளம்தாரகை விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்மடு விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது.

இதில் தர்மபுரம் இளம் தாரகை விளையாட்டுக் கழகஅணி 2:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.(த-23)

## உதைபந்தாட்டம்

தென்மராட்சி,மார்ச் 30
தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்றும் நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

போட்டிப் பட்டியல் பிரகாரம் போட்டிகள் நடத்தப்படவுள்ளதால் அனைத்து அணிகளும் குறித்த நேரத்துக்கு முன்னர் மைதானத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## கிரிக்கெட் போட்டி

திருகோணமலை,மார்ச் 30
திருகோணமலை வேல்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் மின்னொளியில் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

அணிக்கு ஆறுபந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்த கிரிக்கட் போட்டி ஏப்ரல் மாதம் 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கு முதலாவது பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் இரண்டாவது பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என போட்டி ஏற்பட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (த-40)

## அம்பிகை வீ.க. வெற்றி


கண்டவளை பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் கண்ணகிநகர் அம்பிகை விளையாட்டுக் கழகஅணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

கண்ணகிநகா அம்பிகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கல்மடு விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கண்ணகிநகர் அம்பிகை விளையாட்டுக் கழக அணி8:5 என்றபுள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஸ்டோரியஸுக்கு அனுமதி




ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றியுள்ள தென்னாபிரிக்காவின் தடகள வீரர் ஆஸ்கார் பிஸ்டோரியஸ், தகுதி பெற்றால் இந்த ஆண்டு நடைபெறவுள்ள உலகப் போட்டிகளில் பங்கு பெறலாம் என்று சர்வதேச தடகளச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அவருக்குப் பிணை வழங்கியிருந்த தென்னாபிரிக்க நீதிமன்றம் ஒன்று, அந்தப் பிணையில் இருந்த சில கட்டுப்பாடுகளை அகற்றி, அவர் வெளிநாடுகளுக்குச் செல்லலாம் என்று உத்தரவிட்ட நிலையில், சர்வதேச தடகளச் சம்மேளனத்தின் அறிவிப்பு வந்துள்ளது.

தனது காதலி ரீவா ஸ்டீன்கேப்பை கடந்த மாதம் தனது வீட்டில் அவர் கொலை செய்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால், தனது காதலியை திருடன் என்று கருதித் தவறுதலாக அந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக பிஸ்டோரியஸ் கூறுகிறார். இது திட்டமிட்ட கொலை என்று பொலிஸார் கூறுகின்றனர். (த)

# கிரிக்கெட் சபையின் தலைவராக ஜெயந்த



இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவராக ஜெயந்த தர்மதாச பிரேரிக்கப்பட்டுள்ளார். இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகசபை ஜெயந்த தர்மதாசவைப் பிரேரித்துள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் சபைக்கான தலைவருக்கான தேர்தலில் எஞ்சியிருந்த ஒரேயொருவரான ஜெயந்த தர்மதாசவையே இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாக சபை தெரிவு செய்துள்ளது.

இந்தத் தேர்தலுக்காக திலங்க சுமதிபால, தற்போதைய தலைவர் உபாலி தர்மதாச, சுமித் பெரேரா ஆகியோரும் விண்ணப்பித்திருந்த போதிலும், அவர்கள் மூவரினதும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. தற்போதைய தலைவரான உபாலி தர்மதாசவின் சகோதரரான இவர் இலங்கைக் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவரென்பது குறிப்பிடத்தக்கது. (த)

# புனே வாரியர்ஸுக்கு தலைவராக மத்தியூஸ்



புனே வாரியர்ஸ் அணித் தலைவராக இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புனே வாரியர்ஸ் தலைவராக நியமிக்கப்பட்டமை குறித்து மத்தியூஸ் கூறுகையில்,

'புனே வாரியர்ஸ் அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டதை நான் பெருமையாக நினைக்கிறேன். என் மீது அணியின் உரிமையாளர் மற்றும் நிர்வாகம் வைத்துள்ள நம்பிக்கைக்கு நன்றியுடையவனாக இருந்து இந்த அணியை வழிநடத்துவேன்- என்றார்.

மத்தியூஸின் நியமனம் தொடர்பில் சகாரா அட்வென்சர் ஸ்போர்ட்ஸ் லிட் நிர்வாக இயக்குநர் கூறுகையில்,

மத்தியூஸ் தலைவராக நியமிக்கப்பட்டமை அணியிலுள்ள மூத்த வீரர்கள் மற்றும் நிர்வாகத்தின் ஒருமித்த கருத்தாகும்.

அணியில் உள்ள வெளிநாடு மற்றும் உள்ளூர் வீரர்களின் கருத்தின்படி அவரைத் தேர்வு செய்தோம்.

அவரது தலைமைப்பொறுப்பில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. இவரது தேர்வு அனைத்து வீரர்களுக்கும் மகிழ்ச்சியளிக்கிறது. நாங்கள் சரியாக வெளிநாடு மற்றும் உள்ளூர் வீரர்களின் திறமைகளைக் கொண்டு போட்டியில் வெற்றி பெறக் கடுமையாக முயற்சிப்போம்'' என்றார். (த)

# வங்கப் புலிகளிடம் வீழ்ந்த சிங்கங்கள்

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்துள்ளது. இதனடிப்படையில் 3 போட்டிகள் கொண்ட இத்தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இப்போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 302 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது விக்கெட்டுக்காக 116 ஓட்டங்களைப் பகிர்ந்த இலங்கை அணி, ஒரு கட்டத்தில் ஒரு விக்கெட்டை இழந்து 203 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதிலும், சங்ககாரவின் விக்கெட்டைத் தொடர்ந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட 6 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியிருந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக திலகரட்ண டில்ஷான் 128 பந்துகளில் 125 ஓட்டங்களையும், குஷால் ஜனித் பெரேரா 66 பந்துகளில் 56 ஓட்டங்களையும் குமார் சங்ககார 49 பந்துகளில் 48 ஓட்டங்களையும் லஹிரு திரிமன்ன 15 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக அப்துர் ரஷாக் 5 விக்கெட்டுக்களையும் ஷகாதத் ஹொசைன், ஷியவூர் ரஹ்மான், சொஹாக் கஷி, மகமதுல்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

303 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 13.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டிருந்தது.

போட்டி மீண்டும் ஆரம்பிக்கும்போது பங்களாதேஷ் அணிக்கு 27 ஓவர்களில் 183 ஓட்டங்கள் என்ற இலக்கு வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட இலக்கை அவ்வணி 26 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து அடைந்தது,

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக அனாமுல் ஹக் 46 பந்துகளில் 40 ஓட்டங்களையும் நசீர் ஹொசைன் 27 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் மொஹமட் அஷ்ரபுல் 38 பந்துகளில் 29 ஓட்டங்களையும் ஜக்ருல் இஸ்லாம் 18 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக லசித் மலிங்க, அஞ்சலோ மத்தியூஸ், சச்சித்திர சேனநாயக்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாகவும் தொடர் நாயகனாகவும் இலங்கையின் திலகரட்ண டில்ஷான் தெரிவானார். (த)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## BIT-University of Colombo

மேற்படி கற்கைநெறிக்கான 2ம் 4ம் 6ம் அரையாண்டுக்கான விரிவுரைகள் யாவும் இம் மாதம் 31ம் திகதி யாழ் MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் ஆரம்பமாகின்றது. புதிய கல்வியாண்டிற்கான பதிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. க.பொ.த (சா.த) சித்தியடைந்த எவரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மேற்படி பட்டக்கற்கை நெறியை பயில முடியும். 1ம் ஆண்டு முடிவில் கொழும்பு பல்கலைக்கழகத்தால் தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா எனும் சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக விபரங்களை இல.324 பலாலி வீதி பரமேஸ்வராச்சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என அனைத்திலும் ... Excellent Teachers' Panel & Individual Attention

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

கீழ்வரும் பயிற்சிகள், கொழும்பு ஆசிரியர்களினால் சிறப்பாகக் கற்பிக்கப்படும்.

Diploma In Bridal, Hair & Beauty Culture (Duration : 3 Months)

*Diploma In Bridal dressing (பயிற்சிக்கட்டணம் : Rs. 18,000/-)

அனைத்து விதமான மணப்பெண் அலங்காரங்களுடன் பல்வேறு அழகு சிகிச்சைகள் பயிற்றப்படும்

*Diploma In Latest & Herbal Facials (பயிற்சிக்கட்டணம்: Rs. 10,000/=)

*Diploma In Hair treatments & Cuttings (பயிற்சிக்கட்டணம்:Rs. 17,000/=)

* தவணை முறையில் கட்டணங்களை செலுத்தலாம்

* Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்

* இலவச பொருள்களுடன் முழுமையான செய்முறைகள் காண்பிக்கப்படும்

Handworks (கைவினை) வகுப்புகள்

*Bombay Jewellery(Rs. 5000/-),Costume Jewellery(Rs.5000/-), Paper tole (Rs.4000/-), paper quilling (Rs.5000/=),Kasthuri works (Rs.3000/=),Ribbon works (Rs.6000/=), Saree works (Rs.6000/=) Pot Painting (Rs.5000/=) Prick point card Making (Rs.3000/)

* சான்றிதழ்கள் வழங்கப்படும்.

* முழுமையான செய்முறைகளுடன் பொருள்கள் இலவசம்.

சுயதொழில் செய்ய விரும்புபவர்களுக்கு / வெளிநாடு செல்வோருக்கு/ இல்லத்தரசிகளுக்கு இப்பயிற்சிகள் உகந்தவை.

மேலதிக விவரங்களுக்கு :

Jaffna Branch : No.15, Sirambiyady Lane, Off Stanley Road, Jaffna.

Tel : 021 222 4550, 077 5377313, 0715540156, 0777 178332



## தேவை

உதயன் விருந்தினர் விடுதியின் விரிவாக்கத்துக்கு

"விடுதிப் பராமரிப்பாளர்"

இருவர் தேவைப்படுகிறார்கள்.

தகுதியானவர்கள் தகுதிச் சான்றிதழ்களுடன் பின்வரும் முகவரிக்கு எதிர்வரும் 1ஆம் திகதி, 2ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் 5 மணிவரை நேரில் வரவும்.

"உதயன் விருந்தினர் விடுதி"

12, சிவகுருநாதர் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 567 7605/ 0710456456



## மணல் மண் வேண்டுமா?

★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?

★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?

★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.

4½ டிரக்டர் 20,500/-

தொடர்பு:- ராம் 072 63 78 546 (23-34166)


# 'கிராமத்துக்கு ஒரு வீடு' இன்று அடிக்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 30

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 'இளைஞர் கரங்களால் கிராமத்துக்கு ஒரு வீடு'' என்ற செயற்றிட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்படவுள்ள வீட்டிற்கான அடிக்கல் நடும் விழா இன்று முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெற உள்ளது.

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி வினோதினி ஸ்ரீமேனனும், சிறப்பு விருந்தினர்களாக கிராம சேவையாளர் திருமதி சிவபுண்ணியம், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி லக்ஷன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஒ-400)

## மரண அறிவித்தல்

### அண்ணாமலை பற்குணசிங்கம்

வளலாய் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஜின்னா லேன், மானிப்பாய் றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாமலை பற்குணசிங்கம் (பாதுகாப்பு உத்தியோகத்தர் (G.T.Z) அவர்கள் நேற்று (29.03.2013) அகாலமரணமானார்.

அன்னார் கௌரிமலர் (கோப்பாய் அரசினர் வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும் அண்ணாமலை- தங்கம்மா தம்பதியரின் மகனும் சீவரத்தினம் -தேசரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜின்னா லேன்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (2777)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### விஸ்வலிங்கம் சத்தியநாதன் (கொத்தலாவல)



காரைநகர் முல்லைப் பிலவைப்பிறப்பிடமாகவும் பாலாவோடை களபூமியை வசிப்பிடமாகவும் லண்டனில் வசித்தவருமான விஸ்வலிங்கம் சத்தியநாதன் நேற்று (29.03.2013) வெள்ளிக் கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - பார்வதி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ராசம்மா தம்பதியரின் மருமகனும் சறோஜினி தேவியின் அன்புக் கணவரும் சசிகலா,ஜெயந்தினி, ஐங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மபாலனின் மாமனும் விதுசாவின் அன்புப் பேரனும் ஆவார்.அன்னார் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்)

(35475)

### கார்த்திகேசு கணபதிப்பிள்ளை (சூடாமணி)



(புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி மத்திய குழு உறுப்பினரும் லிமிட்டட் ஊழியரும் தொழிற்சங்கத் தலைவரும்)

காங்கேசன்துறை தையிட்டியை பிறப்பிடமாகவும், வீமன்காமம் வடக்கை வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது வவுனியாவை வதிவிடமாகவும் கொண்டவருமான கார்த்திகேசு கணபதிப்பிள்ளை (சூடாமணி) நேற்று (29.03.2013) வெள்ளிக்கிழமை காலை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு -செல்லம் தம்பதியரின் அருமைப் புத்திரரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், செல்லத்துரை, இரத்தினாவதி, காலஞ்சென்ற டாக்டர் இராஜதுரை, தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரரும், வையந்திமாலா (ஆசிரியர், கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம்) காலஞ்சென்ற ஜெயகுணா மற்றும் ஜெயதாசன், மேஜெயா (மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர், வவுனியா), ஜெயரத்தினா (ஆசிரியர், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தரராஜ் (ஆசிரியர், பாவற்குளம் மகாவித்தியாலயம்), ஜெயரஞ்சினி (ஆசிரியர், சிவபுரம் அ.த.க பாடசாலை), தமயந்தி (இளவேனில் பாலர் பாடசாலை) ஆகியோரின் மாமனும், ஜெனனி, துவாரகா, யதுசன், திசாலினி, கனிமதி, மகிழ்மதி, சாதுரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 63/3, அண்ணா வீதி, தோணிக்கல், வவுனியா இல்லத்தில் 01.04.2013 திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு பி.ப.2.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P-0242221210,
0777585908, 0777589722

(சி/7233)

தகவல்:
குடும்பத்தினர்.


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-

advt@uthayan.com

0215671111



## கட்டடம் தேவை

சாவகச்சேரி, யாழ். நகரை அண்டிய பகுதிகளில் களஞ்சியப்படுத்துவதற்கு ஏற்ற கட்டடம் அல்லது வீடு தேவை.

தொடர்புகளுக்கு: 0716792692



## வேலையாள் தேவை

சுன்னாகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் Communication/ browsing centre க்கு பணியாளர் ஒருவர் உடனடியாகத் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். Photo copy Lamination முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை. பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.தொடர்பு:- 0785830185



வெளிநாட்டு உயர்கல்வி, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு IELTS ஓர் தடையா?

## IELTS

### இலவச கருத்தரங்கு

திகதி - 31/03/2013 (SUNDAY)

நேரம் - 10.30 a.m.

இடம் - DMI COMPUTER EDUCATION - JAFFNA

பங்குபற்ற விரும்புவோர் உங்கள் பெயரை 0777 173517 இலக்கத்திற்கு SMS செய்யவும்.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம்

No.113. கன்னாதிட்டி வீதி,

(சயன்ஸ் ஹோல், அருகாமை)Tel.: 021-222 4403



## காணி விற்பனை

விளான் சந்தியிலிருந்து கீரிமலை றோட்டில் 100M தூரத்தில் மணி கடைக்கு முன்னால் உள்ள காணி விற்பனைக்குண்டு. இந்தக் காணி 3 பரப்பு 3 குளி (காணி உள்ள இடம் விளான் சந்தி கீரிமலை)

மேலதிக விவரங்களுக்கு:-

செ.றொபின்சன்

மதுசியா களஞ்சியம்

கீரிமலை வீதி, பெரியவிளான். 0775758601

காணி உரிமையாளர்: நி.நல்லையா (பணக்கார நல்லையா)

தாமரைக்குளம், துன்னாலை வடக்கு, கரவெட்டி.

தொடர்பு:- 0773223171



யாழ். நகரில் கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி புதிய பிரிவுகள் ஆரம்பம்

Mobile Phone Repairing Course K.Ganesh

Just 4 days Course ஆரம்பம் 02.04.2013

வடமாகாணத்தில் உங்கள் பிரதேசத்தில் நீங்களும் ஓர் சுயதொழிலொன்றை மேற்கொள்ள அரியசந்தர்ப்பம். கல்வி அறிவு, ஆரம்ப அறிவு, ஆங்கில அறிவு எதுவும் அவசியமில்லை. பகுதி நேரமாகவும் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். வயது எல்லை கிடையாது. மாதம் ஒரு இலட்சத்துக்கு மேல் சம்பாதிக்க முடியும். முதல் நாளில் இருந்தே Phone Repairing பயிற்றுவிப்பதோடு நீங்கள் கொண்டுவரும் பழுதடைந்த Phone இரண்டு இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

ISSEEES NALLUR CAMPUS

762, POINT PEDRO ROAD, NALLUR, JAFFNA.

0212224728, 0777444225



## BIT கொழும்பு பல்கலைக்கழகம்

இளமானி தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு [BIT]

FREE Pendrives

2nd Semester

கற்கைநெறிக்கான புதிய பிரிவுகள் 31. 03. 2013 அன்று காலை 8:30 மணிக்கு ஆரம்பமாகும்.

ESOFT METRO CAMPUS

NO. 137, K.K.S ROAD, JAFFNA

TELE : 021 222 4142 HOTLINE : 077 309 9308

Shaping Lives, Creating Futures.



மென்பனி தூவும்

கனடா தேசத்துத் தெருக்களில்

மாலை நேர உலாவர விரும்பும்

உங்கள் கனவு நனவாக

உங்கள் திசைகாட்டியின்

கனடா விசா ஆலோசனைப் பிரிவு

என்றென்றும் தோள் கொடுக்கும்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் வல்லிபுரம்



தென்னமரவடியைப் பிறப்பிடமாகவும் முள்ளியவளை, பொன்நகர், முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வல்லிபுரம் நேற்று (29.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 30.03.2013 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணிக்கு பொன்நகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி லேன்,
நீர்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மருமகன் பரராஜசிங்கம் நகுலன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.